THE MADURA TAMIL SANGAM

# காலத்தேர்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

டியூகோ பப்ளிஷிங் ஹவுஸ்

# காலத்தேர்

[இனிய காவிய நாடகம்]

சுவாமி சுத்தானந்த பாரதியார்

இயற்றியது

டியூகோ பப்ளிஷிங் ஹவுஸ்

23/A, அருணாசல ஆச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5

உரிமைப் பதிவு] 1951 [விலை ரூ. 2.40.

# பதிப்புரை

இந்த இனிய, அரிய கலை மலரைத் தமிழ்த் தாயின் திருவடியில் வைத்து வணங்குகிறோம். காலத்தேர் என்னும் இக்காவிய நாடகம் மனித வாழ்க்கையிலுள்ள இரு விகாரங்களையும், வாழ்வின் நோக்கத்தையும் அழகாகக் காட்டுகிறது. இக்காவிய நாடகம் மிக எளிய நடையில் எழுதப் பெற்றுள்ளது. சிறு சிறு வாக்கியங்களில், இந்நாடகம் படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்றவாறு ஆக்கப்பெற்றுள்ளது. உலகில் புகழ்பெற்ற நாடகப் புலவர்களெல்லாம் தம் அரிய நாடகங்களைக் காவியமாகவே புனைந்திருக்கிறார்கள். நமது தமிழில் அப்படிப்பட்ட காவிய நாடகங்கள் பல வெளிவரவேண்டுமென்பது எமது விருப்பம். சுயமாக எழுதிய இத்தகைய நூல்களே தமிழுக்கு ஆக்கமளிக்கும். தமிழர் தமிழ்ச்சுவை ஓங்கிவருகிறது. தமிழர் வசனம்போலவே காவிய நாடகத்தையும் ரசிக்கும் காலத்தை எதிர்பார்க்கிறோம். இந்நாடகம் மேடைகளில் வெற்றிபெற நடிக்கப் பெற்றது.

சுவாமி சுத்தானந்த பாரதியார் இதுபோலவே இன்னும் சில காவிய நாடகங்கள் எழுதியிருக்கிறார்கள். அவருடைய வசன நாடகங்களும் வசன காவியங்களாகவே யிருக்கின்றன.

இதனைத் தமிழ் உலகம் ஏற்று எங்களை இத்துறையில் மேன்மேலும் ஊக்குவிக்கும் என நம்புகிறோம். இந் நூலின் உரிமையெல்லாம் ஆசிரியருக்கே.

பதிப்பகத்தார்.

மதுரைத் தமிழ்ச் சங்கம் THE MADURA TAMIL SANGAM

# காலத்தேர்

## காவிய நாடகம்

தமிழ் வளம்பெற வளரவேண்டும். ஆங்கிலத்திற்கு நிகராக அஃது உலகெல்லாம் பரவவேண்டும். தமிழில் பல முதல் நூல்கள் வரவேண்டும். அதை மற்ற நாட்டார் மொழி பெயர்த்து வியக்கவேண்டும். இப்போது வியாஸர், வான்மீகி, காளிதாஸன் முதலிய ஆரியப் புலவரையே உலகம் அறியும். அவர் நூல்கள் ஐரோப்பிய மொழிகளில் வழங்குகின்றன. கீதையும், சாகுந்தலமும் படித்து வியக்காதவர் இல்லை. நமது நாட்டின் முன்மொழியும் தொன்மொழியுமான தமிழுக்கு இனி உலகில் ஓர் இடம் கிடைக்க வேண்டும். இப்போது வடமொழியால் நமது நாட்டை யறிந்த உலகம், இனித் தென்மொழியால் அறிந்து தமிழையும் தேவ பாஷையாகப் போற்றவேண்டும். நமது தமிழ் கலைச்செங்கோல் பிடித்துத் தலைநிமிர்ந்து நடக்கும் காலம் வரவேண்டும், வரும்....அதற்கேற்ற குறிகள் காண்கின்றன. ஒரு மொழி வளர்ச்சிபெற வேண்டுமானால், அதில் சிறந்த காவியங்கள் உண்டாக வேண்டும். மொழி பெயர்ப்பு நூல்கள், கதைகள், நாவல்கள், அறிவு நூல்கள் எல்லாம் வேண்டியனவே ; இவற்றுடன் நிற்கக்கூடாது. நமது தமிழுக்கே சொந்தமான அரிய காவியங்களையும், நாடகங்களையும், நாவல்களையும் எழுதிக் குவிக்க வேண்டும். ஆங்கிலம் சாகா வரம் பெற்றது எதனால் ? ஷேக்ஸ்பியர், மில்தன், ஷெல்லி, பைரன் போன்ற புலவர் மணிகளால் அன்றோ ? பிரெஞ்சு மொழி உலகில் பலர் மெச்ச

விளங்குவது எதனால்? ரஸீன், கொர்நெய், மோலியர், விக்தர் ஹ்யூகோ போன்ற சிறந்த நாடகப் புலவர்களால். ஜெர்மன் மொழி ஷில்லர், கெத்தே போன்ற நாடகப் புலவராலேயே புகழ்பெற்றது. வடமொழியை உலகம் அறிந்தது முதன்மையாகக் காளிதாஸ நாடகத்தாலேதான். மேற்சொன்ன புலவர்களெல்லாரும் நாடகக்கலையில் சிறந்தவர்கள். அவர்கள் தம் நாடகங்களைக் காவியங்களாகவே அமைத்தனர். ஆங்கில நாடகங்கள் மோனையில்லாக் கவியால் ஆனவை. ஆனால், பிரெஞ்சு ஜெர்மன் நாடகங்கள் எதுகை மோனையுடன் அமைந்திருக்கின்றன. சுமார் பதினைந்து வயதுப் பையன் அந்த நாடகங்களை நன்றாக அறிந்துகொள்ளுகிறான். காவிய நாடகங்களை மேனாட்டார் மிகவும் போற்றுகின்றனர். வடமொழிப் புலவரும் "காவ்யேஷு நாடகம் ரம்யம்" (காவியங்களில் நாடகக் காவியமே இனியது) என்றனர்.

தமிழர்களே, நமது தாய்மொழியிலும் அப்படிப்பட்ட நாடகங்களைக் காண்போமா....? "ஆமாம், வசனமே படிப்பவர் இல்லையாம்; இவர் காவியத்திற்குப் போய் விட்டார்.....! இதெல்லாம் இந்தக் காலத்தில் யாருக்கு விளங்கும்?" என்னுதீர்கள்! நமது தமிழ்மொழி கவிச் சுவை பெற்றது. நாம் கம்பனையும் வள்ளுவரையும் இளங்கோவையும் பெற்ற நாட்டினர். பரம்பரையாக நம் தமிழர் கவிதையைப் போற்றி வந்தனர். கிராமக் காத்தான் கூட அல்லியரசாணி மாலையும், தேசிங்குராசன் கதையும், நல்லதங்காள் சரித்திரமும் கவிமாலையாகப் படிப்பதைக் கேட்டிருப்பீர்கள். நம் வீடுகளில் நடக்கும் ஒவ்வொரு சடங்கிற்கும் பாடல்கள் உள்ளன. நம் பெண்கள் இயற்கையிலேயே கவிச்சுவை பெற்றவர்கள்.

சமீபத்திற்கூட நம் சமஸ்தானங்களில் காவியத்திலேயே பேச எழுதவல்ல புலவர் பலர் இருந்தனர். நமது பரம்பரையான கவிச்செல்வத்தை நாம் இழப்போமா? நமது கவிச்செல்வம் கம்பன் இளங்கோவுடனே நின்று விடுவதா? தமிழிலும் ஷேக்ஸ்பியர்களும காளிதாஸர்களும் தோன்றவேண்டும். தமிழர்கள் கொஞ்சம் ஊன்றி, ஆழ்ந்து கற்றால், காவியங்கள் மிகவும் எளிதாகும். காவிய நாடகங்கள் நடிப்பதும் எளிதாகும், இயல்பாகும்.

தமிழில் அரிய காவிய நாடகங்கள் உண்டாகவேண்டும்....அவற்றை நம்மவர் மேடையில் நடிக்கப் பார்த்து உலகம் தமிழ்க்கலையைப் போற்றவேண்டும்....இந்தப் பெரிய ஆர்வத்தால் உந்தப்பெற்றே **காலத்தேரை** எழுதினேன். எழுதும்போதே நடித்துப் பார்த்தேன். ஜனங்களுக்கு எளிதாயிருக்கும் வார்த்தைகளாலேயே நாடகத்தைக் கவனமாக அமைத்திருக்கிறேன். இதிலுள்ள அகவல்கள் சிறு சிறு வாக்கியங்களே. அவற்றை வசனம் போலவே படிக்கலாம். தமிழன்பர் இந்நாடகத்தை ஆதரித்தால், தமிழ்த் தாயின் திருவடியில் இன்னும் சில நாடக மலர்களை அர்ச்சிக்கலாம்.

## நாடகக் கருத்து

உலகமெல்லாம் காலத்தேர்தான். அதில் எல்லா உயிர்களும் ஏறிச் செல்கின்றன. அஃது எத்தனையோ இடர்களைத் தாண்டிச் செல்கிறது. எப்போது மனிதன் அருளுணர்ச்சி பெற்றுத் தெய்வத் தன்மை யடைகிறானோ, அப்போதே இந்தக் காலத்தேரும் நிலைக்கு வந்து அமைதி சேரும்.

இந்நாடகத்தில் தலைவனும், தலைவியும் காதலுணர்வுடன் காலத்தேரில் ஏறுகிறார்கள். அவர்கள் வழியில்

எத்தனையோ இடர்கள் வருகின்றன. உயிருக்கே ஆபத்து வருகிறது. இன்பம், துன்பம், நட்பு, பகை, அன்பு, கொடுமை, ஆக்கம், அழிவு, நாத்திகம், ஆத்திகம், காமம், கொலை, ஞானம், மோனம், யோகம், போகம், சுயநலம், பொதுநலம் முதலிய பலவேறு குணவினைகளோடு தேர் செல்லுகிறது. முடிவில் கடவுளைக் கலந்து பொதுநலம் புரியும் யோக நிலையத்தில் வந்து தேர் நிற்கிறது. அங்கே மானிடக் காதலர் தெய்வக் காதலராகி, யோகமும் போகமும் போல வாழ்கின்றனர். இக்கதையில் வரும் ஒவ்வொரு பாத்திரமும் வாழ்க்கையின் ஒரு தத்துவத்தைக் குறிப்பதாகும். வாழ்க்கை தேவாஸுர யுத்தமே; இன்ப துன்பக் காடே. இதில் நல்லதும் தீதும் போராடுகின்றன. இந்தப் போராட்டத்தில் புகுந்து, அதை வெல்லும் தீரர் சிலர். சிலர் இந்த போராட்டத்திற்கே இரையாகிக் கட்டும், கவலையும் சுமந்து உயிர் விடுகின்றனர். சில மகான்களே இந்தக் குணதொந்தப் போர்களைச் சுத்தான்ம நிலையில் சாட்சியாகப் பார்த்திருந்து கலங்காதிருப்பர். மனிதருள் விலங்கு, மனித மனிதன், மனித தேவன் என மூன்று நிலைகள் உள்ளன. மூன்று வகை மாந்தரையும் இந்த நாடகம் சித்தரிக்கிறது. பொன்னு, சுந்தரி, அண்ணுவி, முல்லை ஆகிய நால்வரும் காமக்ரோத லோபமோகாதி அசுரர் கையில் சிக்கி, அட்டூழியம் செய்கின்றனர். அவர் வினையே அவர்களைக் கொல்லுகிறது....கண்ணன், வள்ளி, அப்துல்லா, மில்லர் முதலியோர் சுயநலமற்றுப் பரோபகாரத்தால் வாழ்வை உயர்த்தி மகிழ்கிறார்கள். இவர்கள் அன்பினால் வாழ்விற்கு ஆறுதல் உண்டாகிறது. வேதாந்தப் பாட்டி, சிவம், முருகனுர் மூவரும் வாழ்வின் ஆழமும், அகலமும் பார்த்து மனம் பழுத்தவர். அவர்கள் உலகம் இவ்வளவு

தான் என்றறிந்து சித்தத்தைச் சிவனிடம் வைத்து அவனையே அன்புசெய்து, அவனருளால் குரு தரிசனம் பெறுகிறார்கள். அவர்களுடைய அன்பிற்குரிய ஜோதியும் மங்களமும் உள்ளத்தில் கடவுளைக் கொண்டு உலக வாழ்வில் இயங்குகிறார்கள்; பல இடர்களை அனுபவிக்கிறார்கள். ஜோதி முதலில் உலகையும் பெண்டிரையும் வெறுத்து, அரசியல் வாழ்விற் குதிக்கிறான்....அதில் அமைதி காணமல் பொதுநலம் புரிகிறான். எழுத்தாலும் ஏட்டாலும் பேச்சாலும் சாந்தம் வரவில்லை. மங்களத்திற்கு வந்த விபத்துக்களைக் கேட்டு, அவனுக்கு வாழ்விலேயே வெறுப்புத் தட்டுகிறது. மனம் எப்படியெப்படியோ சுழல்கிறது. அமைதிக்காக அவன் குருவைத் தேடுகிறான். யோக முனிவர் வருகிறார். அவரால் சித்தசுத்தியும் ஞான சித்தியும் பெற்று அவன் வாழ்வையே சுத்த யோகமாக்குகிறான். மங்களமும் அவனுடன் வந்து சேர்கிறாள். தீமைகள் அழிகின்றன....தெய்வத் தன்மைகள் வாழ்கின்றன.... சுருக்கமாகக் காலத்தேர் நாடகக் கதையைக் கேளுங்கள்.

சுத்தானந்த பாரதி.

# கதைச் சுருக்கம்

**சிவம்** மதுரையில் ஒரு செல்வ வக்கீல், தெய்வ பக்தர், பரம சாது. அவர் தாயார் பழுத்த வேதாந்தக் கிழவி. பல அனுபவங்களால் மனத்துறவு பூண்டு, ஒட்டாமல் வீட்டில் இருந்தவள். சிவத்தின் முதல் தாரம் ஒரு பெண் மகவை யீன்று இறந்தாள். அப் பெண்மகவே கதாநாயகி **மங்களம்**. அவள் கல்வியும், ஒழுக்கமும், பாட்டும், பணியும், வீரத் துணிவும், கற்பும், கடவுளன்பும் சிறந்தவள். அவளைச் செல்வமாக வளர்த்துவரும் நாளில், **சுந்தரி** என்னும் ஒரு மினுக்கி, சிவத்தின் மனத்தை வலைபோட்டிழுத்தாள்; அவரது செல்வத்திற்காகவே காதல் நடித்தாள். சிவம் அவளை மணம் புரிந்துகொண்டார். அன்று முதல் அவர் வாழ்க்கை கவலைக் காடானது. தமது கவலையைப் போக்க, சிவமும் மங்களமும் பாட்டியும் அடிக்கடி திருப்பரங் குன்றம் முருகனைத் தொழுது வருவதுண்டு.

முருகன் சந்நிதிமுன்பே இந்த நாடகம் தொடங்கு கிறது. சந்நிதானத்தில் **முருகனார்**, அவர் புதல்வன் **ஜோதி**, பெண் **வள்ளி**, நண்பன் **கண்ணன்** முதலியோர் இனிமை யாகப் பாடிக் கொண்டிருக்கின்றனர். ஜோதி மங்களம் இருவரும் கண்டதும் காதல் கொள்கின்றனர். அந்தக் காதல் உயிர்க் காதலாகிறது. அதே மாதிரி கண்ணனும் வள்ளியும் காதலிக்கின்றனர். காதலர் கண்ணாலும், நடை யாலும் தமது காதலை நன்றாக விளக்குகின்றனர்.

* * *

சுந்தரி மகா மாயக்காரி, படித்தவள், கட்டற்ற காம ராக்ஷஸி, யாரையும் மதிக்காது நடக்கும் பிடாரி. அவள்

பணம் வேண்டும்போதே கணவனைக் கொஞ்சிக் குலாவுவாள். பிறகு அவனுடன் சண்டை போடுவாள். வயது சென்ற கிழவனை அவள் வெறுத்தாள். தன் உறவினனாகிய பொன்னு என்பவனைக் காதலித்தாள். பொன்னு பெரிய நாத்திகன், அயோக்கியன். கலையின் பெயரால் காமவெறி பிடித்தலைபவன். அவனுக்கு அண்ணாவி என்ற ஒரு கில்லாடி சிநேகமானான். அவன் பொன்னுவை முல்லை யென்னும் நடன வேசையின் வலையில் பலமாகச் சிக்கவைக்கிறான். தனது செல்வம், படிப்பு, எல்லாம் இழந்து, பொன்னு முல்லைக் கிடங்கில் விழுகிறான்; சுந்தரியின் ஆசையைப் பூர்த்தி பண்ணி, அவளிடம் ஏராளமான பொருளைப் பறித்து வேசைக்குத் தருகிறான். முடிவில், சுந்தரி முதிய நாயகனை மருந்து வைத்துக் கொன்று அவன் சொத்தை அபகரிப்பது, மங்களத்தை பொன்னுவுக்குத் தருவது, பெயருக்குக் கலியாணத்தைப் பண்ணிப் பொன்னுவுடனே தான் கூடி வாழ்வது, மங்களத்தையும் கொலை செய்வது என்று முடிவு செய்து தீவினைகளை வரிசையாக நடத்துகிறாள். அண்ணாவி, பொன்னு, டாக்டர் வைகுண்டம் மூவரும் அவள் தீவினைக்குத் துணை நிற்கின்றனர். சுந்தரி பாட்டியைச் சண்டை பிடித்து, விரட்டியடிக்கிறாள்; சிவத்திற்கு மருந்து வைக்கிறாள். அதனால், சிவம் சித்தப் பிரமை பிடித்து ஊரெல்லாம் பித்தனாகத் திரிகிறார்.

மங்களம் ஜோதியையே காதலிக்கிறாள். இருவரும் தனியே சந்தித்துத் தமது காதலை உறுதி செய்கின்றனர். ஜோதியை மங்களம் முருகன் வடிவாகவே கருதி அன்பு செய்கிறாள். ஜோதி மங்களத்தைப் பராசக்தி வடிவாகவே கருதி அன்பு செய்து வணங்குகிறான். உயிர்போனாலும்

பிரிவதில்லை என்று இருவரும் ஒருவராகின்றனர். ஜோதி பி. ஏ. தேறிப் பட்டம் பெறச் சென்னை செல்கிறான்.

இச்சமயம் சுந்தரி தன் சூழ்ச்சிகளை நிறைவேற்றி, பொன்னு படத்துடன் மங்களத்தின் படத்தையும் இணைத்து, இருவருக்கும் கலியாணம் நடந்ததாகப் பத்திரிகைகளில் அறிவித்து, ஒரு விருந்தும் நடத்திவிடுகிறாள். சென்னை சென்ற ஜோதி பத்திரிகையில் படத்தைக் கண்டதும் மங்களத்தைச் சந்தேகிக்கிறான். தன்னையே மணப்பதாக வாக்களித்தவள் பொன்னுவுக்கு இணங்கிய துரோகத்தை அவனால் தாங்க முடியவில்லை. அவனுடன் இருந்த கண்ணன் எவ்வளவு சமாதானம் சொல்லியும் ஏறவில்லை. கண்ணனுக்கு ஜோதி தன் தங்கை வள்ளியைத் தந்தான். இருவரும் மதுரையில் தனது தோட்டத்தில் கதர்ப்பணியும், பஜனையுமாக வாழும்படி கட்டளையிட்டு, ஜோதி மகாத்மாவின் சேவையில் இறங்குகிறான். முன்னிரவுதான் அவன் காந்திப் படம் பார்த்தான். அதனால் காந்தி பக்தி அதிகரித்தது. அன்று மாலை கடற்கரையில் ஒரு பொதுக்கூட்டம் நடக்கிறது. அதில் ஜோதி வீராவேசமாகப் பேசுகிறான். ஆனால் அவன் தேசத்திற்கு நிலையான காரியங்களைச் செய்யவே விரும்புகிறான். தனது எழுத்து வன்மையால் முதலில் ஜனங்களுக்கு அறிவுப் பணி செய்ய "பொதுநலம்" என்னும் பத்திரிகைக்கு ஆசிரியனாகிறான். சென்னையில் அவன் ஏழைகள் படும்பாட்டைக் கண்டு மனமுருகுகிறான்; மாந்தர் வறுமை மடமைப் பிணிதீரப் பணி செய்ய விரும்புகிறான். மகாத்மாவின் கட்டளைப்படி அவன் கிராமங்களில் அறிவும் தொழிலும் பரப்புகிறான். இச் சமயம் மங்களத்தின் கற்பும், அவள் தனக்காகச் செய்த தியாக பலியும் அவன் காதுக்கு எட்டுகின்றன.

தான் செய்த பிழையை வருந்துகிறான்; மனம் கலங்கு கிறான்; பொதுநலப் பணிகூடச் சலித்துப் போகிறது. அவன் உயர்ந்த ஞான நிலைபெற ஒரு குருவைத் தேடித் திரிகிறான்.

* * *

மங்களம் புலியிடம் சிக்கிய மான்போல் சுந்தரியிடம் அகப்பட்டு வருந்துகிறாள். சுந்தரி அவளை மாட்டுக் கொட்டி லில் அடைத்துப் பழஞ்சோறு போடுகிறாள்; சக்கையாக வேலை வாங்குகிறாள்; பொன்னுவுடன் சுயேச்சையாகக் கூடிக் குலாவுகிறாள். பொன்னு அவள் பணத்தைப் பறித்து, முல்லை மடியில் கொட்டுகிறான். வீடு கொள்ளை போகிறது. மங்களம் மாட்டுக் கொட்டிலிலிருந்து கடவு ளுக்கு முறையிடுகிறாள்.

* * *

சிவம் ஊரெங்கும் பித்தனாகத் திரிகிறார். வீட்டிற்கு வந்தால், அவரைச் சுந்தரி 'போடா பைத்தியம்!' என்று விரட்டி யடிக்கிறாள். அவருடைய குமாஸ்தா சீனுவும், அப்புவும் கூடிப் பேசி, சுந்தரியின் செருக்கை அடக்க முயலுகின்றனர்; சிவத்திற்கு அவர்களே மறைவாகச் சோறு போடுகின்றனர்; மங்களத்தையும் காப்பாற்று கின்றனர். நல்ல மழை நாள்; சிவம் பசியுடன் வந்து வாசல் கதவைத் தட்டுகிறார். சுந்தரி விரட்டி யடிக்கிறாள். அவர் கொல்லைக் கதவைத் தட்டுகிறார். சீனு கதவைத் திறக்கிறான். "வீடு சொத்தெல்லாம் சுபார்ஜிதம்; அவை மங்களத்திற்கே உரிமை" என்று ஒரு பேரேட்டில் எழுதி சீனு சிவத்திடம் கையெழுத்து வாங்கி, அப்புவும் தானும் சாட்சிக் கையெழுத்துப் போட்டுப் பத்திரம் செய்கிறான். மங்களம் தன் தந்தை நிலையைக் கண்டு பரிதபிக்கிறாள்.

அவளுக்குக் கலியாணமாகிவிட்டதாகவே சிவம் நினைத்துப் பேசுகிறார். அப்பு எஜமானுக்கு நன்றியுடன் சாப்பாடு போடுகிறான். அச்சமயம் சத்தங் கேட்டுச் சுந்தரியும் பொன்னுவும் ஓடிவருகிறார்கள்; அப்புவை வைகிறார்கள். மங்களத்தைத் திட்டுகிறார்கள். மங்களம் தைரியமாக, சுந்தரி-பொன்னுவின் கொடுமைகளையும், இழி வாழ்வையும் அம்பலப்படுத்துகிறாள். இருவரும் மனங் கொதிக்கின்றனர். இச்சமயம் சிவம் உள்ளே ஓடுகிறார். "ஐயோ பைத்தியம்" என்று சுந்தரி—பொன்னு அவரை விரட்டச் செல்லுகின்றனர். கூடத்தில் ரகளை நடக்கிறது. சிவம் அங்கிருந்த ரேடியோ சாராயப் புட்டி வாசனைப் புட்டிகள் எல்லாவற்றையும் போட்டு உடைக்கிறார். பொன்னுவை யும் கீழே தள்ளி அழுத்துகிறார். அச்சமயம் அண்ணுவி வருகிறான். அண்ணுவி சிவத்தை மெல்ல அழைத்துச் சென்று எங்கோ அனுப்பி விடுகிறான். பொன்னுவும் சுந்தரியும் மங்களத்தைச் சுட்டுக்கொல்லச் செல்லுகின்றனர்; மாட்டுக் கொட்டிலில் ஒரு புடவை போர்த்தியிருப்பதைக் காண்கின்றனர்; மங்களந்தான் அப்படிச் சுருண்டு கிடக்கிறாள் என்றெண்ணி அழுத்தி மிதிக்கின்றனர். முள் பலமாகத் தைக்கிறது. மங்களம் இல்லை. தலையணைமேல் முள் புதர் குவித்து அதன்மேல் புடவை போர்த்துள்ளது. மங்களம் எங்கோ ஓடிப்போனாள். இதற்குள் ஊரெல்லாம் சுந்தரி பெயர் சீரழிகிறது. பொன்னுவின் நடத்தையும் கண்ட பேர் காறித் துப்பும்படியாகிறது. முல்லை பட முதலாளி சலுகையில் இத்தனை நாள் இருந்தாள். அவன் வேறொரு பெண்வலையிற் சிக்கி, இவளை ஒதுக்கித் தள்ளுகிறான். அவளது இடம்ப வாழ்வு இனி நடக்காது. ஆதலால் சுந்தரியின் பணத்தை எடுத்துக்கொண்டு சென்னை

சென்று, படத் தொழில் நடத்தலாம் என்று அவள் பொன்னுவைத் தூண்டுகிறாள். அண்ணாவியும் தூபம் போடுகிறான். ஊர்ப்பழி தாங்காமல் சுந்தரியும் உடன்படுகிறாள். சுந்தரிக்கு முல்லை நடனம் கற்பிக்கிறாள். பொன்னு முல்லையை மணக்க விரும்புகிறான். மங்களம் உள்ளமட்டும் அது முடியாது. ஆதலால் பொன்னு மங்களத்தைத் தேடிப் பிடித்துத் தனது நாடகத்தில் சேர்த்து அவளைக் கெடுக்கவோ அன்றிச் சுட்டுக் கொல்லவோ பார்க்கிறான்; அண்ணா மூலம் மங்களம் இருக்குமிடத்தை அறிகிறான். துப்பாக்கியுடன் நான்கு முரடரை அழைத்துச் செல்லுகிறான்.

* * *

மங்களம் எங்கே ? சீனுவின் உதவியால் அவள் சுந்தரி கையில் சிக்காமல் தப்பினாள். இதோ முருகனார் தோட்டம். அதில் வள்ளியும் கண்ணனும் தனிக் குடித்தனம் செய்கின்றனர். முருகனார் தேசாந்தரம் சென்றுவிட்டார். அந்தக் குடிலில் நள்ளிரவில் ஒரு பெண் புலம்புகிறாள். "வாழ்வு புளித்தது, சுந்தரி-பொன்னுவின் கொடுமை தாங்காது இங்கே வந்தேன். ஜோதியைக் காணேன். 'பொதுநலம்' பத்திரிகை ஜோதி எங்கோ சென்றுவிட்டதாக அறிவிக்கிறது. என்னை அவர் வெறுத்து மறந்ததாகத் தெரிகிறது. இனி நான் யாருக்காக இருக்கவேண்டும் ? இதோ வைகையில் விழுந்து உயிர்விடுகிறேன்" என்று எழுந்திருக்கிறாள் பெண். அச்சமயம் கெட்ட கனவுகண்டு வள்ளி ஓடிவந்து "மங்களம் ! அப்படிச் செய்யாதே ; என்னிடம் சுகமாயிரு !" என்கிறாள். கண்ணனும் "ஜோதி வருவான்" என்று ஆறுதல் சொல்லுகிறான். அச்சமயம் தோட்டத்தில் சத்தம் கேட்கிறது. பொன்னு, அண்ணாவி

நான்கு தடியர்—துப்பாக்கி சகிதம் வருகிறார்கள். எல்லோரும் முகமூடி யணிந்திருக்கிறார்கள். எனினும், கண்ணன் தெரிந்துகொண்டு பொன்னுவுடன் வாதாடுகிறான்; தைரியமாகப் போராடுகிறான். பொன்னு மங்களத்தைக் கேட்கிறான்....சண்டை வலுக்கிறது. பொன்னு துப்பாக்கியை நீட்டுகிறான். கண்ணன் பயப்படாமல் எதிர்க்கிறான். வள்ளி குறுக்கே வருகிறாள். அவள்மேல் துப்பாக்கிக் குத்துப் படுகிறது. கீழே விழுகிறாள். திருடர் மங்களத்தைத் தூக்கிச் செல்ல உள்ளே போகிறார்கள். கண்ணன் முன்னே பாய்கிறான். அவனைப் பொன்னு சுடுகிறான். அஃது அண்ணாவிமேல் பட்டு அவன் சாகிறான். இச்சமயம் அப்புவும் சீனுவும் ஓடி வருகின்றனர். பொன்னு அப்புவைச் சுடுகிறான். இச்சமயம் மங்களம் பயந்து ஓடிச்சென்று வைகை வெள்ளத்தில் குதித்து மறைகிறாள். திருடர்கள் வீட்டிற்குத் தீ வைத்துச் செல்கிறார்கள். சீனு போலீஸ்காரரை அழைத்து வருகிறான். அவர்கள் தீயை அணைக்கின்றனர்; வீட்டுச் சாமான்களைக் காக்கின்றனர். மங்களம் தனது சொத்தெல்லாம் ஜோதிக்கே என்று எழுதிய சீட்டொன்று அவர்கள் கையில் சிக்குகிறது. குத்துப்பட்டு வீழ்ந்த கண்ணன், வள்ளி, அப்பு மூவரையும் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்கின்றனர். மூவரும் சில மாதங்களில் புண்ணாறுகின்றனர். சீனுமூலம் எல்லா விபரமும் அறிந்து போலீஸார் பொன்னு, முல்லை, சுந்தரி ஆகிய மூவரையும் தேடுகின்றனர். அவர்கள் மதுரையில் இல்லை. போலீஸார் சிவம் வீட்டைப் பூட்டி முத்திரை வைக்கின்றனர். நெடுநாளாகத் திருடரைப் பிடிக்க முடியவில்லை.

இச்சமயம் ஐரோப்பிய யுத்தம் பலமாக நடக்கிறது. இந்தியாவிலிருந்து பிரான்ஸ் போர்முனைக்கு அப்துல்லாகான் சென்றான். அவன் ஜோதியின் தோழன். டங்கர்க்கிலிருந்து தப்பிய வீரருள் அவன் ஒருவன். அவனுக்குச் சர்ச்சில் வீரப்பதக்கம் வழங்கி, சென்னையில் போர்வீரரைப் பயிற்ற அனுப்புகிறார். காப்டன் அப்துல்லா ஆகாயக் கப்பலிற் சென்னைக்கு வருகிறான்; இந்தியப் பாதுகாப்புப் படைவீரரைப் பயிற்றுகிறான். அப்போது ஒரு தந்தி அவனை மதுரைக்கு அழைக்கிறது. அப்துல் ஏற்கெனவே ஒற்றர் தலைவனாயிருந்து பெயர் பெற்றவன். மதுரையில் சமூகச் சண்டைகளும் கொலைகளும் கொள்ளையும் அதிகரிக்கின்றன. அத்துடன் பொன்னு முல்லை வழக்கும் இருந்தது. குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிக்க அப்துல்லா நியமிக்கப்படுகிறான். போலீஸ் நிலையத்தில் பல குற்ற விசாரணைகள் செய்து, முடிவில் முருகனார் தோட்டச் சம்பவத்தைக் குறித்தும், மங்களத்தைக் குறித்தும் அப்துல் விசாரிக்கிறான்; உளவு பார்க்கிறான்; சீனுவுக்குத் தைரியம் சொல்லுகிறான். தானே பொன்னுக் கும்பலைக் கண்டுபிடிக்க முனைகிறான். இச்சமயம் டெலிபோனில் பாதிரி மில்லர் அவனை அழைக்கிறார். அப்துல்லா செல்லுகிறான்.

மில்லர் தெல்லாகுளம் கல்லூரித் தலைவர். அன்பே வடிவானவர்; உண்மையான கிறிஸ்தவர், பரோபகாரி, பெரிய செல்வர்; தீனபந்து. அவர் மனைவி பெண்களுக்காக வைத்தியசாலை வைத்து உதவிசெய்தாள். அவளே வைத்தியம் பார்த்தாள். இருவருக்கும் ஒரு பெண் குழந்தை பிறந்து தவறிப்போனது. பிறகு பிள்ளையில்லை. வயதும் முதிர்ந்தது. ஜோதி கண்ணன் அப்துல் அனைவரும் மில்லரின் மாணவர்கள். அவர்கள் மில்லரைத் தந்தைக்குச்

சமானமாக நேசித்தனர். ஜோதியிடம் மில்லருக்கு அன்பு அதிகம். அப்துல்லா ஐரோப்பாவில் பெற்ற வீரப் புகழைக் கேட்டு மகிழ்ந்து அவர் அவனை உபசரித்தார். இருவரும் கல்லூரிப் பூந்தோட்டத்தில் உலாவினர். அச்சமயம் சிறு குழந்தைகளுடன் ஒரு கட்டழகி மலர்கொய்து விளையாடினாள். குழந்தைகளெல்லாம் அவளிடம் பிரியமாக நடந்தன. திருமதி மில்லர் அவளைத் தன் சொந்தப் பெண் போல அபிமானித்தாள். மில்லருக்கு அவள்மேல் உயிர். அந்த வனதேவதை யார் என்று அப்துல்லாகான் கேட்டான்; இரகசியமும் சிறிது அறிந்தான். மில்லர் தனியாக அழைத்துச் சென்று விவரம் எல்லாம் சொன்னார். அந்த வனதேவதையே **மங்களம்**. மங்களம் வைகையில் விழுந்தாள். ஆனால், வைகை மாதா இவ்வளவு நல்ல தமிழ்க் கொடியைக் கொல்லத் துணியவில்லை; மங்களத்தைத் தனது அலைக்கரத்தில் ஏந்தி அக்கரையில் ஒதுக்கிவிட்டாள். அங்கே கல்லூரிச் சாரணர் வந்திருந்தனர். அவர்கள் மங்களத்தை எடுத்துச் சக்கரத்தில் சுழற்றிச் சிகிச்சை செய்து மில்லரிடம் கொண்டு சென்றனர். திருமதி மில்லர் சிகிச்சை செய்தாள். மங்களம் பிழைத்தாள். மில்லர் தம்பதிகள் மங்களத்திற்கு "**அன்பு மலர்**" என்று பெயர் வைத்துத் தம் மகள் போலச் செல்லமாக வளர்த்தனர். துயர்கள் விலகின. மங்களம் இளவரசிபோல் வளர்ந்தாள். ஆனால், ஜோதியில்லாத குறையை மில்லரிடம் சொன்னாள். மில்லர் ஜோதியைப்பற்றி அங்குமிங்கும் விசாரித்தார். முடிவில் ஒரு பாதிரிமூலம் ஞானபுரியில் யோகநிலையம் நாட்டி ஜோதி செய்யும் அருட்பணிகளைக் கேள்விப்புற்றார்; அப்துல்லாவுக்கும் சொன்னார்.

அப்துல்லா சென்னையில் ஆகவேண்டிய ஒற்றுக்காரியங்களை முடித்துக்கொண்டு, யோக நிலையத்திற்கு வந்தான். அங்கே ஜோதி தனது சன்மார்க்கத் தொண்டருடன் செய்யும் அருட்பணிகளைக்கண்டு வியந்தான். ஜோதி குருவைத் தேடினனன்றே ? ஞானபுரியில் யோகமுனிவர் இருந்தார். அவர் பெரிய ஜமீன்தார். ஞானபுரி அவர் ஊரே. மனைவி மக்களெல்லாம் கொள்ளை நோயில் இறந்தபிறகு அவர் உலக வாழ்க்கையை விட்டு, யோக மார்க்கத்தில் புகுந்து சித்தி பெற்றார். அச்சமயமே ஜோதி அவரைப் பார்த்தான். முனிவர் தமது யோகசக்தியை அவனுக்களித்து, தமது ஞானபுரியையும் தந்து, ஜனங்களுக்குச் சன்மார்க்கத்துடன் உழைப்பும் பிழைப்பும் ஏராளமாகத் தரும்படி கட்டளையிட்டுக் கைலாச யாத்திரை சென்றார். ஜோதி ஞானபுரியை ஒரு பெரிய அருட்கோயிலாக்கினன்; யோக சாதனத்தில் முதிர்ந்தான். யோகமுனிவர் பெயரால் யோகநிலையம் கண்டான். அதில் சன்மார்க்கத் தொண்டரைப் பயிற்றினன். மங்களம் அவன் மனத்தை விட்டு அகலவில்லை. முன்னே மானிடப் பெண்ணாயிருந்த மங்களம் இப்போது பராசக்தியாக அவன் உள்ளத்தில் கோயில் கொண்டாள். அவள் பெயரால் அவன் "மங்கள விலாசம்" எழுப்பி, அதில் பெண்களுக்குக் கல்வியும் தொழிலும் யோகசாதனமும் அளித்தான்; அதை நடத்த ஒரு தகுந்த பெண்சக்தியை எதிர்பார்த்திருந்தான் ; ஏழைகளுக்கெல்லாம் சிறுசிறு குடில்கள் அமைத்தான். ஏராளமான தொழில்களைத் தந்தான்; தட்டில்லாமல் சோறு துணியளித்தான்; சன்மார்க்கம் போதித்தான். எல்லாரும் அவனைத் தெய்வமாகக் கொண்டாடினர். ஆனால் ஜோதி மிகமிகத் தாழ்மையாகவே இருந்தான். யாரும் சாமி,

யோகி என்றுகூடத் தன்னை வணங்காமல் முற்றிலும் இறைவனையே வணங்கச் செய்தான். அப்துல்லா ஜோதியிடம் தான் வந்த காரியத்தை அறிவித்து, மதுரை நடவடிக்கைகளையும் சொன்னான். ஜோதி மங்களத்தை நினைத்து வருந்தினான். மங்கள விலாசத்திற்கு ஒரு பெண் மணி வேண்டுமென்றான். "மில்லரிடம் ஓர் அற்புதமான பெண் இருக்கிறாள். கற்றவள், தூயள், பொதுநலப்பிரியை; அவருக்கு எழுதினால் அமையும். நானும் நேரே தெரிவிக்கின்றேன்" என்று அப்துல்லா விடைபெற்றுச் சென்னை சென்றான். ஜோதி உடனே மில்லருக்கு எழுதினான்.

* * *

அப்துல்லா இரண்டு ஒற்றருடன் சினிமா நட்சத்திர மண்டலத்தை அலசிப் பார்த்து, மூன்று பாவிகளையுங் கண்டுபிடித்தான். பொன்னு முல்லை இருவரும் மோதிரம் மாற்றிக்கொண்டனர். பேருக்குத்தான் உறவு. முல்லைக்கு அவன்மேல் துளி அன்பில்லை. அவனிடம் பை காலி. இருவரும் சுந்தரியை அடிமை நாய்போல நடத்தினர்; இடித்துப் பேசினர். சுந்தரி உடம்பு பெருத்தது. நாட்டியம் சரியாக வரவில்லை. அவள் தனது பிழைப்பிற்கு விலைவாழ்வை மேற்கொண்டாள். ஒருநாள் அவள் பசியால் துடித்தாள். அப்துல்லாவின் ஒற்றன் அவளை அழைத்துச் சென்று சாப்பாடு வாங்கிக் கொடுத்து சிநேகம் செய்துகொண்டான்; அவள் மூலம் பொன்னு, முல்லை செய்த அட்டூழியங்களை அறிந்தான். ஒருநாள் சென்னைக் கடற்கரையில் பொன்னு, முல்லை இருவரும் உலாவினர்; ஊடினர். சற்று தூரத்தில் அவர்களை வைது மண்ணைவாரித் தூற்றிக்கொண்டே சுந்தரி உலாவினாள். ஆசை நாயகனை ஒற்றன் வந்தான். இன்று எப்படியாவது இரவில் பொன்னு, முல்லையைப் பிடித்துக்

கொடுக்க வேண்டுமென்று சுந்தரியை வேண்டினன். சுந்தரி உடன்பட்டாள். ஒற்றனுடன் சுந்தரி காப்பிக் கடைக்குச் சென்றுள். வயிறு இருக்கிறதல்லவா?

பொன்னு-முல்லை 'காதல் உலகம்' என்ற நாடகம் ஒத்திகை நடத்தினர். அதில் கதாநாயகன் பொன்னு; நாயகி சுந்தரி; முல்லை ஆசை நாயகி. அவள் வலையில் பட்ட பொன்னு, மனைவியைக் (சுந்தரி) கொடுமையாக நடத்துகிறன்; வேசையுடன் களித்துக் கூத்தாடுகிறன். இரவில் ஒத்திகை நடக்கும்போது அப்துல்லாவும் ஒற்றரும் படக் காரர்போல வந்திருந்தனர். மயில் நடனம் நடந்தது. பொன்னுவும் முல்லையும் அமளியாகப் பாடினர், ஆடினர்; இடையிடையே மனைவி சுந்தரியைக் கேலி நையாண்டி செய்தனர்; மிதித்தனர், வைதனர். சுந்தரிக்குப் பொறுக்க முடியவில்லை. பொறுமைக் கொழுந்தேறியது. அவள் சட்டென உள்ளே சென்று படுக்கை யறையிலிருந்த சாராயப் புட்டியில் நஞ்சைக் கலந்து வைத்தாள். முல்லை அதைக் குடித்து இறக்க வேண்டும். பிறகே தான் பொன்னு முகத்தில் விழிப்பது என்று வீட்டை விட்டே ஓடிப்போனுள். அச்சமயம் மனச்சாட்சி அவளைக் குத்தியது. தான் கணவனுக்குச் செய்த கொடுமைகளை யும் மங்களத்திற்குச் செய்த தீமைகளையும் நினைத்துப் புலம்பினுள்; கணவனைத் தேடிக் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டு உயிர்விடத் தீர்மானித்தாள். பஞ்சை யாகக் காலால் நடந்து திரிந்தாள்; பிச்சை யெடுத் துண்டாள்.

இங்கே ஒத்திகையானதும் பொன்னுவும் முல்லையும் பள்ளியறைக்கு வந்தனர். நடனமாடிய களைப்புத்தீர, பொன்னு மெத்தையில் சாய்ந்தான். அன்று முதலாளி

தந்த ஆட்டப்பணத்தை முல்லை பறித்துக் கொண்டாள். பிறகு அன்றிரவே தன் சக்களத்தியாகி வம்பு செய்யும் சுந்தரியை ஒழித்துவிட வேண்டுமென்று பொன்னு கையில் ஒரு வாளைக் கொடுத்தாள். பொன்னு களைப்பாயிருக்கிற தென்றான். "ஆனால் குடி!" யென்று சாராயம் கொடுத்தாள். பாவம், அதுவே சுந்தரி விஷம்கலந்த சாரா யம். நஞ்சேறி பொன்னு மயங்கினான். "அடி துரோகி, நீயே நஞ்சுவைத்தாய்" என்று கையிலிருந்த வாளால் முல்லை மார்பைப் பிளந்து தானும் மயங்கினான். 'கொலை கொலை' யென்று முல்லை அலறினாள். அப்துல்லாவும் போலீ ஸாரும் வந்து அவர்களைக் கைது செய்தனர். மரணவாக்கு மூலம் தந்து தம் குற்றங்களை ஒப்புக்கொண்டு முல்லையும் பொன்னுவும் இறந்தனர். வீட்டைக் காலிசெய்து பொருள்களை யெல்லாம் சர்க்காரில் சேர்த்து, அப்துல்லா சுந்தரியைத் தேட ஒற்றரை விடுத்தான். ஒற்றர் மூலம் சிவம், பாட்டி, முருகன் அனைவரும் காளத்தியில் இருந்தாரென அறிந்தான். யோகமுனிவரும் கைலாச யாத்திரை சென்று திருக்காளத்திக்கு வந்தார். மூன்று அடியார்களும் அவரைச் சார்ந்து யோகசித்தி பெற்றனர். யோகமுனிவர் மூலம் ஜோதியைப்பற்றி அறிந்தனர். எல் லாரும் ஞானபுரியை நோக்கி வந்தனர்.

* * *

இச்சமயம் மங்களம் ஜோதியை நினைத்தே கனவு கண்டாள். அவள் நிலா முற்றத்தில் ஒரு கிளியுடன் ஜோதி புகழைப் பாடிக் கொஞ்சுகையில், மில்லர் நல்ல செய்தி சொல்லி கடிதம் கொடுத்தார். அதுவே ஜோதி மில்லருக்கு எழுதிய கடிதம்; மங்கள விலாசத்தைப் பற்றியது. அதைக்கண்ட மங்களம் ஆனந்தக்கடலில் மூழ்கினாள். 'என் ஜோதியைக் கண்டு அவருடன் வாழும்

நாள் எப்போது?' என்று உருகினாள். 'இதோ இப்போதே புறப்படுவோம்' என்று அப்தல்லாகான் மோட்டார் கொண்டுவந்தான்; நடந்த செய்திகளையெல்லாம் சொன்னான். கண்ணனும் வள்ளியும் வந்தனர். எல்லாரும் யோக நிலையத்திற்குச் சென்று ஜோதியைக் கண்டனர். ஜோதியும் மங்களமும் தனியே சந்தித்து, பட்ட இடர்களையெல்லாம் மறந்து, இனிச் சக்தி சிவம்போல் வாழ உறுதிகொண்டனர். அன்பரெல்லாரும் ஜோதி மங்களத்தை வாழ்த்தினர். இச்சமயம் காளத்தியிலிருந்து யோக முனிவர், பாட்டி, சிவம், முருகனுர் எல்லாரும் வந்தனர். அப்துல்லா, மில்லர், திருமதி மில்லர், கண்ணன், வள்ளி, சீனு எல்லாரும் ஜோதிஅடியாராகி யோக நிலையத் தொண்டில் ஈடுபட்டனர். மில்லர் தமது செல்வத்தைக் கொண்டு யோக நிலையத்தில் மின்சாரத் தொழில் நடத்த உடன்பட்டார். எல்லாரும் இன்புற்றிருக்கும்போது, ஒரு பிச்சைக்காரி (சுந்தரி) குவளை தட்டிப் பாடிக்கொண்டு அங்கே வந்தாள்...."ஐயோ பாவி சுந்தரி, இப்படியா போனாய்?" என்று பாட்டி பரிதபித்தாள். சுந்தரி தன் பிழைகளுக்காக வருந்தினாள்; அழுதாள். அச்சமயம் போலீஸ்காரர் அவளைக் கைது செய்து சென்றனர். அவளுக்கு தீவாந்தர சிட்சை கிடைத்தது........

யோக முனிவர் ஞானமலைக் குகையில் மோனமாக வாழ்ந்தார். ஞானபுரியை ஜோதி மங்களம் இருவரும் சன்மார்க்கத் தொண்டருடன் ஆண்டு, பக்தியும் பரோபகாரமும் செய்து நீடூழி வாழ்ந்தனர்.

இந்த நாடகத்தைப் படித்தவர், நடித்தவர், பார்த்தவர் ஆகியோர் வாழ்வு ஜோதி மங்களமாக விளங்குக!

ஓம் சுத்த சக்தி.

# நாடக உறுப்பினர்

**வேதாந்தப் பாட்டி :** மதுரைக் கிழவி, அனுபவத்தால் உலகியல்பை அறிந்தவள், 80 வயது.

**சிவசங்கரன்** (சிவம்) **:** பாட்டியின் ஏகபுத்திரன், பணக்கார வக்கீல், சாது, சன்மார்க்கி, 50 வயது.

**சுந்தரி :** சிவத்தின் இரண்டாம் மனைவி, மஹா சாகஸி, நவ நாகரிகக்காரி, ஸ்கூல் பைனல் படித்தவள், 20 வயது.

**மங்களம் :** கதாநாயகி, சிவத்தினுடைய முதல் தாரத்தின் மகள், குணவதி, கலாவதி, அறிவும் வீரமும் அருளும் மிக்காள், 16 வயது.

**பொன்னு :** சுந்தரியின் அத்தை பிள்ளை, நாகரிக நாஸ்திகன், கல்லூரி மாணவன், 22 வயது.

**அண்ணாவி :** பொன்னு நண்பன், கில்லாடி, ஜகப்புரட்டன், 24 வயது.

**முல்லை :** நாடகக் கணிகை, மாயக்காரி, பொன்னுவின் தாசி.

**முருகனார் :** சிவத்தின் நண்பர், செந்தமிழ்ச் செல்வர், இசைப் புலவர், சிவமுருக பக்தர், வைகைக் கரையில் ஒரு பூந் தோட்டம் அமைத்து, இறைவனுக்குப் பூமாலையுடன் பாமாலையும் சூட்டி வழிபடும் தொண்டர், மங்களத் திற்குப் பாட்டுச் சொல்லி வைப்பவர், 55 வயது.

**ஜோதி :** கதாநாயகர், முருகனார் மைந்தர், மிஷன் கல்லூரியில் பி. ஏ. படித்தவர், வீரர், தியாகி, தமிழன்பர், 22 வயது.

**வள்ளி :** ஜோதியின் தங்கை, பாலிய விதவை, தமிழ்க் கலையிற் சிறந்தவள், கண்ணன் காதலி, மங்களத்தின் தோழி, 16 வயது.

**கண்ணன் :** கல்லூரி மாணவன், சமரஸ வைணவன், வள்ளி காதலன், வயது 22.

**யோக முனிவர் :** சித்த புருஷர், ஜோதியின் பரம குரு.

**மில்லர் :** பாதிரி, கல்வித் தொண்டும், சமயத் தொண்டும் செய்பவர், மங்களத்திற்குப் புகலீந்தவர், ஜோதியின் ஆசிரியர்.

**காப்டன் அப்துல்லா :** ஐரோப்பியப் போரில் பெயர்பெற்ற வீரர், தொண்டர் படைத் தலைவர், ஜோதியின் அன்பர், சமரஸ, இஸ்லாமியர், 30 வயது.

**டாக்டர் வைகுண்டம் :** சுந்தரி நண்பர், பணம் பிடுங்கும் வைத்தியர். இன்னும் நடன், நடி, குருக்கள், சமையற்காரன், குமாஸ்தா, தொண்டர் படை, தோழிமார் முதலியோர்.

**இடம் :** மதுரை, திருப்பரங்குன்றம், மங்களபுரம், சென்னை.

# மலர்ச்சி

[நடன் நடி]

(கலி விருத்தம்)

**நடன் :** ஞால நாடகன் ஞானச் சிதம்பரன்.

**நடி :** மூல சக்தி முதல்வன் பராபரன்,
காலத் தேரினைக் காக்கும் பசுபதி
கோலச் சேவடி வெற்றி கொடுக்குமே.

[தீபாராதனை]

(அகவல்)

**நடன் :** திருவருட் சோதியைச் சிந்தனை செய்து
மங்கல மாக நங்கடன் புரிவாம்.
இன்பக் காதலீ, என்னுயிர்த் துணைவீ!
தேன்மலர் சுற்றித் திரள்வண் டினம்போல்
அரங்கின் முன்னே அமர்ந்தனர் நல்லோர்.
**காலத் தேரோனுங்** கோலநா டகத்தால்
இப்பெருஞ் சபையோர் இன்புறச் செய்வோம்.

**நடி :** **காலத் தேரைக்** கவினுறச் செலுத்தி,
ஞாலத் தியல்பை நாடக மன்றில்
வியனுறக் காட்டவே பயனுறுங் காட்சிகள்
அனைத்துங் கருத்துடன் அணிவகுத் துள்ளோம்.
உறுப்பினர் யாவரும் உவகை யோங்கினர்.
நவரச பாவனை நயமுறத் தேர்ந்தார்;
அவரவர் பகுதியை அமைவுறக் கற்றார்;
கொள்கைப் படியே குரலைப் பழக்கினார்.
வில்லுடன் கணைபோல், விரலுடன் யாழ்போல்,
சொல்லுடன் செய்கையும் சொக்க நடிப்பார்.

நடன் : ஞால மெல்லாங் காலத் தேராம்;
எல்லா உயிர்களுஞ் செல்லு மதனிலே.
புலன்க ளேயதன் புரவிக ளாகும்.
அந்தக் கரணமே அதன்சா ரதியாம்.
அறமே தேரின் அச்சாணி யாகும்;
பொருளே தேரின் பொன்னுட லாகும்;
இன்பமே தேரின் இரண்டுசக்கரமாம்;
வீடே தேர்மேல் விளங்கும் சிகரமாம்.
சுத்தான் மாவே சுடர்பெறுந் தலைவன்.
ஆழ்ந்தநல் லறிஞர் அறிவார்
இயல்வழி இதனை யியக்குந் திறனே!

நடி : ஆம், ஆம், உண்மை! அனுபவம் கண்டோம்.
திருப்பரங் கிரிவாழ் செவ்வேள் முன்னே,
காதல ரான ஜோதி—மங்களர்
காலத் தேர்மிசை ஞாலங் கண்ட
வியன்பெறு காட்சியை விளக்குவோம்.
பயன்பெறச் சபையோர் பார்த்து மகிழ்ந்தே!

[கோயில் மணியோசை கேட்டல்]

நடன் : கேட்டது முருகன் கிளர்மணி யோசை,
அன்பர் தமிழிசை அழைத்தது நம்மை!

நடன் : உயருக காதல்...உயருக உள்ளம்.

நடி : உயருக வுலகம் ஓங்கி,
உயருக திருவருள்—உயருக திரையே!

[திரை உயர்தல்]

# முதல் அங்கம்

## முதற் காட்சி

[திருப்பரங்குன்றம் முருகன் சந்நிதி. சிவம், மங்களம், **வேதாந்தப் பாட்டி, முருகனுர், ஜோதி, வள்ளி, கண்ணன் அனைவரும்** தரிசனம் செய்தல். குருக்கள் அருச்சனை செய்கிறார்.]

**குருக்கள் :** அருளே யான பொருளே போற்றி !
அன்பே யான நண்பா போற்றி !
இருளிடர் போக்கும் இரவியே போற்றி !
கந்தா போற்றி ! கடம்பா போற்றி !
சேந்தா, குறிஞ்சி வேந்தா போற்றி !
வேலா, தானவர் காலா போற்றி !
சூரனைக் கொன்ற வீரனே போற்றி !
குன்றை யெறிந்த குமரா போற்றி !
குகனே, உமையாள் மகனே போற்றி ! (10)
இதயக் குகையில் இருப்பாய் போற்றி !
ஓங்கா ரப்பொருள் உரைத்தாய் போற்றி !
சங்க மிருந்த தமிழா போற்றி
முருகா, திருமால் மருகா போற்றி !
கருத்தினி லினிக்குங் கரும்பே போற்றி !
அழகா போற்றி ! குழகா போற்றி !
அடியார் துயரங் கடிவாய் போற்றி !
ஐயா, பன்னிரு கையா போற்றி !
அறிவுக் கறிவாய் நிறைவாய் போற்றி !
செஞ்சுடர் மேனிச் செவ்வேள் போற்றி !
திருப்பரங் கிரிவாழ் செல்வா, (30)
அருட்பெருஞ் சோதி ஆண்டவா போற்றி !

[தீபாராதனை]

**எல்லாரும் :** சரவண பவ ஓம் ! குருபரா முருகா !
சுப்ரஹ்ம மண்ய ஓம்... சுப்ரஹ்ம மண்ய ஓம் !

**குருக்கள் :** [விபூதி யளித்து]

எண்ணிய காரியந் திண்ணமாய் நடக்கும்.

**சிவம் :** பயிரைக் காப்பது பருவ மழையே
உயிரைக் காப்பதும் உடையான் அருளே !

**பாட்டி :** மலரை வைத்தவன் மனத்தினை யறிவோம் !
மங்களம் போடுக செங்கையி னாலே !

[மங்களம் பூவைத்தல், குருக்கள் எடுத்தல்]

**குருக்கள் :** சேர்ந்தது வெண்மலர் ! செயம் செய மினியே !
வருகிற தைக்கு மங்களத் திருமணம்.

**சிவம் :** என்னருஞ் செல்வீ ! இறைவன் உனக்கு
நன்மலர் கொடுத்தான்......

**மங்களம் :** என்மன மளித்தான் !
(மனத்துள்) [ஜோதியைப் பார்த்தல்]

**சிவம் :** போற்றுவோம் குகனைப் பூந்தமி ழாலே !

**சிவம்,** முருகா முருகா முருகா வென்றே
**மங்களம்,** பெருகா தலுடன் உருகுவாய் மனமே !

**பாட்டி :** ஆர்வங் கொள்வாய்! ஆறு முகத்தான்
கார்மேகம்போற் கருணை பொழிவான் !
வெற்றிவே லென்றால் வீரங் கனலும் ;
கொற்ற மோங்கும் குலநல மோங்கும் ;
கெடுத லொழியுங், கீழ்மை யொழியும்,
விடுதலை சேரும், வீரம் பெருகும்.
திருவார் செவ்வேள் முருகா...
முருகா வென்றே உருகுவாய் மனமே !

[திரை]

## இரண்டாங் காட்சி

[பசுமலைக் கருகே பெரிய ஏரி. முதற்காட்சியிற் கண்டவர்கள் காற்றாட உலாவுகின்றனர்.]

**ஜோதி:** சூரியன், கதிராந் தூரியங் கொண்டு
உயிர்க்கும் உருக்களை உலகினில் வரைந்து,
விடைகொண் டேகினன் .. விரிமலர்க் கூந்தலை
அந்தி வானில் அவிழ்த்தனள் இயற்கை!

[மங்களத்தைப் பார்த்து]

என்பகல் அங்கே இலங்கு கின்றதே...
அங்கே நடக்கும் அருணத் திருவால்,
வெட்கிச் சந்திரன் வெளிவரா தொளிந்தான்,
மாலைப் புள்ளவள் வனப்பினைக் கண்டு,
காலைப் பாட்டையே களிப்புறப் பாடுமே!
கமலம் பூத்த கண்களைக் கோடி...
குமுத வாய்கள் கூடிப் புகழுமே!
கண்ணொளி கண்டு விண்ணொளித் திரள்கள்
'புண்ணியம் வந்தது' பூமிசை யெனுமே!
முல்லை பூத்த முறுவலை கவிகளின்
சொல்லிற் பூத்துச் சுகமணம் வீசுமே!
**மங்களம்** அவள் பெயர்...ஆம் ஆம் மங்களம்...
மங்கள—ஜோதியாய் வளர்கவென் வாழ்வே!
ஆனால் எப்படி...?

**கண்ணன்:** அதென்ன ஜோதி?
தனியே ஏதோ தயங்கி நடக்கிறாய்?

**ஜோதி:** (எண்ணத்தை மறைத்து)
பசுமலை வந்ததும், பாதிரி மார்செய்
பணிகளில் என்மனம் பளிச்செனத் தாவும்...
'நம்மத முய்ய, நம்மவர் செழிக்க,
நந்தமிழ் விளங்க, நன்னா டுயர,
அவர்போல் யாமும் அரும்பணி புரிவோம்'

**கண்ணன்:** புரிவோம்; உள்ளம் அறிவோம் அன்பா!
உன்மனம் அங்கே உலாவுதல் அறிவோம்...

**ஜோதி :** அம்மனத் துடிப்பே இம்மனத் துடிப்பாம்.

**மங்களம்:** வண்டுதேன் மலரைக் கண்டது போலே,
கண்டது மிவனைக் கொண்டனன் மகிழ்வே ;
தாமரை முகமும், தண்டமிழ் வாயும்,
காமர் விழியும், கனிநகை யமுதும்,
வீரத் திருவும், விஜய மார்பும்,
கற்றறிந் தடங்கிய சொற்றிற மாண்பும்,
பக்தியி னெழும் பாசுரப் பண்பும்,
கொண்டெனைக் கொள்ளை கொண்டவன் இவனே !
இரும்பைக் காந்தம் இழுப்பது போலே
ஏதோ வொன்றெனை யிவன்பா லிழுத்ததே.
வெளியழ கன்றே ; உள்ளே பொலியும்
ஒளியழ கேயென் உள்ளுயி ருள்ளே
விறுவிறுப் பாயொரு மின்சா ரத்தைப்
பாய்ச்சிய ததனைப் பகருவல் யானே !

**வள்ளி :** [மங்களம் தோளைத்தொட்டு]
யாது சிந்தனை ? ஏதோ போலே
என்னையும் பாராய் ; உன்னையே மறந்தாய் !
தனியே நடந்தாய் ; இனிய தோழீ !

**மங்களம் :** அன்புள வள்ளீ ! துன்புறு முல்லைக்
கொடிக்கு நல்ல கொழுகொம் பளித்தான்...
சோதி முருகனைத் துதித்தேன்
ஈதினும் வாழ்விற் கினியதொன் றுண்டோ ?

**வள்ளி :** வள்ளிக் கொடிக்குமோர் வகையவன் காட்டினன்.

**மங்களம் :** அல்லலைக் கண்டான், அபய மளித்தான் ;
எல்லையில் அருளாம் இறைவன்
வெல்லநம் விருப்பம் நல்குக துணையே '

**சிவம்,**
**பாட்டி :** மங்களம், மங்களம் ! மதுரைக் 'கேகுவோம்'!

[எல்லாரும் செல்லல்.]

## மூன்றுங் காட்சி

[சிவன் இல்லத்தில் நாகரிகக் கூடம். பச்சை ரவிக்கை, ரோஜாப்பட்டு, வைர நகைகள், கைக்கடிகாரம், மலர்க்கூந்தல், பந்தடி மட்டை, இவற்றுடன் சுந்தரி பெண் சங்கத்திலிருந்து ஒய்யாரமாக-வருகிறாள்.]

**சுந்தரி :** யாரது வீட்டுள்..........யாரும் இல்லையா ?
யார் அடுக்களையில் ? அப்பு, அப்பு !

[அப்பு ஓடி வருகிறான்]

(மனதுள்) செவிட்டுக் காதா...? திக்குவாய்க் கிழவா...?
சீனி போட்டுத் தேநீர் கொண்டுவா ?

**அப்பு :** தெதெதெதே தேநீர் ஜொஜொஜோர்

[வெள்ளிக் கோப்பையில் தேநீர் தருதல்]

**சுந்தரி :** உஸ் அப்பாடா...ஓய்ந்து வருதே.
டென்னிஸ் ஆட்டம் தீவிரம் இன்று
எங்கே போனான் இந்தக் கிழவன் ?
இந்தக் கழுதை எங்கே போனது ?
பாட்டி யெச்சுடு காட்டிற் கேகினாள் ?

**அப்பு :** கொகொ கொகொ கோயி லுக்கு.

**சுந்தரி :** கோயிலாம் குளமாம் கும்பிடாம் சாமியாம் !
சரி, சரி ; நீபோ ; சமையலைக் கவனி !

[அப்பு செல்கிறான்]

ஆசை யில்லை ; பாச மில்லை ;
அருமை யில்லை ; பெருமை யில்லை ;
இளமை விரும்பும் இன்பமிங் கில்லை—
கிழவனுக் கீந்து கெடுத்தா ரென்னை.

[நிலைக்கண்ணாடிபார்த்து
அலங்கரித்துக் கொள்ளல்]

அழகைக் கொண்டோர் ஆந்தைக் கீந்தனர் !
அழகை விரும்பும் அழகன் எங்கே...?

[வருதல் பொன்னு]

**பொன்னு:** வருக லாமோ......?

**சுந்தரி :** வருகலாம் பருகலாம் !

[வெள்ளிக் கோப்பையில்
தேநீர் தருகிறாள்]

**பொன்னு :** பாதாம் கீரும் மைசூர்ப் பாகும்
உப்பு மாவும் ஒவல் டின்னும்
ஏற்றியே வந்தேன் ; எனினும்,
சுந்தரி தந்தது சுகத்தினுஞ் சுகமாம்.

[குடிக்கிறான்]

**சுந்தரி :** பொன்னுவைக் காண்பதே என்னுடை யின்பம்.

**பொன்னு :** [பத்திரிகைகளைப் புரட்டி]

பத்திரி கைகளைப் பார்ப்போம் சற்றே ;
தமிழ்ப்பத் திரிகை...தள்ளொரு பக்கம் ;
அமிழ்தினும் இனிதாம் ஆங்கிலம் படிப்போம் !

**சுந்தரி :** தமிழெலாம் அந்தத் தாத்தா படிப்பது

**பொன்னு :** [இந்தியன் டைம்ஸைப் பிரித்து]

அச்சும் படமும் அழகு, அழகு !
பார், பார் சுந்தரீ, பார்முன் னேற்றம் !
அணுசக்தி செய்யும் அற்புதம் பாராய் !
ஒரே குண்டாலே ஊரை அழிக்கலாம்.

**சுந்தரி :** நீரிலும் வானிலும் நிலத்திலும் செல்லும்
வாகனம் ஸயன்ஸின் வரப்பிர சாதம்.

**பொன்னு :** வெள்ளை மூளை வியப்பினும் வியப்பாம்
நம்ம வரோவிஞ் ஞான சூனியர்

**சுந்தரி :** சும்மா இருப்பதே நம்மவர் ஞானம் ;

**பொன்னு :** அங்கே பார்பார் ஆண்டிக் கூட்டம் !

[சிவம், பாட்டி, மங்களம் வருதல்)

**பாட்டி :** நன்மல ரீந்தான் பொன்வேல் முருகன் !
சுந்தரீ ! இந்தா சுப்பிர மணியர்
விபூதி குங்குமம் ; விரும்பி யிடுவாய்;
வாயில் போட்டவன் கோயிலை யெண்ணு !
மணிமணி யான் மக்களைத் தருவான் !

**சுந்தரி :** ஆஹா ! ஆஹா ! அதற்கென்ன மாமி !

[விபூதியைப் பத்திரிகை மேல் போட்டுச் சிரித்தல்]

**சிவம் :** இந்தா பொன்னு, கந்தன் விபூதி !

**பொன்னு :** [மிகுந்த செருக்குடன்]

கந்தனு மில்லை; கடவுளு மில்லை!
கோயிலு மில்லை; குருக்களு மில்லை!
நட்ட கல்லை நமவெனத் தொழுவீர்!
கொட்டுவீர் பாலைக் குடங்குட மாக!
மலர்களைச் சொரிவீர்! மடமை! மடமை!
மந்திரத் தாலே மாங்காய் விழாது.
இயந்திர வுலகம் இயற்கையை வெல்லும்.
ஆலய மில்லை; ஆராய் சாலையே
எனது திருத்தலம் இயற்கையி னுள்ளமே
அறிவைக் கொடுக்கும் பொருளெனக் காமே!

**சிவம் :** தீட்டிய நாத்திகத் திமிர்பிடித் தலைவாய்!
இதயத் துள்ளும், இயற்கை யுள்ளும்
இருக்கும் கடவுளை மறுக்கத் துணிந்தாய்.
அப்பர் சுந்தரர் ஆளுடை பிள்ளையார்
திருவா சகமெனுந் தேன்பொழி வாயார்,
வள்ளுவர் சேக்கிழார் வரகவி கம்பர்,
ஔவை அம்மையார் ஆண்டாள் மீரா—
இவரெலாம் போற்றி இன்னருள் பெற்ற
கடவுளை நம்பாக் கசடரும் உண்டோ?
அருவாய் விளங்கும் அருட்பெருங் கடவுளின்
தன்மையே உருவாந் தத்துவ விளக்கம்—
கல்லையும் செம்பையும் கைதொழ வில்லை,
பாலிலே நெய்போல், பருமணித் தீபோல்,
எங்கும் எதிலும் ஏகமாய்க் கலந்த
ஒருவனை உணர்வோம் ஒருமை யாலே.

**பொன்னு:** பகுத்தறி வில்லாப் பத்தாம் பசலிகள்!
கடவுளும் மதமும் கஞ்சா மயக்கமே!
ஹெகலும், நீட்சியும், இங்கர் சாலும்
மார்க்ஸூம், லெனினும் மறுத்ததை ஏலேன்!
சாதி மதத்தின் சாம்பலே உரமாய்
விஞ்ஞா னத்தை வியனுற வளர்ப்போம்!

**சிவம் :** அஞ்ஞா னத்தால் ஆணவங் கொண்டாய்!
கூன்பாண் டியனின் கொடுஞ்சுரந் தீர்த்த
திருநீற் றைநீ செருக்குட னெறிந்தாய்.

**மங்களம்:** அப்பா நானே அணிகிறே னதனை.
நம்பா தாரின் வம்பு நமக்கேன் ?

**சுந்தரி :** சும்மா போடி, துஷ்டக் கழுதை—
பூசையிற் காடி புகுந்தது போல !
போபோ இலைகளைப் போடு சாப்பிடலாம்.
வாரும்; வயிற்றுப் பாட்டைப் பாரும் !

**பாட்டி :** உணவும் உறக்கமும், உரையும் சுருக்கி,
கண்ணை மூடிக் கைலாச பதியை,
சிவசிவ ஹரவெனச் சிந்தனை செய்வார்
பவப்பிணி தீர்ந்து பரசுக மடைவரே ;

**பொன்னு:** பாட்டீ, போநீ பரசுக மெய்த !
பருப்புக் குழம்பே பரசுகம் எமக்கு !

[சிவம் கோபமாய்ப் பார்த்தல்]

**சுந்தரி :** குஷியாய்ப் பேசினன் ; கோபமேன் அத்தான் !
வயிற்றுச் சாமியை வழிபட வாரும் !

**சிவம் :** அடியார் பெருமை கொடியார் காண்பரோ !

**பொன்னு:** செவிட்டிற் கொடுக்கினும் சினவார் அடியார் !
துடைத்து விட்டுச் சும்மா இருப்பார் !

**சுந்தரி :** ஹி ஹி ! ஹி ஹி ! இலக்கணம் சரிதான் !

**சிவம் :** சிவனே இவர்மனந் திருந்தி வருக
நன்னெறி வாழ்க உன்னரு ளாலே !

**சுந்தரி :** சுறுசுறுப் பாகத் தொழிலைப் பாரும்.

[எல்லாரும் செல்லல்]

## நான்காம் காட்சி

[சிவம் சட்டத் தொழில் நடத்துதல். குமஸ்தா சீனு சிறிய மேஜைமேல் எழுதுகிறான்.]

**சிவம் :** சீனு, சேவகஞ் செட்டியார் பிராது
தாக்க லானதா ? தடையெதும் உண்டா ?

**சீனு :** தட்சணை கொடுத்தே தாக்கல் செய்தேன்,
கைநீட் டாது காரிய மில்லை.

சிவம் : காலப் பிழைப்பே கைக்கூலி யானது.
எங்கும் வஞ்சம், எல்லாம் லஞ்சம்!
பெரிய கருப்பன் பீஸ்தந் தானு?

சீனு : எழுத்துக் கூலியும் ஏமாற் றந்தான்!

சிவம் : வழக்கை வென்றேன், வம்பு செய்கிறுன்;
வீட்டை ஏலம் போட்டு வாங்குவேன்.
சர்க்கரைக் குட்டியின் சமன்படி வந்ததா?

சீனு : அந்தச் சிறுக்கி வந்தெனைக் கண்டு
பிரதி வாதி பிச்சு வையனை
மன்னித் தாளாம், மனமொன் றியதாம்,
காதல் மணமாம்! கதைபல சொன்னுள்.

சிவம் : தொலைந்து போகட்டும்! துஷ்டப் பயல்கள்
பெண்ணைக் கெடுத்துப் பிடாரி யாக்கினர்.
செட்டியார் வாளின் கட்டை இங்குதா!

[கட்சிக்காரர் கட்டை
வாங்கிப் பார்த்து]

செட்டியார் வாளிதைச் செவ்வையாய்க் கேளும்;
எதிரியின் மோசம் எனக்குத் தெரிந்தது;
தங்கள் தகப்பனுர் சாம்பு செட்டியார்
எழுதிய உயிலை எங்கோ ஒளித்தான்;
அப்பன் பெயரால் தப்புயில் எழுதி
மைனர் வாயில் மண்ணைப் போட்டான்—
அண்ணன் செய்யும் அழிவழக் கென்னே!

செட்டியார்: அண்ணனென் றவனை அழைப்பதும் தீது!
சொத்தைத் திருடும் எத்தன், சுப்பன்,
உண்மையில் லாத உயிலொன் றெழுதி
மிளகாய்ப் பானையில் மெல்லத் திணித்துப்
பழம்பத் திரமெனப் பாவனை செய்து,
சாட்சிஜோ டித்தெனைச் சந்திக் கிழுத்தான்!
அண்டப் புளுகன் அப்பனுச் சாரியும்
அரிச்சந் திரனின் அவதார மென்றே
இந்தயோக் கியனை ஏத்தினுன் மன்றில்!
நீதி மன்றமாம் நியாயமே யில்லை!
வாயிதா வாயிதா வாயிதா வென்றே

பணத்தை விழுங்கினர் பகாசுரன் போலே!
ஐம்பதி ஞயிரம் ஆஸ்தி பெறநான்
முப்பதி ஞயிரம் முழுதாய்த் தொலைத்தேன்.
அப்பீல் செய்துளேன் அதிட்டமெப் படியோ?

**சிவம் :** உமக்கே வெற்றி; உண்மை யுரைத்தேன்.
கேசைச் செயித்தபின் பீஸை வாங்குவேன்.

**செட்டியார்:** உத்தம ரென்றே உம்மிடம் வந்தேன்.
பூசிவஞ் சித்த புலியைப் போலே
மாலை யுருட்டும் மார்ச்சா லம்போல்
வெளி வேடத்தால் வீர சைவன்
என்றுல கத்தை ஏய்க்கிறுன் சுப்பன்!
போற்றிஞ னிவனைப் புளுகுணி வக்கீல்.
வெள்ளையப் பஞ்செய் வேலையென் சொல்வேன்!

**சிவம் :** சத்திய விளக்கமே சட்டப் பயனும்.

**செட்டியார்:** அதுதான் இல்லை...இதுகலி காலம்!
வழக்குத் தொழிலும் வயிற்றுத் தொழிலே.

**சிவம் :** அறியா மடமையும், அன்னியக் கொடுமையும்,
வறுமையும் சிறுமையும் வருத்தும் நாட்டிலே,
எல்லாத் தொழில்களும் இயல்பை யிழந்தன...
சட்டத் தொழிலும் சத்திய மற்றது.
பொன்னுக் கேதன் புன்னகை விற்கும்
வேசையின் போலி ஆசையைப் போலே,
பணத்தை விரும்பிப் பாதகஞ் செய்வார்;
உரையைக் கொட்டி உள்ளதை மறைப்பார்...
மூச்சுத் திணறப் பேச்சை யடுக்கி
நல்லதைத் தீதென நம்ப வைப்பார்;
கொடுங்கொலை வெறியனைக் குணவான் என்பார்;
பொய்யை மெய்போற் புனைந்துரை செய்வார்;
கண்கா ணுததைக் கயிறு திரிப்பார்;
குதிரை முட்டையிற் குரங்கைப் படைப்பார்;
குச்சுக் காரியைக் குலப்பெண் என்பார்;
ஏழைக் குடியை எமன்போற் கெடுப்பார்;
காசு தராதவர் கட்டை எறிவார்;
பீஸ்ஆப் பிடவே பிதற்றுவார் பொய்கள்;
இரண்டும் மூன்றும் எட்டென முடிப்பார்;

சட்டங் கெடுக்கச் சாட்சிஜோ டிப்பார்;
உடைநடை மினுக்கி ஊரைக் கலக்குவார்.
இத்தகைத் தொழிலில் ஈடு பட்டும்
நியாயந் தவறி நடந்துநான் அறியேன்.

**செட்டியார்:** உண்மை, உண்மை உம்மைத் தெரிந்தே.
மனத்தி லிருப்பதை மறைக்கா துரைத்தேன்.
குடும்ப வழக்குகள் கொள்ளையா யுள்ளன.

**சிவம் :** முடிந்த மட்டும் முருகன் அருளால்
உங்கள் வீட்டிற் குழைப்பேன் உறுதி.
நாளைவா ருங்கள், நயமுறப் பேசுவோம்!
இரவில் பிராதை எழுதி வைக்கிறேன்.

**செட்டியார்:** நம்பி¦யிருக்கிறேன் நமச்சி வாயா ஓம்!

[செல்கிறார்]

[வீட்டுக்குள் சத்தம்]

**சிவம் :** ஐயோ குடும்பம்...அல்லற் காடு!!

[ஓடுகிறார்]

## ஐந்தாம் காட்சி

[முருகன் திருவுருமுன்னே பவழமல்லிகை மாலை தொடுத்துக் கொண்டே மங்களம் கண்ணீர் விட்டழுகிறாள். சுந்தரி கொடுமை யாகப் பார்க்கிறாள்.]

**மங்களம்:** [அறுசீர் விருத்தம்]

தாயிலேன் முருகா நீயே தாயினுந் தயவு மிக்காய்!
வாயிலேன்;மாற்றாந்தாயின்வன்கொடுங்கோலைத்தாங்கேன்
சேயினேன்; முற்பி றப்பிற் செய்ததீ வினைகள் யாவோ?
பேயின்கை இரவிற் பட்ட பிள்ளைபோல் வாடினேனே!

**சுந்தரி :** பாட்டு, பாட்டு வேறா?
இந்தப் பொம்மைமுன் என்னைச் சபிக்கிறாய்!

**மங்களம்:** பொம்மை யில்லையென் அம்மை யப்பன்!

சுந்தரி : அம்மை நானே ; அப்பன் கிழவன் !
அனாதைப் பிணமே யாருனை வளர்த்தார் ?
குலுக்கை குலுக்கையாய்க் கொட்டிக் கொள்கிறாய் !
போடீ...! எனது புடவையைத் தோய்த்துவா !
வெந்நீர் போடு...! வீட்டைப் பெருக்கு !
கொல்லையி லிருக்கும் குப்பையை அள்ளு !
அப்பு வுடனே அடுப்புப் பணிசெய் !
தண்ணீர்த் தொட்டியைத் ததும்ப நிரப்பு !

மங்களம்: பூசை செய்து போகிறே னம்மா ?

சுந்தரி : பூசையாம் பூவாம் ; பொம்மைவைத் தாடினாய் !
பாழும் மூளி...பதினாறு வயது !
குட்டிச் சுவரே ! உலக்கைக் கொழுந்தே !

மங்களம்: முருகா, முருகா ! முருகா, முருகா !

சுந்தரி : முருகனைத் தூக்கியுன் மூளையி லடிக்கிறேன் !

[அடித்தல்]

மங்களம்: முருகா முருகா ! முருகா முருகா !
இன்றென் மாலை இல்லையோ வுனக்கு !

சுந்தரி : மாலையாம்...! உனது மணமகன் இதுவோ ?

[மாலையைப் பறித்தெறிகிறாள்]

மங்களம்: ஆம், ஆம் ; அவனே அடியேன் மணாளன்.
முருகா, முருகா, ஜோதி முருகா !

சுந்தரி : கழிசடைக் கழுதை ! கதியிலா நாயே !
அதிட்டக் கட்டை அவலட் சணமே !
மூஞ்சியைப் பாரடீ மூஞ்சூறு போலே !

மங்களம்: என்ன செய்தேன் ? எனிக் கோபம் ?
குமரனே, இந்தக் கொடுமையைக் காணாய் !

சுந்தரி : என்னை, என்னை, எதிர்க்கும் நாக்கைக்
கொள்ளிக் கட்டை கொண்டு பொசுக்குவேன்.
அடங்கி நடடீ அனாதைப் பேயே !

மங்களம் : அடக்கம் உனக்கே அமைந்திட வேண்டும்

சுந்தரி : கொடுக்கிறேன் பூசை குண்டுணிப் பேயே !

[அடிக்கிறாள்]

மங்களம் : அப்பா, முருகா அப்பா, அப்பா !

[சிவன் வருதல் ; சுந்தரி உள்ளே ஓடுதல்]

சிவம் : அழாதே கண்ணே, அருமை மங்களம் !
நடந்ததைச் சொல்லு நானிருக் கின்றேன்.

மங்களம் : [விம்மியழுது]

வேலனை வணங்க மாலை தொடுத்தேன் ;
அம்மா வந்தெனை அடித்தாள் வைதாள் ;
முருகனைத் தூக்கி மூலையி லடித்தாள் ;
மாலையைப் பறித்து மண்ணில் வீசினுள்.

சுந்தரி : [சினத்துடன் வந்து]

என்னபொய், என்னபொய் இந்த வயதிலே !
நீரும் அவளது நீசப் பேச்சைக்
கேட்டெனைச் சினப்பீர்.

சிவம் : கேட்கிறே னுன்னை ;
ஏனிக் கூச்சல் ? ஏனிவள் அழுகிருள் ?

சுந்தரி : கொம்பு போலே குமரிப் பெண்ணைச்
சொப்பு வைத்தாடச் சொல்லு கின்றீர் !
"கணவனுக் குன்னைக் கட்டிக் கொடுத்தால்,
சமைக்க வேண்டாமா, தண்ணீர்க் குடங்கள்
சுமக்க வேண்டாமா, சுருசுருப் பாகக்
காரியம் செய்"யெனக் கனிவுட னுரைத்தேன்.
அதற்கிப் பிடாரி அடிக்கிறே னென்றே
அலறினுள்; வந்தீர்.

சிவம் : அபத்தம் வேண்டா !

சுந்தரி : அபத்தம் உங்கள் அலுவலா யிற்றே !

[வேதாந்தப் பாட்டி வருகிருள்]

பாட்டி : என்னடீ சத்தம் ? எதிர்வீ டதிர !

சுந்தரி : வேதாந்தம் இனி வேதனை செய்யும் !
நான்போ கின்றேன் நாவல் படிக்க.

[ஒட்டுக் கேட்கிருள்]

பாட்டி : ஏனடி கண்ணு ? ஏன்அழு கின்ருய் ?

சிவம் : அம்மா இதற்கெலாம் யானே காரணம்
இரண்டாந் தாரம் எடுத்ததே பிசகு !
வினைப்பய ஞலிவ் விலங்கைச் சுமக்கிறேன்.

**சுந்தரி :** அந்தப் புத்தி அப்போ தெங்கே!

**பாட்டி :** குடும்பமென் றாலே இடும்பைதா னப்பா?
ஆயிரம் கொடுமைகள் அனுப வித்தேன்—
மாமியின் செருக்கு நாத்தி பொறாமை
முரட்டுக் கணவனின் மூடக் கோபம்......

**சுந்தரி :** இன்னும் சொல்லும் இரண்டு தடவை!

**பாட்டி :** கட்டுக் கடங்காக் கணவன் தம்பிகள்,
சிறுவாடு விற்கும் சிற்றிகள் திருட்டு.
பேயினும் கொடிய பிடாரிகள் சண்டை,
பணமே பெரிதெனும் பந்து ஜனங்கள்,
மல்லுக் கட்டும் மாம ஞர்கள்.
அச்சமில் லாத மச்சான் மார்கள்,
பக்கம் பார்க்கும் பத்தினி யென்போர்,
தலையணை மந்திரம் சாற்றும் மனைவி,
அண்ணன் தம்பிகள் அடிதடி நாடகம்.
நாட்டுப் பெண்களின் போட்டிச் சேட்டைகள்,
குடும்பம் இரண்டாம் குட்டிக் கலகம்,
பேய்பிடித் ததுபோல் பெருங்கூ ரலெடுத்தே,
பெண்கள் சண்டை பிடிக்கும் கோரம்
ஆயிரம் நோய்கள் ஆயிரம் குறைகள்,
ஆயிரம் இடர்கள் யாவும் கண்டேன்;
சிவசிவ சிவவெனச் செபமாலை யுருட்டி
எல்லாம் ஈசன் இச்சையென் றிருப்பதே
இன்ப வழியென் றினிதுநான் அறிந்தேன்.

**சுந்தரி :** சரிசரி பைத்தியம்! சாளிவாய் மூடு!

**சிவம் :** அந்தப் பக்குவம் அடியனுக் கின்றி
குடும்பப் போரில் குத்துப் படுகிறேன்.
மங்களத் திற்கோர் மணாளன் வந்ததும்,
உலகக் கட்டை உதறிச் செல்வேன்.

**சுந்தரி :** இரவிலே பார்ப்போம் இவர்மன வுறுதி!

**பாட்டி :** கட்டுண்ட வாழ்க்கை கண்ணீர்க் கடலாம்!
காமத் திமிங்கிலம், கடுஞ்சின முதலை,
தாமதச் சுறாக்கள் சண்டையிட் டலையும்;
பனிமலை போலப் பிணிமலை மோதும்,

பொறுமைச் சண்டைகள் பொங்கிவீ றிட்டுப்
புண்ணீர் வெள்ளப் புயலெனப் பொருதும்;
அகப்பட் டவர்க்கே அட்டமத் துச்சனி!
இச்சம் சாரம் இடும்பையென் றுணர்ந்தே,
சதாசிவப் பிரமம் தப்பி யோடினர்,
பட்டினத் தடிகள் சட்டெனத் துறந்தார்.
பந்தப் படாதார் பாக்கிய வான்கள்!

**சிவம் :** மெய்தா னம்மா விடுதலை வேண்டும்

**சுந்தரி :** [படபடவென்று பேசிவருகிருள்]
இன்றே விடுதலை; எழுந்து செல்லும்.
பார்க்கிறேன் பார்க்கிறேன் பகலும் இரவும்!
பிரசவவை ராக்கியம் பேசி யளக்கிறீர்!
இரவிலோர் வேடம்! பகலிலோர் வேடம்!
பெண்மன மறியாப் பேதையை மதியேன்

**பாட்டி :** பதியே கதியெனப் பத்தினி நடப்பாள்...

**சுந்தரி :** பாட்டி திருவாய் பூட்டுக சற்றே!
ஆணும் பெண்ணும் அனைத்திலும் சரிநிகர்!
சுதந்தரக் காதல், சுதந்தரத் துடிப்பு
சுதந்தர நினைப்பு, சுதந்தரப் பேச்சு
சுதந்தரச் செய்கை சுதந்தர யுகமே.

**பாட்டி :** இனப்பற் றின்றி மனப்பற் றின்றி
ஆத்தும சாட்சியாய் அடங்கி யிருப்பதே
தொந்தமில் லாத சுதந்தர மாகும்.
தாமரை இலைமேல் தண்ணீர் போலே
ஒட்டா திருப்பதே உண்மை யின்பமாம்.

**சுந்தரி :** ஒட்டா தேயிரும் கிட்ட வாராமல்!

**பாட்டி :** இருந்தபடியே இருக்கிறே னம்மா [செல்லல்]

**சிவம் :** சுந்தரீ, உண்மையைச் சொல்லு கின்றேன்,
மங்களத் தைநீ மகள்போல் நடத்து!
தாயிலாக் குழந்தை தயவுகொள் சற்றே!

**சுந்தரி :** அவள்மே லென்பெரும் அன்பை அறியீர்!
பொன்னுக் கவளை நன்மணம் புரிந்து,
வீட்டுடன் வைத்துக் கொள்ள விரும்பினேன்—
அத்தை பிள்ளை, அருமைப் பிள்ளை.

மங்களம் : அப்பா நானும் ஆலயம் சென்று
வள்ளியைக் கண்டு வருகிறேன் மாலை

சிவம் : பாட்டி யுடனே பதமாய்ச் சென்றுவா !

[மங்களம் செல்கிறாள்]

சுந்தரி : சொல்வதைக் கேளும்! சும்மா பேச்சேன்?
'அரிசிவ' என்றால் அரிசி வேகுமா ?
பாட்டிவே தாந்தம் பணம் பழுக்குமா ?
என்மனப் படியே இசைந்து நடந்தால்,
அத்தா னுக்கு முத்து மழைதான் !

சிவம் : உன்மனப் படிதான் உவந்து நடக்கிறேன்.
உன் சுயேச் சைக்கிங் கொருகுறை யில்லை ;
பேச்சிலும் சாயப் பூச்சிலும், நடையிலும்,
சுதந்தரி யாகவே சுந்தரி யுள்ளாள்.

சுந்தரி : அதெல்லாம் சரிதான், ஆட்சேப மில்லை ;
இந்தக் குட்டியால் வந்தது தொல்லை ;
தைபி றந்ததும் தாலியைக் கட்டுவோம்.

சிவம் : பார்ப்போம், முடிப்போம் பதற்றமில் லாமல்.

சுந்தரி : அத்தானுக் கொரு முத்தங் கொடுக்கிறேன்.

சிவம் : ஹ ஹ ! ஹ ஹ ! ஹ ஹ ! ஹ ஹ !
உன்மனப் படியே உலகை விளக்கிறேன்.

சுந்தரி : ஆ, ஆ அப்படி ! அத்தான் சமர்த்து !

[இன்னொரு முத்தம்]

சிவம் : இருவர் மனமும் இணைந்த காதலே,
இல்ல றத்தினை இயக்குந் திறனும்.
அன்பே அதனை ஆளும் செங்கோல் ;
அறமே அதன் பொன் அரியணை யாகும் ;
அருளே வாழ்க்கையால் ஆகிய பயனும்.

அப்பு : கக்க...கக்க...காப்பித் தயார்.

சுந்தரி : அத்தான் காப்பி ஆற்றித் தருகிறேன் ;
அன்றுசென் றதுபோல் இன்றுநாம் செல்வோம்.

[இருவரும் கை கோத்துச் செல்கின்றனர்.]

## ஆறுங் காட்சி

[வைகைக் கரையில் முருகனார் மலர்வனக் காட்சி. வேதாந்தப் பாட்டி ஜபம் செய்கிறாள். முருகனார் தோட்டத்தில் மலர் பறிக்கிறார். வள்ளி, மங்களம், தோழிமாருடன் மலர் கொய்தல்]

வண்டார் சோலை மதுமலர் கொய்வோம்
செண்டார் மல்லிகை செவந்தி ரோஜா
குழலிசைத் தென்றல் குலவிய மலர்கள்
அழகும் நிறமும் அமுதமும் ஊறும்
கலையின் புன்னகைக் காட்சிகள் காணீர்!
இலையின் பசுமை இசைப்பது கேளீர்
முத்தமிழ் வண்டு முரலும் வனத்தே
புத்தலர் போலப் புவிமிசை வாழ்வோம்.

**முருகனார்:** போதும் மலர்கள்! பொழுது விழுந்தது!
அந்திப் புட்கள் 'அரஹர' வென்னச்
சிந்தை யடங்கிச் செகமெலாம் போற்றச்
செந்நகை புரிந்து சென்றனன் இரவி.
அன்ன நடையீர் அமுதவாய்ச் சொல்லீர்!
வைகைக் கேகிக் கைகால் அலம்பி,
முகத்தைக் கழுவி முத்துப் போலே
பொட்டிட் டிங்கே பொலிவுற வாரீர்!
பரமன் புகழைப் பாடி மகிழ்வோம்!

**எல்லாரும்:** பரிசுத்த மாகப் பரமனைப் பாடுவோம்!

**பாட்டி:** முருகனார் வனமே முத்தி வனமாம்:
பார்க்கு மிடமெலாம் பசும்பொன் மலர்கள்;
இரத்தினக் கனிகள், இயற்கைப் புன்னகை
பாய்ந்து பறக்கும் பறவைப் பாட்டு,
பரசுக மளிக்கும் பத்திப் பாடல்,
மனமகிழ் விக்கும் மங்கையர் கீதம்,
குழலும் வீணையும் குலவிசை விருந்து,
நல்ல பேச்சு, நல்ல பழக்கம்,
நல்ல போது! நல்ல நாளே!

**முருகனார்:** உலக வாழ்வெனும் உலையில் உருக்கி,
அழுக்கை நீக்கி, அருளொளி காட்டி,
கண்ணைத் திறந்து கழலடிக் களாய்ச்

செய்தான் என்னைச் சிவபிரான்,
செய்வ தெல்லாம் சிவனருட் பணியே!

பாட்டி: அவனரு ளின்றி அசையுமோ உயிர்தான்?
வாழ்க்கைப் போரில் வருந்துய ரெல்லாம்,
உயிர்மா சறுக்கும் உபாய மாகும்.
சித்தம் தெளிய எத்தனை யிடர்கள்!

முருகனார்: தங்கள் ஞானத் தகைமை பெரிதே!

[வள்ளியும் மங்களமும் மறைந்திருந்து கேட்டல்]

பாட்டி: மங்களத் திற்கும் இங்கே மனதாம்;
'வீட்டுத் தொல்லையை வெறுத்து நீக்கி,
வள்ளியுடனே வசிப்பே' னென்பாள்.
ஐயோ வீட்டில் ஆயிரம் ரகளை!
என்மகன் சிவனும் உம்போல் சாது;
சுந்தரி நடத்தை சுத்த மோசம்!
நாத்திகப் பொன்னுவே நல்லவ னென்பாள்!
எங்களைக் கண்டால் எட்டிபோல் வெறுப்பாள்!
பெண் சுதந்தரம் பேசுவாள் நீள;
மாசில் லாத மங்களத் திருவை
காள கண்டிபோற் கசக்கிப் பிழிவாள்,
கொடுமை யாகவோர் குற்றம் புனைவாள்,
அடிப்பாள் வைவாள், அடிமைபோல் ஒறுப்பாள்!
எனிக் கொடுங்கோல் என்றால்
கணவனைச் சினப்பாள்; கட்டுக் கடங்காள்...!

முருகனார்: மங்களம் போலொரு மங்கையெங் குண்டு!
பாட்டும் தமிழும், பத்தியும், பணிவும்,
அமைதியும், அடக்கமும், அன்பும், நேயமும்,
அழகும், திருவும், அறிவுங் கல்வியும்,
தூய வாழ்வுந் துலங்கும் இலக்குமி!
அவளை மணந்தவன் அதிட்டமே அதிட்டம்!
ஆனால் அவள்படும் அகத்துய ரெல்லாம்
சொல்லா திருப்பினுந் தோன்றுமே முகத்தே,
கைப்புண் காணக் கண்ணாடி வேண்டுமோ?
விண்ணொளி நோக்க விளக்கு வேண்டுமோ?
மல்லிகைக் கடைக்கு மணமே விளம்பரம்,
மங்களம் சொக்கத் தங்கமென் றறிவோம்.

பாட்டி : தங்கத் திற்கொரு தணல்மணி வேண்டும்.

[ஜோதி வருகிறான்]

ஜோதி : அப்பா வணக்கம்! அம்மா வணக்கம்!

இருவரும்: சுபம் சுபம் உனக்கு ஜோதி மணியே!

முருகனர் : பணங் கிடைத்ததா ?

ஜோதி : பாதி கிடைத்தது.

வீட்டுப் பாடம் விரும்பிக் கற்கும்
புதுத்தெரு மாணவர் புரிந்த வுதவி!
இன்னும் வேண்டும் இருபது ரூபா

முருகனர் : என்ன செய்வோம்? இருப்பது தோட்டம்
காய்கனி மலர்கள் கடையில் விற்றும்.
செந்தமிழ் வாணி தந்ததைக் கொண்டும்,
சிவனையே நம்பித் தினமும் வாழ்வோம்,
அவனே இன்றும் அருந்துணை தருவான்.

[வள்ளியிடம் வைர மோதிரம் தந்து]

மங்களம் : கவலையில்லை; கைமேல் பணம்வரும்.

வள்ளி : நாளைக் காலை நடப்பது நடக்கும்.

ஜோதி : நீறு பூசி நிமலனை நினைப்போம்,
ஆறுதல் அளிக்கும் அப்பன் அவனே!

எல்லாரும்: தனிப்பெருங் கருணைத் தந்தையே போற்றி!
இறைவா போற்றி என்னவா போற்றி!
மறைமுடி காணு வாய்மையே போற்றி!
பெரிதிற் பெரிய பெரியனே யுனது
திருவருள் அல்லது மறுதுணை யில்லேன்,
காப்பதுன் பாரம் கருணையே போற்றி!

முருகனர் : உள்ளத் துள்ளே உயிர்க்கும் ஒருவனை
மறவா திருப்போம். பிறவா நெறியாம்;

பாட்டி : சிவோஹம், சிவமயம்! சிவாய நம ஓம்!
மங்களம், செல்வோம்; நாளை வருவோம்!

மங்களம் : [வள்ளியிடம் தனித்து]

பணம்வரும் நாளை; பரீட்சையும் தேறும்;
அண்ணலுக் கியம்பென் அமுதத் தோழீ!

[எல்லாரும் செல்லல்]

முதல் அங்கம் முற்றிற்று.

# இரண்டாம் அங்கம்

## முதற் காட்சி

[சூரியோதயம். முருகனார் தோட்டம். வள்ளி மங்களம் மலர் கொய்தல்.]

**வள்ளி :** அருணன் எழுந்தான், அழகைப் பொழிந்தான்,
கருணை புரிந்தான் களிப்புறு தோழீ!
கதிரை யணைந்த கமலம் போலே
முகமலர் தோழீ!...அகமலர் தோழீ!
மனம்போல் மங்கலம் வந்தது, தோழீ!
ஜோதியின் வாழ்க்கைத் துணைவிநீ யானாய்
மோதிரம் இந்தா! ஜோதி கொடுத்தான்.

**மங்களம் :** உயிரும் உடலும் உள்ளமும் யார்க்கோ
அவருக் கேயிதை அளிப்பாய், தோழீ!

**வள்ளி :** அவரே உன்னிடம் அளிக்கச் செய்கிறேன்.

[ஓடிப் போகிறாள்]

**மங்களம் :** செம்முகங் காட்டி என்முகம் பார்க்கும்
ஜோதிக் கடவுளே, சோதனை யெல்லாம்
தாண்டிநான் உய்யத் தண்ணருள் புரிவாய்!
என்மேல் உனது பொன்னருள் பொழிவாய்!
கடலை முகந்தே கார்மழை பொழிந்து,
உயிர்களை வளர்க்கும் பயிர்களை வளர்ப்பாய்!
மோனச் சாட்சியாய் வானத் திருந்து
பூவினை யியக்குந் தேவனே போற்றி!
இடர்கள் விலகி இன்பம் வருமோ?
கண்ணீர் துடைக்கும் கைம்மல ருண்டோ?

**ஜோதி :** [அனுட்டானங்களை முடித்து மோதிரத்துடன் விரைந்து]

வந்தது, வந்தது வளர்நிறை யின்பம்...!
கண்ணீர் துடைக்கும் கைமலர் காணாய்!
என்கண் மணியே, என்னுளத் துடிப்பே!

வசந்தக் காலை மலராணி போன்ருய்,
வானப் பவனி வருமீன் கணங்கள்
அருண னுடனே ஐக்கிய மாயின,
இருளின் செருக்கெலாம் இல்லை யெனவே
அருணனை பூத்தான் ஆங்கே இரவி.

மங்களம் : ஈங்கே யிரவி என்னிருள் ஒழிப்பனோ?
அவனுடன் யானும் ஐக்கிய மாவனோ?

ஜோதி : ஆவாய்...ஆனாய்...ஆருயிர்...அணங்கே.
இந்தா வுனது சொந்த மோதிரம்!

மங்களம் : ஜோதி முருகனே சொந்த மெனக்கு
அன்பு தந்ததை அன்பே பூண்க!

ஜோதி : தமிழைப் போன்ற தண்ணமு தனையாய்,
பொன்னை வேண்டேன், பொருளை வேண்டேன்,
உன்னையே வேண்டினேன்.

மங்களம் : என்னையே தந்தேன்.

ஜோதி : அதுவே போதும், அணியிளங் கிளியே!
வீட்டில் உனது வெறும்விரல் கண்டால்
ஐய முறுவார்; ஆத்திரப் படுவார்.
கூற்றினும் கொடிய மாற்ருந் தாயின்
சினவெறி பொங்கிச் சீறுமென் மானே!
தந்தையும் உன்னைச் சந்தே கிப்பார்.

மங்களம் : அச்ச மில்லை, அன்புத் தெய்வமே!
அப்பா கிட்டச் செப்பினேன் அனைத்தும்,
தமது சாதகம் தந்தாள் வள்ளி;
பொருந்திய தென்றே புகன்ருர் தந்தை;
சுந்தரி செய்யும் தந்திரம் அறிவேன்;
மனமடங் காத மாயக் கள்ளி;
எனது தந்தையை ஏமாற்றித் தான்
பொன்னு வுடனே போகம் புசிக்கவே,
அவனுக் கென்னை அளித்திட நாளும்
கனவு காண்கிருள்...கணவனை மயக்கத்
தேனுர் வஞ்சத் தீஞ்சொல் லுரைப்பாள்.
இரண்டு நாளாய் எந்தை நோயால்
வருந்து கின்ருர் மருந்துவைத் தாளோ...!

ஜோதி: அறிவேன் அனைத்தும் அமுதவாய்க் கிளியே!
ஈசன் அருளால் இடர்கள் விலகும்!
எனினும், இந்தா, உனது மோதிரம்!
[கையிற் போடுகிறுன்]

மங்களம்: என்னுயி ரானீர், என்னவர் நீரே,
அன்பால் உயிருடன் அணிவேன் உமக்கே;
[மோதிரம் போட்டு]

அருணக் கதிரே அழகிய வுலகே!
காண்மின்! எனது கணவர் இவரே.
இவரே வாழ்க்கை, இவரே வாழ்பயன்.
பரிதியும் கதிரும், பயிரும் பசுமையும்.
ஆறும் நீரும், அன்பும் சிவமும்,
போலே யொன்றிப் புவியினில் வாழ்வோம்;
இன்று முதல்யான் இதயக் கோயிலில்
இந்தச் சோதியை இனிது வணங்குவேன்.

ஜோதி: சிவனுடன் சக்தி சேர்ந்தே உலகம்,
சக்தி தேவியாய்ச் சந்ததம் கருதி,
உன்னை யேயென் உள்ளக் கோயிலில்
வழிபட் டுய்யும் வழியெனக் களித்தாய்;
கற்புத் தெய்வமே, அற்புதக் காதலே!
இருவரும் உலகில் ஒருவராய் வாழ்வோம்,
அன்பை வளர்ப்போம், அருட்பணி புரிவோம்,
தமிழுக் குழைப்போம், தாய்த்தொண் டாற்றுவோம்,
யோகமும் சுத்த போகமும் உண்போம்;
சுத்த சக்தி துணைநமக் கருள்கவே!
[திரைக்குப் பின்னுல் முருகனுர்]

வழிபா டாற்ற வருவாய், மகனே!

ஜோதி: வாழ்க்கைச் சக்தியை வழிபட் டுய்ந்தேன்...
[திரைக்குப் பின்னே வள்ளி]

வா, வா மங்களம், கடவுளை வணங்குவோம்!
[இருவரும் செல்லல்]

## இரண்டாங் காட்சி

[மாலை ஐந்து மணி. கல்லூரி மாணவர் விடுதி. ஜோதியும் கண்ணனும் எதிர்காலத்தைப் பற்றிப் பேசுதல்.]

**ஜோதி :** முடிந்தது பி. ஏ.

**கண்ணன்:** முதற்பரி சுனக்கே !

**ஜோதி :** கற்றேம் ; பட்டம் பெற்றேம். பிறகு... ?

**கண்ணன்:** ஆறு தாண்டினால் அப்புறம் ஊர்தான் !

**ஜோதி :** ஊருடன் வீடும் உலகும் உள்ளவே,
எதிரே வாழ்வின் புதிரொன் றுள்ளதே.

**கண்ணன்:** புதியரா மானுஜம் போன்றாய் கணக்கில்!
எந்தப் புதிரையும் எளிதில் அவிழ்ப்பாய்.

**ஜோதி :** இந்தப் புதிரை எப்படி யவிழ்ப்பேன் ?

[மோதிரத்தைப் பார்த்து]

**கண்ணன்:** காதல் கொடுத்த கைச்சாத் திதுவோ ?
முருகன் முன்னே முளைத்த காதல்
பூத்த தங்கப் பொலிவோ மோதிரம் ?

**ஜோதி :** கேளாய், அருமைக் கேள்வா !

**கண்ணன்:** கேட்கிறேன்.

**ஜோதி :** பணமுடை யாலே பரித பித்ததை
அறிந்த மங்களம் பரிந்து வள்ளிபால்
இந்தமோ திரத்தை இரகசிய மாக
விற்றெனக் குதவ விருப்புடன் ஈந்தாள்.
கைப்பண மின்றி கவலை சுமந்துநான்
மறுநாள் சட்டை மாட்டும் பொழுது
பைகனத் ததை' பார்த்தேன். பணத்துடன்
அன்புக் கடிதம் அவள்வைத் திருந்தாள்.
வள்ளியும் சொன்னாள் ; உள்ளமொன் றானேம் !
பணத்தைக் கட்டினேன்...பதறித் தேடினேன்
மொழி பெயர்வேலை முப்பது தந்தது.
மோதிரந் திருப்பி முன்னவட் கீந்தேன்.
காலில் வீழ்ந்து, கண்ணீர் வரத்தன் .
கதையெலாம் சொல்லி, "காதலர் நீரே

என்னுயிர், என்மனம், என்வாழ் வாவீர்''
என்றுமோ திரத்தை என்கையிற் போட்டு
நாணிக் குனிந்தாள்.

**கண்ணன்:** நாயகி யானாள்.

**ஜோதி:** வளர்ந்த காதலும் வாலிப உணர்வும்,
பரிவும் உரிமையும், பாவையின் அன்பும்
உள்ளந் தன்னைக் கொள்ளை கொண்டன.
மதுமலர் கண்ட வண்டுபோ லானேன்!
கவிமுன் இயற்கைக் கனவென நின்றாள்.
திங்க ளானாள், திரைகட லானேன்.
அருண னானேன், அழகெனக் கானாள்.
கதிரவ னானேன், கதிரெனக் கானாள்.

**கண்ணன்:** இருவரும் ஆனீர் ஒருவ ராக;
இன்பந் தானே...

**ஜோதி:** இன்ப மெங்கே?
இருவர் காதலுக் கிடையே ஒருவர்
வருவது கதையின் வழக்கந் தானே,
எனக்கெதிர் நிற்பவர் இருவ ராவார்.

**கண்ணன்:** சிவத்தின் குமாஸ்தா சீனுவென் மாமன்;
அவனால் அறிவேன் அந்தவீட் டுளவு;
புலிநரி போலே பொன்னு—சுந்தரி
மங்கள மானை மறித்து வருத்துவார்.
தந்திர மாகச் சுந்தரி யைத்தன்
வலையிற் பிடித்தான் வஞ்சகப் பொன்னு.
அந்த மினுக்கி சொந்தக் கணவனைப்
பகைத்துப் பழித்துப் பகட்டிப் பறித்துப்
பணத்தை யெல்லாம் பாழ்செயப் புகுந்தாள்.

**ஜோதி:** குடும்பப் பாரதம் இடும்பை யென்று
வேதாந்தப் பாட்டி விளம்புவாள்...சரிதான்.
காதல் மானைக் காத்தலென் கடமை.
தன்சுகங் கருதியே பொன்னுவுக் கவளை
வலுமணஞ் செய்வாள் வணங்காச் சுந்தரி;
என்பெயர் சொன்னால் எரிந்து விழுவாள்;
மாக்பெத் போன்ற வன்னெஞ் சுடையாள்;

கொண்ட கணவனைக் கொல்லவுந் துணிவாள் !
மங்களம் எங்கள் மலர்வனம் வருவதும்
ஆடிப் பாடி அகமகிழ்ந் திருப்பதும்
பொறுக்க மாட்டாள் பொன்னுவின் அடியாள்
ரோமியோ வுக்கும் ஜூலியத் திற்கும் †
மலர்ந்த காதல் மண்ணா னதுபோல்
எங்கள் காதலும் என்ன வாகுமோ ?

**கண்ணன் :** அதுநிறை வேறினல்...?

**ஜோதி :** பொதுநலம் புரிவேன் ;
வள்ளுவர் போலே இல்லறம் வகிப்பேன் ;
காந்திக் கிசைந்த கஸ்தூரி பாய்போல்
மங்களம் என்னுடன் பங்குகொண் டுழைப்பாள்.

**கண்ணன் :** உன்னைப் போன்ற தன்னல மற்ற
வீரத் தமிழரை வேண்டுமிந் நாடு
ஆற்றும் பணிகள் அளவில.

**ஜோதி :** ஆம், ஆம்.
நல்ல புதிய கல்வி பரப்ப,
பட்டினி நீக்கும் பலதொழில் புரிய,
உழைப்பிற் கேற்ற பிழைப்பு நல்க,
சோம்பலை யொழிக்கத் தூக்க மொழிக்க,
அடிமை யுணர்ச்சியை அடியோ டொழிக்க,
அச்சப் பேயைச் சிச்சியென் றோட்ட,
பெண்களை வருத்தும் புண்களைத் தீர்க்க,
இயலற மான இல்லறஞ் செழிக்க,
இளம்வித வைகளின் இன்னல் தீர,
விலைவாழ் வொழியக் கலைவாழ் வுயர,
சாதிம தஞ்செயுஞ் சச்சர வடங்க,
சுத்தசன் மார்க்கமே சுடர்கொண் டொளிர,
ஒற்றுமை ஓங்க, வேற்றுமை நீங்க,
சும்மா வுண்டுண் டுறங்குந் துறவிகள்
சன்மார்க் கப்பணி சாந்தமாய்ப் புரிய,
தூய தமிழைத் துலக்கி யுலகில்
எந்தாய் கலைமுடி இலகநான் பார்க்க,
சங்க காலம் போலே தமிழர்
வீரச் சிறப்புடன் வெற்றி யோங்க,

நாட்டறம் விளங்க, வீட்டறம் விளங்க,
வாழ்க்கைத் துணையுடன் வன்றொண் டாற்ற,
தியாக வேள்வி தினமும் புரிய
ஆர்வங் கொண்டேன்...அன்பர்க் கன்பன்,
அரன், சிவன், பசுபதி, அம்பிகை பாகன்
என்மன மறிவான்; அவன் மனம் யாதோ!

**கண்ணன்:** வானுயர் எண்ணம் வளர்த்தனை, நண்பா!
என்வாழ் வெல்லாம் உன்பணிக் காகத்
திருமால் அருளுக தீரத் திறமையே!
என்னுளந் துடிக்கும் இச்சைநீ யறிந்தால்
உன்னுடன் யானும் ஒன்றே யென்பாய்.
பெண்ணுயர் பணியே என்னுயர் பணியாம்.
மங்கையர் மகிழ மாநிலம் மகிழும்.
மங்கையர் வருந்த மாநிலம் வருந்தும்.
இந்நாள் அவர்படும் இடர்கள் பலவாம்.
காத லரும்புமுன் கட்டாயத் தாலி.
பெண்விலை, ஆண்விலை, பெற்றோர் கடன்சுமை
ஈடிலாத் திருமணம், இணைவிலா வாழ்க்கை.
மனையற மறியா மடையர் காமம்,
மூக்கா டிட்டு மூலையி லழுதிடும்
சேயிழை யார்படும் சித்திர வதைகள்,
வீட்டுக் கொடுங்கோல் விளைத்த தீமை,
விலைவாழ் வான கொலைவாழ் வெல்லாம்
வேரோ டொழியச் சீர்திருத் தங்கள்
செய்வதென் கடனே!

**ஜோதி:** செய்வாய் உடனே!
எந்தை மனமும் என்னிள மனமும்
புண்படத் தங்கை புருடனை யிழந்தாள்.
ஒருமக ளென்றே உயரிடந் தேடிப்
பங்கை விற்றுப் பணக்குவை கொடுத்து,
சிறக்கச் செய்த திருமணத் தாலே
கைம்மிக மெலிந்தோம்; கன்னியை மணந்தவன்
மருத்துவ ஞயினும் மறலிவாய் வீழ்ந்தான்.
தங்கை அலறித் தவித்ததும், தந்தை
ஐயோ வென்றதும், அதே ஏக்கமாய்

எந்தாய் இறந்ததும், என்னென் றுரைப்பேன் !
உலக வாழ்வையே உதறி யெறிந்தோம் ;
தோட்டம் வாங்கித் துறவிபோல் வாழ்ந்தோம்.
கல்வி சிறந்த வள்ளிஇந் நாளில்
கன்னிய ருக்குக் கல்வியும் பாட்டும்
பயிற்றிக் கடவுட் பணிகளைச் செய்து,
கவலையை மறந்தாள் ; எனினும் கருத்தில்
உன்னை நினைந்தே உருகும் குறிப்பை
மங்கள முரைத்தாள்.

**கண்ணன் :** மகிழ்ந்தேன் ஜோதி !
வள்ளியென் உள்ளே வாழும் சக்தி !
அழகும், இளமையும், அறிவும், அடக்கமும்,
குரலும் *விரலும், குளிர்நகை முகமும்,
அன்பும், பண்பும், அடியார் நேயமும்,
என்னிடம் திரும்பிய நன்மனக் காதலும்
கண்டேன் ; அன்றே கருத்தைக் கொடுத்தேன்,
பெற்றோர் மறுக்கினும், சுற்றம் ஒறுக்கினும்,
உலகமே எதிர்க்கினும் உறுதி கைவிடேன் !

**ஜோதி :** பெற்றேன் வெற்றி ! பெற்றாய் வெற்றி !
சாதி சமயச் சாத்திர கோத்திரப்
பொய்மூட் டைகளிற் புரண்டு மருண்டு
பிரிந்து நலிந்து வருந்துமிந் நாடு
கலப்பு மணத்தாற் கவலை யொழிந்து
ஒற்றுமை யோங்கி உயர்த லாகுமே.
ஒற்றுமை யின்வேர் உள்ளமே யாகும்.
உள்ள மொன்றினால் உலகும் ஒன்றும்.
நிறைமுறைக் காதலால் நெஞ்சம் ஒன்றும்,
நன்மணத் தாலே நாடு கலந்தால்
இந்து முஸ்லிம், இம்மதம் அம்மதம்,
இத்திசை அத்திசை, இவ்வினம் அவ்வினம்,
இந்நிறம் அந்நிறம் என்னும் பேதைமை
கட்டோ டொழியும்.

**கண்ணன் :** கலக மொழியும் ;
அதற்கோர் உதாரணம் அப்துல் லாகான்.

---

* விரல் - விரலால் வீணை மீட்டும் திறமை

**ஜோதி :** அதோ வருகிறான்... ஆயுசு நூறு !

[அப்துல்லா இந்துப் பத்திரிகையுடன் வருதல்]

**ஜோதி,**

**கண்ணன் :** சலாமா லேகும் !

**அப்துல் :** அலேகும் சலாம் !

**ஜோதி :** உன்பேச் செடுத்தோம், உடனே வந்தாய் !
இராணுவச் சேவை எப்படி யானது...?

**அப்துல்லா :** பிறக்கும் மாதம் பிரான்ஸில் இருப்பேன்.
முந்திய போரில் எந்தையைப் போலே
அறப்போர் புரிய யானும் முனைந்தேன்.
ஆணை பிறந்தது...சேனை திரண்டது.

**கண்ணன் :** இந்து மனைவி இங்கிருப் பாளோ ?

**அப்துல்லா :** செஞ்சிலு வைப்படை சேர்ந்தாள் அவளும்.
என்மனமே அவள் தன்மனமென்பாள்.

**கண்ணன் :** நல்ல காதலர்...நல்ல ஒற்றுமை !
இந்து முஸ்லிம் இப்படி யிணைக !

**அப்துல்லா :** ஆண்டவன் ஒருவன் அனைவரும் சோதரர்
என்பதே உண்மை இஸ்லாம் ஆகும்.

**ஜோதி :** எல்லாச் சமயமும் இயம்புவ திதுவே ;
தன்னைப் போலத் தமரை மதித்தால்
போரேன் உலகில்...?

**கண்ணன் :** போர்நிலை எப்படி ?
இங்கும் அங்கும் என்ன நிகழ்ச்சி ?

**அப்துல்லா :** இங்கே காந்தி அங்கே இட்லர் ;
இங்கே தியாகம் அங்கே மோகம்,
இங்கே அன்பும் அங்கே அனலும்,
இங்கே அறவலி அங்கே மறவலி
படித்துப் பாரீர் படுகொலைப் போரை !

[இருவருக்கும் இதழ் தருதல்]

**ஜோதி :** பொறிநா கரிகம் புகைந்தது மேற்கே.
'கும்டும்' என்று குண்டு ரகளை !
கப்பல் கப்பலாய்க் கடலடி சேர்ந்தன.

ஐயோ, எத்தனை வீரர் ஆழ்ந்தனர்!
இடியுண் டரசுகள் அடிசாய்ந் தனவே!

**அப்துல்லா:** எரிமலை யுடனே எரிமலை பொருதினால்
தீக்குப் பஞ்சமோ? திமிங்கிலம் போலே
சிறுநா டுகளைப் பெரியன விழுங்கின.

**ஜோதி:** அசுரப் பொறிகள் அமரில் ஒழிக...
அறமே வெல்க?

**கண்ணன்:** அறநிலம் இங்கே;
நமது புண்ணிய நாட்டில் நடக்கும்
பிரிவினை கண்டு பெரிதும் வருந்தினேன்.
காந்தி யடிகள், கருணை வள்ளல்!
அறமும் உண்மையும் அவரே யென்போம்.
நாடெலாம் அவர்பின் நடந்தால் உய்வாம்.

**ஜோதி:** அதுதான் இல்லை...ஆளுக் கொருபுறம்
கட்சி கட்டிக் கலக்கினர் நாட்டை.

**அப்துல்லா:** இந்து முஸ்லிம் இகலேன் உலகில்?
இந்துயார்? இஸ்லா மியரார்? இருவரும்
ஒருதாய் மைந்தர்; ஒருநில மக்கள்.
இந்துப் பெண்ணை இனிதுநான் மணந்தேன்.
பேத மின்றிப் பிரியமாய் வாழ்கிறோம்.

**ஜோதி,**
**கண்ணன்:** † சங்கரி—அப்துல் சந்ததம் வாழ்க!

**ஜோதி:** எல்லா ருக்கும் அல்லா ஒருவனே!
எல்லா வுயிர்களும் இறைவன் மக்கள்!
இதயக் கடவுளே இன்பக் கடவுளாம்!

[**பொன்னு, அண்ணுவி** சுருட்டுடன் வருகின்றனர்]

**பொன்னு:** இங்கும் கடவுளா...?

**ஜோதி:** எங்கும் கடவுளே!

**பொன்னு:** கடவுட் பித்தர் கட்டிய கதைகள்
மதமாய் வளர்ந்து மனிதரைக் கெடுத்தன.
கடவுள், மூடக் கபோதிகள் கனவாம்.

**அப்துல்லா:** கடவுளைப் பழித்தால் கடுஞ்சினங் கொள்வேன்!
குருடனும் குருடனும் கூத்துப் பார்த்த

கதையைப் போலே கசடர் இருவர்
இல்லை யென்றால் இருப்பது பொய்க்குமோ?

**பொன்னு :** இருப்பதைக் காட்டுமே!

**அப்துல்லா:** திருவாயைப் பூட்டுமே!
பத்மாவ்ஷ! உன்குப் பகவான் குலாமோ?

**பொன்னு :** சாமிப் பேச்சைச் சடுதியில் ஒழியுமே!

**ஜோதி :** பின்எப் பேச்சைப் பேசிட வேண்டும்?

**பொன்னு :** சுகத்தைப் பற்றிச் சொகுசாய்ப் பேசுவோம்.

**ஜோதி :** எதுசுகம் பொன்னு?

**பொன்னு :** என்னுடன் வந்துபார்!
அண்ணா சொல்லும் அமுத மொழிகேள்!

**கண்ணன் :** பதிதனைப் பற்றிய * ஃபௌஸ்டைப் போலே
(மனதுள்) உன்னைப் பற்றினர் உருப்படி யாகார்.

**ஜோதி :** உன்னுடன் வந்தால் என்ன கிடைக்கும்?

**பொன்னு :** முல்லை முறுவலின் முத்தம் கிடைக்கும்.

**ஜோதி :** விளக்கிற் பூச்சிபோல் விழுந்து கெடாதே!

**அண்ணாவி :** அனுபவ மில்லா அம்பிப் பயல்கள்!
குஞ்சரி பாயின் கிஞ்சுக வாயும்
ரஞ்சித தேவியின் ராக சுகமும்,
மோகினி யம்மாள் முகமலர்ப் பொலிவும்,
பவளக் கொடியின் பகட்டும், ஒயிலும்
ஹம்ஸா செய்யும் ஆனந்த நடனமும்,
கல்லையும் உருக்கும் முல்லையின் சிரிப்பும்...

**அப்துல்லா:** காறி யுமிழ்வேன் கபர்தார்! † காஃபர்;

**பொன்னு :** பூபூ! பெபே! புலியைப் பாரடா!

**அப்துல்லா:** போய் விழுங்கள் புன்னகை நரகில்!

**பொன்னு :** அலிகள் அறிவரோ...அழகின் சுகத்தை?

---

* ஃபௌஸ்ட் - கெத்தே எழுதிய Faust எனும் நாடகத் தலைவன். அவன் மெஃபிஸ்டாஃபிள்ஸ் என்னும் சனியனை நட்டு அவனால் காமம், களவு கொலை ஆகிய பாவங்களைச் செய்தான்.

† அஞ்ஞானி.

**அண்ணுவி :** நன்ருய்ப் போட்டாய்! நாமினிச் செல்வோம்
இன்றுனை ஆழ்த்துவேன் இன்பக் கடலில்.

**பொன்னு :** கடலில் நீந்தக் காத லானேன்...

[தொலைவில் **மில்லர்** வருதல்]

**அண்ணுவி :** மில்லர் வருகிருர்! மெல்ல நழுவு!

**பொன்னு :** பாடத் தலைவலி பட்டென் ெருழிந்தது.
ஆசார் தொல்லை பேசா தொழிந்தது.
கல்லூரி இழுவல் கட்டோ டொழிந்தது.
இதோகலி யாணம்! இனியும் படிப்பேன்?

[இருவரும் தழுவிச் செல்கின்றனர்]

**அப்துல்லா:** கட்டுக் கடங்காக் கழிசடைப் பயல்கள்!
சீர் திருத்தச் சிறைக்கே தகுவர்.

**மில்லர் :** ஹல்லோ, ஜோதி, அப்துல், கண்ணன்!

**மூவரும் :** ஐயா வந்தனம்...அன்பை மறவோம்.

**மில்லர் :** பி. ஏ. தேறினீர்; பிறகென் செய்வீர்?

**அப்துல்லா :** போர்முனை செல்கிறேன்...நீரெனை வாழ்த்தும்!

**மில்லர் :** அறிவேன்; அறப்போர் புரிந்திசை பெறுவாய்!
இராணுவத் திறமை இந்தியர் பெறுக!
நீங்கள் இருவரும்?

**ஜோதி,** நாங்க ளிருவரும்,

**கண்ணன் :** பாதிரி மார்கள் பண்ணும் பணிகள்
எம்மைத் தூண்டி எழுப்பிய பின்னும்
சும்மா இருப்பமோ? சுறுசுறுப் பாகக்
கல்வியும் தொழிலும் கடவு ளறிவும்,
ஒற்றுமை யுணர்வும் உள்ளன் புடனே
ஊரில் வளர்க்க உறுதிகொண் டுள்ளோம்.

**மில்லர் :** ஆண்டவன் ஆசி அன்பருக் காகுக!
அமுதம் போன்ற தமிழை வளர்மின்!
இறைவனை வணங்குவோம்.

[ஆறு மணியடிக்கிறது

**எல்லாரும் :** எங்கள் அப்பனே,
இதயந் தோறும் இருக்கும் கடவளே,
அன்புத் தந்தையே, ஆருயிர்க் குயிரே,

உள்பரஞ் சோதி உலகெலாம் பரவுக !
ஆவதும் போவதும் ஆண்டவ ! நின்செயல்.
தேவனே, உனது திருவுள மாகுக...!
உன்னர சாட்சி உலகில் விளங்குக !
தன்னைப் போலத் தமரைப் பேணும்
பண்பும், பரிவும், பக்தருக் கருள்வாய்.
எல்லா ருக்கும் இன்பம் ஓங்குக !

[வணங்கல்]

**மில்லர் :** மனைக்கு வாரீர்......!

**எல்லாரும் :** மகிழ்வுடன் வருகிறோம்.

[செல்லல்]

## மூன்றாங் காட்சி

[முல்லை விலாசம். பளிங்குக் கூடம். **பொன்னுவும் அண்ணுவி யும் முல்லையை** ஆவலாக எதிர்பார்க்கின்றனர்.]

**அண்ணுவி :** வெள்ளித் திரையின் விளக்கொளி முல்லை...

**பொன்னு :** உள்ளத் திரையில் உலாவிடும் அன்னம்.
மாயா உலகின் மனோகரி யாக
நடித்த முல்லையின் வடித்த செஞ்சொலும்,
பொன்முகப் பொலிவும், மின்னிடை யசைவும்,
கயல்வழி வீச்சும், கனிநகை முத்தும்,
கமலம் பூத்த கட்டழ கமுதும்,
அணிமணி மினுக்கும், ஆடலின் சொகுசும்,
கண்டேன் கண்டேன் காதல் கொண்டேன்.

**அண்ணுவி :** அதிட்டம் உனக்கே அடித்தது பொன்னு !
சோதிடம் அறிவேன் ; சுக்கிர தசையால்
இந்திர போகம் வந்தது நண்பா !
மிட்டா தார்களும், பட்டா தார்களும்,
செல்வச் செருக்கரும், கல்விக் கடல்களும்,
முல்லையைக் காண மோகங் கொள்வார்.
இதழுல கிற்கே இவளாற் பிழைப்பாம் ;
முல்லை யென்னும் சொல்லைக் கேட்டதும்
தாறுகோ லின்றித் தாவுமே பேனு.
திரை காணுமலே உரை யடுக்குவார்.

நகைக்கொரு பக்கம், நடைக்கொரு பக்கம்,
பாடற் கிரண்டு, பார்வைக் கிரண்டு
போட்டி போட்டுத் தீட்டித் தள்ளுவர்.
முல்லையின் படத்தை முகப்பிற் கண்டால்
எனக்குனக் கென்றே இதழை வாங்குவார்.
முல்லை செல்லும் மோட்டார் பின்னே
வாலிபர் ஓடும் வரிசையைக் காண்பாய்!
அளவிலா முகங்கள் அவள் முகங் காண
வரவை நோக்கித் தெருவிற் கூடும்.
இவளிசை பரப்ப இரேடியோ துடிக்கும்.
இவள்படங் கண்டார் இதயந் துடிக்கும்.

**பொன்னு** : காணப் பேசக் கைகள் குலுக்க
நெருங்கிப் பழக நின்று வியன்றேன்.

**அண்ணுவி** : கம்பக் கவியும் கற்பனை காணு
உலக சுந்தரி உனக்கே யமைந்தாள்.
யாரெனக் கேட்டாள்; அனைத்தும் சொன்னேன்.

**பொன்னு** : என்ன சொன்னுய் என்னுயிர்க் கிளியிடம்?

**அண்ணுவி** : என்னிகர் நண்பன், இன்னுயிர் போலே
உன்னைக் கருதி உளந்துடிக் கின்றுன்,
சிவத்தின் மகளைத் திருமணம் புரிவான்.
பணத்திற் காகவே மணவினை யெல்லாம்.
பெற்றேர் தொல்லை பிறந்ததும் ஒழித்தான்.
அத்தை வீட்டில் அன்பாய் வளர்ந்தான்.
அங்கும் செல்வம், இங்கும் செல்வம்.
பை ஏராளம்...கை தாராளம்.
மனக்கட் டற்ற மன்மதக் காளை.
நாட்டில் இவன்போல் நாத்திக ரில்லை.
சாரு வாகரின் சரியான சீடன்.
பாடங் கருதான்...பள்ளியில் வணங்கான்
"கோட்"டடித் தாலும் வாட்டங் கொள்ளான்.
படிப்பது போலுன் படத்தையே பார்ப்பான்.

**பொன்னு** : இனிது சொன்னுய்...என்ன சொன்னுள்?

**அண்ணுவி** : 'யாக்கை நானே, ஆருயிர் அவரே!'
என்று மயங்கி எதிரே நின்ற

மன்மதச் சிலைமுன் உன்மதங் கொண்டாள்.
எத்தனைச் செல்வர் சித்தம் இளகெனப்
பித்துப் பிடித்துப் பின்னே வந்தார்...!
கவிச்சரக் கெல்லாம் காட்டி மகிழ்ந்தார் !
கனகங் குவித்துக் காலில் விழுந்தார்.
முகந் திருப்பி முறுவல் பூக்க,
கைம்மலர் தீண்டப் பைம்மலர் அவிழ்த்தார் !
உனக்கே உருகி யுள்ள மளித்தாள்
கற்பிற் சிறந்த கயல்விழி யாளே.

**பொன்னு :** அழகும் கலையும் அமைந்த பெண் ணரசி—
இவளே இன்பம்...

**அண்ணுவி :** இன்பமே முல்லை ;
இன்றுநம் மெதிரே இளங்கோ வந்தால்
மற்றோர் கோவலன்-மாதவி கண்டே
புதிய காவியம் புனைந்தே தீர்ப்பார்.

[திரைக்குப் பின்னே பாட்டு.
சதங்கையொலி.]

வருகிறாள்...வருகிறாள்...வனப்பைக் காணாய் !

[முல்லை பாட்டுப் பாடி ஆடி வருதல்]

**முல்லை :**

**ஆவியைக் கொள்ளை கொண்டான்—என்**
**ஆசை யறிவானோ ?**
**கூவி யழைக்கின்றேன்—வந்தென்**
**குறையத் தீரானோ ?**

**பொன்னு :** அழகே, அமுதே, ஆருயிர்க் குயிரே...!
உடலும் பொருளும் உனக்கேயுரிமை.

[பணம் அள்ளி வைத்தல்]

**முல்லை :** மாலைக் கதிரவன் மறையும் வேளை
கடற்கரை யெழுந்த கதிரவன் போன்றீர் ;
கமலம் போன்றென் கண்களி கொண்டது ;
உள்ளம் புகுந்தீர், உயிர்த்துடிப் பானீர் ;

**பொன்னு :** அள்ளும் இன்பமே, அடிமை நான் உனக்கே.

(திரை)

## நான்காம் காட்சி

[**மணவறை :** கண்ணனும் வள்ளியும் மணக் கோலத்துடன் மகிழ்ச்சியுறல். ஜோதி பேசுகிறான்.]

**ஜோதி :** இன்றென் உள்ளம் இன்ப மயமே.
இளந்திரு வள்ளி உளங்குளிர் கண்ணனே
மணம்புரிந் திலகும் மங்கலக் காட்சி
பெண்ணுல கிற்கே பெருமை தருமே.

**கண்ணன் :** நண்பா உனக்கு நன்றி, நன்றி
நாங்கள் இருவரும் தாங்கும் இல்லறம்
புதுமை யுணர்ச்சி பொலியும் நல்லறம்
பெண்ணடிமையெ னும் பேயைத் துரத்தி
இளந்திரு நங்கையர் இலக்குமி போலே
வாழ விடுதலை வழங்கிய நன்னாள்.
கட்டிய கணவன் கதி மூய்ந்ததுமே
மூலையில் அடைத்து முக்கா டிட்டு
அடிமைநாய் போலே அடித்து மிரட்டி
மாடுபோல் வேலை வாங்கிச் சிறிது
பலகார மிடும் பாழும் பழக்கம்
ஒழிந்தது மங்கலம் பொழிந்தது. பெண்மை
சிறந்தது ; புதுவழி திறந்தது வாழிய !

**வள்ளி :** வாழிய பெண்மை, ஆண்மை வாழிய
பூவும் மணமும் பொன்னும் மணியும்
பாலுந் தேனும் போலக் கலந்தே
உலகில் அறம் பொருள் இலகும் இன்பம்
வளர்க வளர்க வள்ளுவர் புகழ்போல் !

**எல்லாரும் :** கண்ணன் வள்ளி கண்ணுடன் மணிபோல்
இல்லறச் செல்வம் மல்கவா ழியவே...

## ஐந்தாம் காட்சி

[நிலைக் கண்ணாடியில் அழகு பார்த்துச் சுந்தரி சிந்திக்கிறாள்.]

**சுந்தரி :** அழகின் மேனி யாதாய் முடியுமோ ?
ஆசை யிளமையே, அடிமையைச் சீறும்
சுதந்தர வுணர்வே, துயர்செய் பாசமே
கிழமரம் பட்டபின் இளமாஞ் சுற்றி
வாழ்வுப் பசுங்கொடி வளருமோ வாடுமோ ?

**பொன்னு :**
கவலையேன் ? எழுந்திரு ! கட்டுகள் விட்டன !

**சுந்தரி :** அரசே, வா ! என் அன்பே வாவா !

**பொன்னு :** வேலை யெப்படி ?

**சுந்தரி :** ஊளை யிடுகிறார்...

[திரைக்குப் பின்னால் சிவம்]

**சிவம் :** நா வறண்டது...நன்னீர் ! வெந்நீர் ! !

**சுந்தரி :** கொண்டுபோய்க் கொட்டடீ குண்டுமல் லாரி... !

[திரைக்குப்பின் மங்களம்]

**மங்களம் :** அப்பா வெந்நீர் ஆற்றித் தருகிறேன்.

**சுந்தரி :** அல்லும் பகலும் தொல்லை, தொல்லை !
மாளிகை யுண்டு; மனமகிழ் வில்லை.
பெண்ணுரி மைகள் பேசி யென்ன ?
வீட்டிற் புகுந்தால் விசனம் தெரியும்.
இதோ ! இக் கட்டை ஏகிய பின்னே
விதவையா வேனோ...புதுமையா வேனோ ?

**பொன்னு :** விதவைக் கொடுமையை வெட்டிப் புதைப்பேன் ;
மூடப் பழமையை முடியத் தகர்ப்பேன் !
விசனப் படாதே, வீறு கொண்டுநில் !
ஊரை எதிர்ப்போம், உலகையே எதிர்ப்போம்.
உடலுக் கின்பமே உயிருக் குறுதி.
மண்ணின் பத்தை மறுப்பவன் பதரே !

**சுந்தரி :** பொன்னு கையிலிப் பெண்ணைக் கொடுத்து,
பொன்னுவால் எனக்குப் புகல்வர வேண்டும்.

**பொன்னு :** சூழ்ச்சி யறிந்தாய் ; சுருக்கில் முடிப்பாய் ;

சுந்தரி : ஜாதகச் சனியனே தடையாய் நிற்பது.
ஆண்டிப் பயலே அவளுக் கினிதாம் !
பொன்னு : சாதகப் பீடையும் சடங்குத் தொல்லையும்
இன்றிநாம் இருவரும் இன்புற வில்லையா ?
சுந்தரி : அதுசரி நமக்கே...அவரை ஏய்க்க ?
பொன்னு : அண்ணு வருவான் ; அவரை வெல்வான்.
பேச்சிலும் செயலிலும் பெரிய புலியவன்.

[மங்களம் வருதல்]

மங்களம் : அப்பா வுன்னை அழைக்கிருர், அம்மா !
சுந்தரி : இங்கு வந்தேன் எட்டிப் பார்க்கிருய் ?
எட்டிநில் கழுதை...எதிரே வாராதே !
மங்களம் : கொண்ட கணவன் குளிர்ச் சுரத்தால்
வருந்து கின்ருன்...வாவென் றழைத்தால்,
இன்னெரு வனுடன் இங்கே யிருப்பாய்... !
சுந்தரி : ஒருவனு ? அவனே உனது கணவன்...
அடக்கடீ நாவை, அதிகப் பிரசங்கி !
மங்களம் : கண்ட பேரையென் கணவனென் ருதே !
சுந்தரி : நாக்கைப் பொசுக்கு ! நலங்கெடு நாயே !

[திரைக்குப்பின் சிவம்]

சிவம் : ஐயோ... ! அங்கே யாரது, சத்தம் ?
வாவா, சுந்தரி... !
சுந்தரி : போடி வருகிறேன் !

[டாக்டர் வைகுண்டம் வருகிருர்.]

வாரும் டாக்டர்...பாரும் கையை... !

[டாக்டர் கைபார்க்கிருர்]

வைகுண்டம்: மூலச் சூட்டால் மூளைக் கொதிப்பு...
சுந்தரி : சுகவாழ் வின்றிச் சூடே றியது...
அதற்கோர் மருந்தை அருந்தத் தாரும் !
வைகுண்டம்: உயர்ந்த மருந்தை உனக்கெனத் தருகிறேன்...
அதிக மில்லை ஐம்பது வேண்டும்.

[திரைக்குப் பின்னே சிவம்]

சிவம் : அடியே சுந்தரி ..ஆவி துடிக்குதே... !
சுந்தரி : பலித்தது மருந்து...பாரும் கிழவரை !

[செல்லல்]

(திரை விழுதல்)

## ஆறுங் காட்சி

[நோய்ப் படுக்கையில் சிவம். பாட்டி, மங்களம் சிகிச்சை செய்தல்]

**சிவம் :** உம்...உம்...சிவனே உன்மனம் ஆகுக!
கூடும் தளர்ந்தது; குருவியும் தாவுது!

**பாட்டி :** இடுமருந் தென்றே இயம்பினர் பலபேர்;
ஆறு மாதக் காடி அருந்திஞல்
நஞ்சை முறிக்கும்...

**சிவம் !** நானிருந் தென்ன?
உடலை இங்கே உதறிப் பறவை
ஒருநாள் உயரச் செல்லுவ துண்மை.

**பாட்டி :** தெரிந்த உண்மைதான்; தெளிந்த நெஞ்சம்
சட்டை கிழிந்தாற் சங்கடப் படாது.
எனினும் வயிற்றில் என்னவோ செய்குதே...!

[முருகஞர், ஜோதி வருதல்]

**முருகஞர், ஜோதி :** ஓம் வணக்கம்!

**சிவம் :** ஓம் வணக்கம்!
வருக முருகஞர், வருக ஜோதி!
உன்பேச் செடுத்ததும் உடனே வந்தாய்.
பரீட்சை தேறினே, பரமசந் தோஷம்!

**ஜோதி :** பட்டம் வாங்கப் பட்டணம் செல்வேன்,
அதன்பின் வாழ்க்கை எப்படி யமையுமோ?

**சிவம் :** வளம்பெற வாழ்வாய், வாலிப மணியே!

**ஜோதி :** எனைவாழ் விக்கும் இறைவன் உம்மையும்
வாழ்விக் கட்டும்!

**சிவம் :** வாழ்வும் சதமோ?
இவ்வுட லாட்டம் இனிவெகு சுருக்கமே;
இறுதிக் காட்சி யிங்கே நடப்பதாம்.
பூத வுடலிற் புகுந்த நடிகன்,
மறலித் திரைக்குள் மறைந்து போமுன்,
கவலை ஒன்றைக் கருத்திற் சுமந்தான்—
அருமைச் செல்வித் திருமணம் அதுவே.

முருகனார் : ஆண்டவ னருளால் வேண்டிய தெய்தும் !

சிவம் : ஆண்டவ னேயுமை அனுப்பினார் மகனுடன்,
தங்கள் ஜோதி தங்கக் கம்பி !
அறிஞன், அன்பன், அரிய சற்குணன் !
மங்களம் அவனையே மனத்திற் கொண்டாள்.
மனப் பொருத்தம், குணப் பொருத்தம்,
இராசிப் பொருத்தம் எல்லாம் உள்ளன.
உங்கள் சம்மதம் உடனே தெரிந்தால்,
நாளைப் பார்த்து நல்வினை செய்வோம்.

முருகனார் : பாலும் தேனும் பண்புடன் கலந்தன !
சென்னை சென்று வந்ததும் திருமணம்.

சிவம் : ஜோதியின் விருப்பம் என்ன ? சொல்லுக !

ஜோதி : பெரியார் ஆணை புரிவதென் கடனே ;
சென்னை செல்லுமுன் என்னருந் தங்கை
வள்ளி மகிழ மணவினை காண்போம் !

சிவம் : அதென்ன ஜோதி அதிசயச் செய்தி ?

ஜோதி : கைம்பெண் கண்ணீர் துடைக்கக் கருதினேன்,
நண்பன் கண்ணன் அன்புடன் இசைந்தான்.
இதயத் துடிப்புகள் போலே இருவரும்
சேர்ந்து வாழத் தீர்மா னித்தனர்.

சிவம் : நல்ல காரியம்...! சமதுநன் னாளும்
தடைகளைத் தாண்டி நடைபெற வேண்டும் !

ஜோதி : [மங்களத்தைக் கடைக்கணித்து]
தைரிய மாகத் தடைகளைத் தகர்ப்போம் ;
அருளே துணையாய் அஞ்சா திருப்போம்.

[டாக்டர் வைகுண்டம் வருதல்]

சிவம் : வாரும் டாக்டரே, பாரும் துடிப்பை !

வைகுண்டம் : [துடிப்பளவை வைத்து]
மயக்கம் தெளிந்தது, மதித்தெளி வில்லை.
இரத்த வோட்டம் இறங்கு கின்றதே,
உணவுகொண் டீரா ? உறங்கி னீரா ?

சிவம் : பசித்தால் அன்றோ புசிக்கும் கவலை ?
பட்டினி யாலே விட்டது தலைவலி.

**வைகுண்டம்:** பட்டினி யிருப்பது பழைய பழக்கம்.
பசிக்கா விடினும் புசிப்பதெம் மதமாம்.
வாய்வழி யின்றேல் ஆசன வழியே
மருந்தும் உணவும் பொருந்தத் திணிப்போம்.

**சிவம் :** மருந்துப் பித்தரின் மடத்தன மிதுவே,
பட்டினி நோயைச் சட்டெனத் தீர்க்கும்.

[வருதல் **சுந்தரி**]

**சுந்தரி :** இப்படிப் பேசினுல் ஏதற்காம் உடம்பு?

(மனத்துள்)

இந்தப் பீடைகள் எங்கே வந்தன?

**முருகன், ஜோதி :** (குறிப்பறிந்து) பிறகு வருகிறோம்...

**சிவம் :** பிரியா விடைகொளீர்!

[**ஜோதி**, மங்களத்தைப் பார்த்துப் புன்னகை
புரிந்து முருகனுருடன் செல்லுதல்]

**சுந்தரி :** வந்த பேருடனே வார்த்தை யளக்கிறீர்.
பரதே சிக்குப் பாவையைத் தருவதாம்!
வரட்டும் இனிமேல்! விரட்டி யடிக்கிறேன்.
முருகனும், சோதியாம், முருங்கைக் காயாம்!
பித்தம் பிடித்துப் பிதற்று கின்றூர்!

**வைகுண்டம் :** நிலைமை மோசம்...நினைத்த கடனை
உடனே செய்வீர்.

**சுந்தரி :** உம்மைத் தானே!
பொன்னு கையிலே கன்னியைக் கொடுப்பீர்.

**பாட்டி :** என்னடீ அவசரம்? என்மகன் இருப்பான்.
(மனதுள்) இடுமருந் தாலே இப்படி வந்தது;
நன்றி கெட்ட நாய்களென் மகனைக்
கொல்ல முயன்றூர்...கொள்ளையிற் போக!

**சுந்தரி :** மனத்தில் யாரை நினைத்துப் பேசுறீர்?
சாபத் திற்கும், கோபத் திற்கும்
அச்ச மில்லை...அவரென் கணவர்.
நானிவ் வீட்டை நடத்தும் அரசி

**பாட்டி :** இளமைச் செருக்கும் வளமைச் செருக்கும்,
கண்கெட் டலையுங் காமச் செருக்கும்,

அடக்க மில்லாத் துடுக்குப் பேச்சும்,
கணவனை மீறுங் கண்ணும், காலும்,
கொண்ட பெண்டிர் கூற்றினுங் கொடியரே!

**சுந்தரி :** உமது காலம் ஓடிப் போனது.
எனது காலம் இதுவென் றறிவீர்,
ஆணும் பெண்ணும் அனைத்திலும் சரிநிகர்,
அவர்செல் வங்கள் அனைத்துமென் செல்வம்.
என்மனப் படியே இங்கிருப்பவர்
நடக்க வேண்டும், நடக்கா விட்டால்;
வெளியே நடக்க வேண்டும் உடனே!

**பாட்டி :** அம்மா நீயே அல்லிபோல் ஆளு!
அண்டந் தனிலோர் பிண்டமிப் பூமி,
அதிலோர் தூசி அளவிந் நகரம்,
அந்தத் தூசியில் அணுவும் வீடு!
இதன்மேல் இச்சை கொண்டென் மகனை
என்னவோ செய்தாய்...வன்மனக் கள்ளி.
உனக்குப் பயந்துநான் உண்மையை ஒளியேன்.
உடலை வெறுத்த உத்தம ஞானிகள்,
ஆன்மா தாமென் றறிந்த தூயர்
அச்ச மறியார்!

**சுந்தரி :** சிச்சீ, போபோ!
வாள்வா ளென்று வாசலிற் கத்து,
உள்ளே வந்தென் உயிர்வாங் காதே,
மரியாதை கெட்ட மாமிப் பேயே!
மகனால் வந்த சுகமெனக் கென்ன?
இருந்தும் பட்டினி மணந்தும் துறவு!

**பாட்டி :** ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்.
பாதகி! உனக்கும் பரகதி உண்டோ?
தப்பி தங்களை ஒப்புக் கொண்டு,
சிவத்தின் காலில் விழுந்து சேவி!
இடு மருந்துதான் இன்னதென் றியம்பு!
மருந்தை முறிப்போம், மருத்துவர் உள்ளார்.
அழகும், இளமையும், ஆசைத் தினவும்
உன்னை இப்படி உருக் குலைத்தன.

பிழைகளை வருந்தித் திருந்தடி பேயே!
கடவுளை நம்பு, கணவனை வணங்கு!
பாப புண்ணியம் பார்த்து நடடி!
தீமையால் வந்த செல்வம் தேயும்.

**சுந்தரி :** உலக மளிக்கும் உடலின் பங்களே
உயிரெனக் காகும்; உயிரைக் காக்கவே
செய்வன செய்தேன். தெய்வம், புண்ணியம்
என்பதில் எனக்கு நம்பிக்கை யில்லை.
என் மதத்தாரே இங்கே இருக்கலாம்
சம்மத மில்லார் சடுதியிற் செல்க!

**பாட்டி :** அப்பா சிவனே! அருமை மகனே!
பெற்று வளர்த்துனைப் பேணிய காதலால்
சொரிகிறேன் இரண்டு சொட்டுக் கண்ணீர்!

**சிவம் :** ஐயோ தாயே! யாதோ என்னை
மதி மயக்கி மருட்டு கின்றதே,
பெற்ற மனது பித்தென் பார்களே,
பிள்ளை மனது கல்லென் பார்களே!
அப்படிக் கல்லாய் ஆனதென் மனதும்.

**பாட்டி :** கடுகடுப் பில்லாக் கருணை மனமும்
கல்லாய்ச் சமைந்ததும் பொல்லா வினையே.
மகனே உனக்கு மருந்து வைத்தவர்
ஆங்கதி தன்னை அருகே காண்பாய்.
மருந்தை முறிக்க மருத்துவன் வருவான்.
அனுப்பு கின்றேன் யான்போ கின்றேன்.

**சிவம் :** அம்மா, இந்தா ஆயிரம் ரூபாய்!
வங்கியிற் போட்டு வட்டியில் பிழைத்திரு!

**பாட்டி :** பணம்பெரி தென்போர் பணத்தை யாளுக!
அம்மா சுந்தரி...ஆயிரம் இந்தா.
வைத்துக் கொண்டு வையக மாளு!

**சுந்தரி :** தந்து செல்லும்...சாதம் உமக்கு
அப்பு மூலம் அனுப்பு கின்றேன்.

**பாட்டி :** வேண்டா அம்மா...வீட்டைத் துறந்தோர்
உணவிலும் உடையிலும் உள்ளம் செலுத்தார்.

**சுந்தரி :** வயது காலம் மனையுடன் இருமே?

**பாட்டி :** ஒருவீ டின்றேல் உலகெலாம் வீடு.

**சிவம் :** அம்மா தாயே! அருமை ஞானியே!
அன்பு மயமே! யானுள மட்டும்
என்னருகே இருந்திட வேண்டும்!

[எழுந்து தடுக்க முயல்கிறார்]

**சுந்தரி :**
**டாக்டர் :** ஹா—ஹா—ம் படுங்கள்!

**பாட்டி :** உம்...உம்...மகனே!

[அழுகிறாள்]

**சுந்தரி :** தெருநாய் களுக்குக் கருணை காட்டி
உடலை வருத்தி உயிரை விடாதீர்!

**பாட்டி :** [சிறிது சென்று மீண்டு]
சிவனே உன்னைச் சிவனிடம் விடுத்தே
செல்லு கின்றேன்; திரும்பிப் பாரேன்!

**மங்களம் :** [ஓடிவந்து]
பாட்டி வருகிறேன்...அப்பா செல்கிறேன்.
இந்த வீட்டில் இருக்க விரும்பேன்.
வரவாக் கொடுங்கோல் வலுவா கிறது!

**சுந்தரி :** செல்லடீ உள்ளே; தெருவை நோக்கினால்
கண்ணைப் பிடுங்குவேன்; காலை வெட்டுவேன்!

[உள்ளே தள்ளி மூடுகிறாள்]

**சிவம் :** அம்மா, அம்மா! அருமை மகளே!

[அழுகிறார்]

**பாட்டி :** அப்பா கண்ணே, அழாதே...சிவனே!
உலகொரு சத்திரம்...கலகச் சத்திரம்.
வினையின் விளைவை விரும்பி யுண்டதும்,
பேசா தவரவர் பிரிவதே வழக்கம்.
ஒருவர் வினையை ஒருவர் சுமக்கார்.
அவரவர் மூட்டையை அவரவர் சுமப்பார்.

**சுந்தரி :** என்னிடம் கேளும்! இருந்து வாழும்
வழியைச் சொல்கிறேன்.

**பாட்டி :** பழியனு பவிப்பாய்!

**சுந்தரி :** போம்போம் தெருவில்! சாம் சாம் வருந்தி!

**பாட்டி :** சாக மாட்டேன்...சட்டை கழலுமுன்,
புண்ணியம் பெரிதா, பாபமே பெரிதா ?
கற்பே பெரிதா, காமமே பெரிதா ?
பணமே யின்பமா, பரமே யின்பமா ?
அறமே நலமா, மறமே நலமா ?
ஆத்திகம் பெரிதா, நாத்திகம் பெரிதா ?
வாய்மை பெரிதா, வஞ்சனை பெரிதா ?
என்னும் உண்மையை எதிரெதிர் காணவே
இருப்பேன் சிலநாள் இறையடி பற்றி.
உடலைக் கருதேன் ; உயிரைக் கருதேன்,
உலகைக் கருதேன் ; உண்மையைக் கருதியே
சிந்தை யெல்லாம் சிவமய மாகி
வந்ததை யுண்டு வாராததை மறந்து,
பாலர், பித்தர், போலத் திரிவேன்.
பாசமே விலகு...பந்தமே விலகு !
வைராக் கியமே வாழ்கவென் னுள்ளே !
நீமனை விட்டுத் திடீரெனச் செல்கிறேன்.
உலக வாழ்வெல்லாம் ஒருநாட் கூத்து.
சிவமே உண்மை, சிவமே இன்பம்.
சிவோஹம், சிவோஹம், சிவோஹம், சிவோஹம் !

[மின்னெனச் செல்கிறாள்]

**சுந்தரி :** தொலைந்து போ போ தொல்லைக் கிழவி.
ஏனழு கின்றீர் ? எதற்கழு கின்றீர் ?

**சிவம் :** அம்மா சென்றாள்...!

**சுந்தரி :** அதனால் என்ன ?
தாய்க்குப் பிறகு தாரம்... அறிவீர் !

**சிவம் :** இறந்து போனால் என்னடீ செய்வேன் ?

**சுந்தரி :** ஐரோப் பாவில், அடுசமர்க் களத்தில்,
கடல்வெடி யாலும், தரைவெடி யாலும்,
விண்வெடி யாலும் வீழ்பவர் கோடி !
வாய்க்கொழுப் பெடுத்த வறட்டுக் கிழவி
போனால் இதற்குப் புரண்டழு வாரோ ?
அநித்தியம் உடலெனும் அறிவெலாம் எங்கே?
சென்றது செல்க ; நின்றதைக் காண்போம் !

உமக்கே உடலம் ஒருநிலை யில்லை.
பொன்னு கையிலே பெண்ணைத் தாரும்!

**சிவம் :** நடத்தை கெட்ட நாத்திகப் பதரோ
மங்களத் திற்கு மணாள னாவான்?

**சுந்தரி :** பின்னே எவனிப் பேயை மணப்பான்?

**சிவம் :** எத்தனை யோபேர்; இதோபார் ஜாதகம்!

**சுந்தரி :** சாற்றும் உமது ஜாதகப் புரட்டை!

**சிவம் :** இந்த ஜாதகம் செந்தமிழ் வேலன்.

**சுந்தரி :** காதுக் கினிய கற்பனைப் புளுகன்!

**சிவம் :** தேசபக்த சிகாமணி கந்தன்.

**சுந்தரி :** காந்தி, கதரெனக் காலம் போக்குவான்!

**சிவம் :** நல்ல குணவான் நமச்சி வாயம்.

**சுந்தரி :** மானைக் கொண்டு யானைக் களிப்பாரோ!

**சிவம் :** தஞ்சை மிட்டா தாமோ தரனார்.

**சுந்தரி :** முட்டை மூளை; மூஞ்சி உமைப்போல்!

**சிவம் :** கல்வி மிக்க கனக சபாபதி.

**சுந்தரி :** கற்றுக் கற்றுக் காய்ந்த சுள்ளி!

**சிவம் :** அறிவிற் சிறந்தவன், ஆத்தும நாதன்.

**சுந்தரி :** வசீகர மற்ற வறட்டுப் பேர்வழி!

**சிவம் :** மதிப்புறு செல்வ மாதவன் இவனும்.

**சுந்தரி :** உதட்டைத் திறவான் ஊமனா மூஞ்சி!

**சிவம் :** பேர்புகழ் பெற்ற பெரிய சாமி!

**சுந்தரி :** பேசி னாலும் பிகுவாய்ச் செல்வான்.

**சிவம் :** எம். ஏ., பி. எல். ஏகாம்ப ரேசன்.

**சுந்தரி :** பூபூ! வேண்டாம் புத்தகப் பூச்சி!

**சிவம் :** பக்த சிகாமணி பரமா னந்தன்

**சுந்தரி :** ஆண்டி மடத்திற் கனுப்பும் அவனை!

**சிவம் :** எல்லா ருக்கும் இழிவு சொல்கிறாய்.
முத்துப் போன்ற முருகனார் திருமகன்
அன்பும் அறிவும் ஆற்றலும் அழகும்
ஒழுக்கமும் பொலியும் உயர்குணச் சோதி.
பத்தும் பொருந்திய உத்தமன் இவனே!

சுந்தரி : சாம்ப லாண்டி, சாதுக் கள்ளன்,
இரவில் இறந்தால் எண்ணெய்க் கில்லை;
பகலில் இறந்தால் பாடைக் கில்லை.
பிச்சை வாங்கிப் பி. ஏ. படித்தவன்.
என்மாப் பிள்ளை இவனே...ஹஹ!
[மங்களம் வீரவேசமாய் வந்து]

மங்களம் : அகக்கண் ணுடியில் அவரவர் அழகைப்
பார்த்தால் இந்த வார்த்தை வராது.
பதியைக் கொன்ற பாவிக ளுக்கு,
மானங் கெட்ட மடமக ளுக்கு,
கண்ணை யிழந்த காமிக ளுக்கு,
பணமே பெரிதெனும் குணமிலி களுக்கு,
சுயேச்சை யென்று சுற்றித் திரியும்
வம்பிக ளுக்கு, வஞ்சமி லாரை
அரட்டி மிரட்டி அடித்து வதைக்கும்
பேய்க ளுக்குப் பேச்சு வேறு?

சுந்தரி : போடுவேன் மண்டையில் போ பேசாமல்!
ஹாலில் இருப்பதுன் அகமுடை யானடீ!
கழிசடை மூளி கணவனுக் கடங்கு!

மங்களம் : சைத்தான் சாற்றும் சாத்திர வஞ்சம்!

சிவம் : ஐயோ குடும்பம்...ஹாஹா சிவனே!

மங்களம் : அப்பா! இவளுடைய அந்தரங் கத்தைப்
பன்முறை பார்த்தும் பயப்படு கின்றாய்,
பாம்புக் கின்னும் பால்வார்க் கின்றாய்;
பூனை யென்று புலியை நம்பினை!
இப்படி வந்ததே அப்பா வுனக்கு!
ஐயோ கடவுளே, ஆறாத விழுந்தேன்!
[அடுத்த அறையில் பொன்னு]

பொன்னு : கடவுளுக் கழுகும் காட்டு மிராண்டிகள்!

சிவம் : போதும் போதும் பொதி சுமந்தது.
அரனே! என்னை ஆண்டுகொள் உடனே!
தலை சுழலுதே...தாகம், தாகம்!

சுந்தரி : கொண்டு வாடீ கூஜா வெந்நீர்!

மங்களம் : அன்பாற் கொணர்வேன்; அழுலை நிறுத்து!
[செல்கிறாள்]

**சுந்தரி :** பாரும் பேச்சைப் பதங்கெடு மூளி !
எடுத்து வளர்த்தேன், என்னை மீறினள்.
பெண்ணென நினைத்தேன், பேயாய் முடிந்தாள் !
ஆண்டி வனத்தில் அறுதலி யுடனே
சேர்ந்திவள் கெட்டாள்...சிறுமை நமக்கே !

**மங்களம் :** [வெந்நீர் கொடுத்து]
அறுதலி யில்லை; அன்பு வள்ளி
கா தலித்துக் கண்ணனை மணந்தாள்.

**சுந்தரி :** சோதி உன்னைத் தொட்டுக் கெடுத்தான்.

**மங்களம் :** பொன்னு வுன்னைப்...புகழ்ந்து கெடுத்தான்.
[பொன்னு ஆத்திரமாக வந்து]

**பொன்னு :** யாது சொன்ன யடி ? டாம் நான்ஸென்ஸ் !
மீறிப் பேசினல் விலக்கி வைப்போன்.
[போகிறன்]

**மங்களம் :** அப்பா வணக்கம் ஆயிரந் தடவை !
இந்தவேங் கையிடம் என்னைத் தராதே !

**சிவம் :** பித்தமோ...சித்தப் பிழையோ ? யாதோ ?
வெந்நீர் தனையும் வெறுக்குதே நாக்கு.
நானினிப் பிழையேன் ; நாடி தளர்ந்தது.
ஆ, சிவ ஷண்முகா !

**சுந்தரி :** ஐயோ, உடனே
கன்னியைப் பொன்னு கையிலே தாருமே !

**சிவம் :** திருத்தமு மில்லை...பொருத்தமு மில்லையே !

**சுந்தரி :** பொருத்த மிருப்பதைப் பொருந்த விளக்குவேன்.
[வருதல் அண்ணவி]

**சுந்தரி :** அண்ண சாத்திரி அபூர்வச் சோதிடர்.
இரண்டுஜா தகமும் இவர்கைத் தாரும்
[ஜாதகங்களை வாங்கித் தருகிறள்]

**அண்ணவி:** மேஷத் திற்கும் ரிஷபத் திற்கும்,
அசுவ னிக்கும் அவிட்டத் திற்கும்,
நல்ல பொருத்தம்...நாலிற் செவ்வாய்,
பத்தில் கேது, பனிரண்டில் ராகு,
ஒத்துப் போகும் ஒன்பதில் சுக்கிரன்
சகட யோக ஜாதகம் இதுவே.
சுபகா ரியத்தைச் சுருக்கென நடத்தும் !

சுந்தரி : பொருந்திய வுண்மை தெரிந்ததா...கேளும்
ஆண்டிஜா தகத்தின் அழகையும் கேளும் !
[ஜோதி ஜாதகம் தந்து, கண்சாடை செய்தல்]

அண்ணுவி: ஜோதியா ! ஜாதகம் சுத்த மோசம்!
ஐந்திற் சனியன், சந்ததி யிராது,
படித்த முட்டாள். பாத சக்கரன்.
மனையைக் கருதான். மகா ஞானிபோல்
வேடம் போடுவான். விடுங்கள் இவனை !

சுந்தரி : நன்றாய்ச் சொன்னீர்...நல்ல சோதிடர் !
பாரும், உமைத்தான் ! பளிச்சென முடிவு
கூறும் ! நாளையே கொட்டுவோம் மேளம் !

சிவம் : என்மனச் சாட்சி பொன்னுவை வெறுக்குதே !

சுந்தரி : எதற்கெடுத் தாலும் எதிரே பேசுவீர் ;
நல்லது சொன்னுல் அல்லது செய்வீர்.
முதுமையால் உமக்கு மூளை சுழன்றது.
ஆண்டியைக் கொள்வீர்! அரசனை யிகழ்வீர் ;
வறுமையை விலைக்கு வாங்கி வளர்ப்பீர் ;
செல்வத் துரையைச் சீயென வெறுப்பீர்.
சாத்திரம் பார்ப்பீர், சாமிக் கழுவீர்,
கோத்திரம் பார்ப்பீர், குடித்தனம் பாரீர்.
சொல்லிச் சொல்லித் தொண்டை வறண்டது.
அத்தை பிள்ளை...சொத்தும் உள்ளவன்,
நாலுந் தெரிந்தவன், நன்றாய்ப் படித்தவன்,
உலகத் துடனே பழகத் தெரிந்தவன்.
வானம் பார்க்கும் ஞானப் பித்தரே
பொறுமை கொண்டு பொன்னுவை இகழ்வர் !
மகளைக் கொடுத்து மாப்பிள் ளையுடன்
வீட்டிலே வைத்துக் கொள்ள விரும்பினேன் ;
கட்டிக் கொண்ட கடனுக் காவது
நயத்தைச் சொன்னுல் நடத்தலா காதா ?
பத்தினி என்னைப் பார்த்தலா காதா ?
உம்மையே நம்பிய உத்தமி வார்த்தை
கேட்ட லாகாதா !

[தளுக்குப் பண்ணுகிறுள்]

**சிவம் :** கேட்டேன் ; சம்மதம்!

[மங்களம் ஆவேசமாக வந்து]

**மங்களம் :** சம்மத மில்லை! என்மனம் வேறு,
மருந்து மயக்கால் மதியை யிழந்தாய்!
அப்பா, நீயும் அன்பைத் துறந்தாய்,
கிளியைப் பூனை கேட்டாற் கொடுப்பரோ ?
ஜோதி ; இன்றேற் சும்மா இருப்பேன் ;
கன்னியாய் வாழ்வேன்; கல்வி வளர்ப்பேன்;
யோகம் புரிவேன்; உலகிற் குதவுவேன்;
ஏழை எளியவர், என்னினப் பெண்டிர்
இன்புறுந் தொண்டுகள் இனிதே செய்வேன்;
வலுமணத் தளையில் வாழ மாட்டேன்!

TAMIL SANGAM

**சுந்தரி :** அடிவா யாடீ...அடங்கி வாடீ!

[பொன்னு ஆத்திரமாக வந்து]

**பொன்னு :** அடிகொ டுத்தால் அடங்கிப் போவாள்.
போடீ உள்ளே !

**மங்களம் :** போவேன் வெளியே,
ஊரெல்லாம் உங்கள் கொடுமையை உரைப்பேன்
பெண்ணைப் படுத்தும் பேய்களைச் சினப்பேன்
எழுந்தது வீரம்...எழுந்தது சுதந்தரம்
பெண்மை சக்தி ; உண்மை யறிவீர்!

**பொன்னு :** வாவா என்னிடம், வகையாய்க் கொடுக்கிறேன்!

**மங்களம் :** உன்முகங் காணேன், உன்கை பற்றேன் ;
உன்னிடம் உண்ணேன்; உரிமை காப்பேன்
இன்னலை எதிர்ப்பேன் இழிவை மிதிப்பேன்.

**பொன்னு :** கெட்டுப் போனாய் தட்டு வாணி!

**சுந்தரி :** கடுமை யான காவலிற் போடுவேன்,
வாயைத் திறந்தால் வைப்பேன் பூசை.

**சிவம் :** ஐயோ திருமணம் ஆகட்டு மடா.
பின்னே அடக்கலாம் பெண்சா தியினை!
சாத்திரப் படியே சடங்கெலாம் செய்வோம்.

**பொன்னு :** சடங்கும் வேண்டாம் சவண்டியும் வேண்டாம்.
கையைப் பிடித்ததும் கால்திரு மணமாம் ;
முத்த மிட்டாலே முழுத்திரு மணமாம்

**மங்களம் :** விட்டு விலகடா வேங்கைப் புலியே
உயிர்போ னாலும் உளந்தர மாட்டேன் !

**சுந்தரி :** போடீ உள்ளே... !

[ஓர் அறைக்குள் தள்ளுகிறாள்]

**பொன்னு :** பூட்டி வைப்போம்!

**மங்களம் :** [உள்ளே தாளிட்டு]

பிழைத்தேன். இங்கே பெருமையாய்ச் சாவேன் !
அன்பு முருகா... அரக்கர் கொடுமையைக்
காணாய் சுற்றி ; யென் கற்பைக் காவாய் !
ஓம்சிவ ஷண்முகா ! ஓம்சிவ ஷண்முகா !

[திரை]

இரண்டாம் அங்கம் முற்றிற்று

# மூன்றாம் அங்கம்

## முதற் காட்சி

[சென்னை, திலகர் கட்டம். மாலை; சந்திரோதயம். ஜோதியும் கண்ணனும் பொன்னு-மங்களம் வதுமணப் படத்தைப் பார்த்து வியர்த்தல்.]

**ஜோதி :** விட்டன கட்டுகள், விடுதலை யினிமேல் ;

**கண்ணன்:** அன்பா ஜோதி, அவசரப் படாதே!
மதுரைச் செய்தியில் மாய முள்ளது!!

[பத்திரிகையை விரித்து]

காமிராக் காரன் கைவேலை யென்றே
படத்தைக் கண்டதும் பட்டென் றறிந்தேன்,
பாராய் நீயும்...பதற்ற மின்றி...!

**ஜோதி :** கப்பல் செய்ததைக் கடலிற் போட்டா...!
மதுரை மாயம் மாற்றிய தென்னை.
"உமக்கே மனைவி; உம்மையே நம்பினேன்;
உம்மை யன்றி உயிரெனக் கில்லை."
என்ற நங்கை இன்னொரு கயவனைக்
கணவனாய் ஏற்று மணவினை நடந்தது!
படத்தைக் கண்டதும் படபட வென்று
துடித்தது நெஞ்சம்...துடியிடை யாரின்
காத லெல்லாம் கானலி னீரே!
உதட்டில் அமுதும் உள்ளே நஞ்சும்
கொண்ட மாதரை அண்டேன், சத்தியம்!

**கண்ணன்:** சினமேன் ஜோதி?...என துளம் வேறு...
நானிச் செய்தியை நம்பவே மாட்டேன்.

**ஜோதி :** நடப்ப தெல்லாம் நல்லதற் கேயாம் ;
ஒரு பெண் கொண்ட உளத்தைத் திருப்பி
நாட்டன் பினிலே நாட்டித் தீர்த்தேன்...

**கண்ணன்:** தியாகமே யுனது திருவாழ் வாகும்.
பொதுநல மேயுன் பொன்மன மாகும்.
அதற்கோர் அருந்துணை யாகு மென்றே
மங்க ளத்தை மருவ நினைத்தாய்...

**ஜோதி :** சொல்லா தேயத் துரோகியின் பெயரை!
இங்கொன் றியம்பி அங்கொன் றியற்றும்
போலிக் காதலைப் பூவெனத் தள்ளினேன்!

**கண்ணன்:** மீண்டு முரைப்பேன் மேதகு நண்பா!
அங்கே நடக்கும் அண்ணாவி தர்பார்
திரித்த திந்தத் தினசரிப் புளுகு!
சுந்தரி-பொன்னுவின் சுதந்தரக் கொடுங்கோல்
மருந்து வைத்து மயக்கிச் சிவனைப்
பித்த னாக்கிப் பிதற்ற விடுத்தது;
மங்களக் கிளியை மாயஞ் செய்தது.
மங்களக் காதல் மாசறு காதலே...

**ஜோதி :** கற்புள காதல் சொற்பழு தாமோ?
காதல் இல்லையேற் சாதலை விரும்பும்,
மற்றோர் போலே சிற்றின் பத்தில்
வாழ்வை யிழக்க மணவினை விரும்பேன்.
பொதுநலம் புரியப் புனித சக்தியின்
துணைபெற வேண்டியே மணவினை வேட்டேன்.
அந்த நினைவும் அற்றது; தனியே
மாசற் றிருந்து மாண்பணி செய்வேன்...
ஆண்டவன் இச்சையும் அதுவென் றறிந்தேன்.

**கண்ணன்:** மதுரை சென்று மங்களத் திற்கு
நேர்ந்ததை நேரே நின்று கண்டபின்
பிறகொரு வழியைப் பேணலாம், ஜோதி!

**ஜோதி :** எனக்கொரு வழியை இறைவன் விடுத்தான்,
அதற்கே யன்பெலகம் அர்ப்பணஞ் செய்தேன்.
படித்த வாலிபர் படையணி சேர்ந்து
போர்க்கலை பயில்கெனப் புகன்று *சண்முகனார்
பட்டம் வழங்கிப் பாங்காய்ச் சென்றார்.
அவருரை கேட்டதும் ஆயுதம் பிடிக்கவே
துள்ளி யெழுந்தேன், வெள்ளித் திரையில்
கருணை வடிவாம் காந்தியின் தியாக
வாழ்வைக் கண்டதும் மாறிய துள்ளம்.
உண்மை கவர்ந்த வுளத்தை இனிமேல்
சிறுநெறி நோக்கித் திருப்பிடேன், உறுதி!
பேசுக பேசின் பெரியார் பேச்சே!

**கண்ணன்:** எனக்குமவ் வுணர்வே இதயத் தெழுந்தது,
விண்ணும் மண்ணும் விரிகட லெங்கும்.
கண்ணியும் குண்டும் கனல் பெற வீசி,
அரக்கப் படைகள் அழித்தன வுலகை.
இடியும் புயலும் எரிமலை யும்போல்
ஆயுத நமன்கள் அடங்கா தெழுந்தன;
சுடச்சுடப் பேசிச் சுடச்சுடக் கொடுக்கும்
அரசிய லாரின் அபாயச் சூழ்ச்சி
கண்டென் உள்ளம் கலங்கி வருந்தும்.
ஆசையா ணவமாம் அதர்மப் பேய்கள்
இரத்த வெறிகொண் டின்னலே செய்யும்
இந்த வுலகிலும் எம்மான் காந்தி
அருளே வடிவாய் அஹிம்ஸை யறத்தை
வாழ்ந்து காட்டி வாழச் செய்தார்.

**ஜோதி :** காந்தியின் பெருமை கடலினும் பெரிதே.
மலையினும் மாண்பு மகாத்மன் உள்ளம்.
வானஞ் சென்றே மழைதரும் கடலே;
காந்திக் கடலோ கருணை மழையை
வையம் வாழ வழங்கு மிங்கே.
காந்தி யென்னும் கருணை வடிவைக்
கண்ட கண்கள் காணுமோ பொய்யை!

**கண்ணன்:** அன்பு சொல்லும் அஹிம்ஸா தருமமும்
போர்வெறி மூளையிற் புகமாட் டாதே...

**ஜோதி :** தீயை நீரும், தீமையை நன்மையும்
பொய்யை மெய்யும், போக்குவ துண்மை.
அரக்க பலத்தை ஆத்தும சக்தியே
நீக்கிடும்; அதனை நேரே விளக்கிய
பாரத சக்தி பல்லாண்டு வாழ்க!
அஹிம்ஸையே ஆத்தும சக்திக் குயிராம்.
அதுவே காந்தியின் ஆருயிர்க் கொள்கை.
அவர்போல் எளிமையும் அன்பும் பூண்டு
வறுமை மடமை யடிமைநோய் தீர
எல்லா வுயிர்க்கும் இனிதே செய்யும்
அறமே யென்றன் ஆருயிர்ப் பணியாம்.

மன்னுயி ரெல்லாம் வாழ,
மறவலிக் கொடுமை வீழத்
தன்னுயிர் கொடுத்தான், புத்த
தருமமே யுருவெ டுத்தான்.
கன்னத்தில் அடித்த வர்க்கும்
கருணைசெய் ஏசு போன்றான்—
மன்னுல கெல்லாம் போற்றும்
மகாத்துமன் வாழ்க மாதோ!

கண்ணன்: பேரிடத் தன்பு வேருடன் ஊன்றினை.
அந்த வேரை அசைக்க மாட்டேன்.
எனினும் பொதுநலம் எளிய தன்று.
அளந்து தெரிந்தே அடிவைத் தேகு!
மதுரைக் கேகி, வளர்த்த தந்தை
ஆறுத லாகக் கூறிச் சிலமொழி,
மங்கள மென்னும் மாசிலாத் திருவின்
செய்தி யறிந்து செய்வன செய்வாய்!

ஜோதி: நீசெல் அன்பா, நிசமறிந் தெழுது!
நண்பா சத்தியம்! நானினி யென்றும்
மாதர், மணவினை, மக்கள் என்று
மயங்கி வாழ்வை மண்ணிற் கொட்டேன்.
தேச மெல்லாம் திருமனை யாகும்.
தேச பக்தியே திருவார் மனைவி
தேசத் தொண்டென் ஆசைத் தொண்டாம்
தேச பக்தியே தெய்வ பக்தியாம்.
நாடு வாழ, நந்தமிழ் வாழ
வீடு துறந்தேன்; வேகமாய்ச் சென்று
தந்தையைத் தேற்று! தங்கையுன் மனைவி.
அவளுடன் கூடி யன்பாய் வாழு!
தோட்டந் தன்னில் இராட்டை சுழல்க!
கதர்த்தறி நெய்க; கல்வி பரவுக!
பெண்மை சுதந்தர பேரிகை முழங்குக!
திருக்குல நேயர் திருவுற வாழ்க!
இந்தப் பணிகளை இயற்றிநீ யாங்கே
மாசில் லாத மனையறம் போற்றுவாய்.
இனியென் கவலை ஈசன் கவலையே.

அவனருள் ஆகிய அன்னை சக்தி
நாடாய் நின்றெனை 'வாடா!' வென்றான்.
கோடி ஜனங்களின் கூக்குரல் கேட்கிறேன்.
எதிரே முழங்கும் எறிதிரை, மணல்மேல்
வந்து வந்து வரையுமோர் செய்தி.
இத்திரைக் கெதிரே எத்தனைத் தலைவர்—
*பாலும், திலகரும் லாலும், தாசும்
சிதம்பரம் பாரதி சிவாவுடன் ஐயரும்,
ராஜனும், நேருவும், ராஜா ஜீயும்—
மாதா வேள்வி மந்திர மொலித்தனர்.
சத்தியாக் கிரகச் சங்கு முழக்கி
நாட்டை யழைத்தார் நமது மகாத்மா.
தன்னலம் விடுத்துப் பொதுநலம் புரியவே
தியாகம் செய்யெனக் கூவுமிக் கடலே.

**கண்ணன் :** நாட்டறங் காக்க நாடிப் பணிசெய்!
வீட்டறங் காத்துநீ விரும்பிய பணிகளை
வள்ளி யுடனே வழுவறக் காப்பேன்.
வீர மணியாய் விளங்குவாய் நீயே!
எனினும் எனது கடிதம் கண்டபின்
மங்களம் பாலுன் மனது மாறுக!

**ஜோதி :** உன்சொற் படியே உண்மை யானால்,
" தியாகவாழ் வுடனே தேசப் பணிசெய்!"
என்றவ ளுக்குநீ இயம்பிட வேண்டும்
தந்தைக் காறுதல் சாற்றிட வேண்டும்.
நண்பருக் கெனது நல்லுரை சொல்வாய்!

**கண்ணன் :** எனது கடமை யினிதே செய்வேன்.
உன்னிலை யினிமேல் என்ன வாகுமோ?

**ஜோதி :** "பொது நலம்" என்ற புகழ்பெறுந் தினசரி
எனது சேவையை ஏற்றது நேற்றே.
அதற்கே யெழுதுமென் அன்புக் கடிதம்.

---

* பி. ஸி. பால், லோகமான்ய திலகர், லாலா லஜபதி, சித்தரஞ்ஜனதாஸ், சிதம்பரம் பிள்ளை, சுப்ரமண்ய பாரதி, சுப்ரமண்ய சிவா, வ. வெ. சுப்ரமணிய ஐயர், டாக்டர் ராஜன், ராஜன் பாபு, மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு. ராஜாஜி.

பொதுநலம் எனது புதுநல பேரியாம்.
அதன்வழி கொள்கையை அன்புடன் பரப்பிச்
சமயம் வந்ததும் சாந்த மாகத்
தியாகத் தீயில் தீரமாய்க் குதிப்பேன்.
தாயெனை யழைத்தாள்...நீயினிச் செல்வாய்!

**கண்ணன் :** சென்று வருகிறேன்...சீரிய நண்பா!

**ஜோதி :** எந்தாய் வாழ்க...வந்தே மாதரம்!

[கண்ணன் செல்லல்; ஜோதி கடலை நோக்குகிறான்.]

கண்டமாய் விளங்கிய கனிதமி ழகத்தை
உண்ட கடலே! உலகையுன் அலைகள்
பாய்ந்து பாய்ந்து பையப் பைய
விண்டு விழுங்கி வீறிடு கின்றவே!
பூமணம் காற்றிற் போவது போலே
காலத் துடனே ஞாலமுஞ் செல்லும்.
காலத் தேரில் காதலோ டேறினேன்,
தியாக பூமியைச் சேர்ந்தே னின்று,
ஆக்கமும் அழிவும், தூக்கமும் விழிப்பும்,
இரவும் பகலும், இறப்பும் பிறப்பும்
இயல்பாம் உலகை எதிரே கண்டேன்.
காலத் தேரின் கணக்கை யறியேன்;
நாளை யெங்கு நடத்துமோ காணேன்.
வாழ்வின் விளக்கை ஊழ்வினை யணைக்குமுன்,
இருளும் வறுமையும் இருக்கு மிடமெலாம்
ஒளியும் உணவும் உதவ முயல்வேன்.
இதயக் கடவுள் என்னை நடத்துமே...!

[ஆ அதோ கூட்டம்! அழைப்பு வந்தது!
சுதந்தரப் பாட்டு! தொண்டர் கூட்டம்!
எந்தாய் வாழ்க! வந்தே மாதரம்.]

(கூட்டத்தை நோக்கி ஓடுகிறான்.)

## இரண்டாங் காட்சி

[மதுரை. சிவத்தின் மாளிகை. சமையல் அறை. அப்புவும் சீனுவும் இரகசியமாகப் பேசுகின்றனர்.]

அப்பு : கக கக காரியம் ஆனதும்,
இஇ இங்கே இருக்க மாட்டேன்...
பப பப பாதகி, ராக்ஷசி...
பபர்த் தாவைப் பைத்திய மாக்கிஞள்...
பொபொ பொபொ போட்டோ எடுத்து
பெபெ பெபெ பேபரில் போட்டு
கக கக கலியாண மென்று
திதி திதி திரிசமன் பண்ணிஞள்...
மம மம மங்களக் கிளியை
கொகொ கொகொ கொட்டிலில் அடைத்து
பொபொ பொபொ பொன்னு வுடனே...

சீனு : தெரிந்தது தானே ; செப்புவ தென்ன?
புலியின் கையில் புள்ளிமான் பட்டது.
பாவம் மங்களம் பட்டினி கிடக்கிறுள் !
பெரியவ ருக்கும் பிடித்தது பைத்தியம்—
பொன்னு செய்த புன்செய லாலே,
சுந்தரி செய்த சூதி ஞலே—
நாத்திகன் இவளை நாஸ்தி பண்ணி
முல்லைக் கொடியை மோகமாய் வளர்க்கிறுன்
கொழுநன் வாசலில்! கொல்லையில் மங்களம் !
வீடு முழுதும் வேசைக் கூத்து...!
இந்த வீட்டில் இனியார் இருப்பார்?
அருளினி யில்லை; இருளே இருக்கும் !

அப்பு : சொசொ சொசொ சோதியை நினைத்தே
கக கண்ணீர் விடுகிறுள் கன்னி.
கொகொ கொகொ கொலைகார முண்டை
சொசொ சோற்றில் விஷந்தரச் சொன்ஞன் !

சீனு : அவரவர் கொடுமையை அனுபவிப்பார்.

அப்பு . நந நான் விவிட மாட்டேன்...
கொகொ கொல்லைக் ககக் கதவை...

[சாடை காட்டுகிறுன்]

சீனு : சமயம் பார்த்துச் சந்தடி யின்றி
கதவைத் திறந்து வை! கரிய இரவில்
பின்புறம் வந்து பெண்ணையென் வீட்டில்
கவனமாய்ச் சேர்த்தால் கண்ணன் இருக்கிறன்...
பிறகு நடப்பதைப் பின்னே பார்ப்போம்.
சிவனையும் கண்போல் கவனிக்க வேண்டும்.

அப்பு : அஅ அஅ அப்படிச் செய்வோம்.

["ட்ரங் டிரங்." மணி அழைக்கிறது]

கக கக காப்பி மணியிது...

சீனு : கூக்குரற் போடுமுன் கொண்டுபோ விரைவாய்!
பின்னே எல்லாம் பேசிய செய்வோம்...
அடக்கம், அடக்கம், அமைதி அடக்கம்.

[செல்கின்றனர்]

## மூன்றுங் காட்சி

[மேகங் குமுறி மின்னியிடிக்கிறது. மதுரைத் தெருவில் பித்தர் கோலத்துடன் சிவம் ஆடிப்பாடி வருகிருர்.]

சிறுவர் : பித்துக் குள்ளி! பித்துக் குள்ளி!

சிவம் : பித்தனைப் பாருங்கோடீ—வேதாந்தப்
பித்தனைப் பாருங்கோடீ...

செத்தவர் போலிருப்பான்—அவன்
சித்தம் சிவன்போக்கே.

பொத்த லுடைதரிப்பான்—மனத்திலோர்
போதக்கனல் வளர்ப்பான்...

சத்தமில் லாதிருப்பான்—மிகப்பல
சாத்திரங் கற்றிருப்பான்—இந்தப்

பித்தனைப் பாருங்கோடீ—வேதாந்தச்
சித்தனைப் பாருங்கோடீ...

தெருவார்: ஹி ஹி! ஹி ஹி! என்னே காலம்!
எப்படி யிருந்தவர் எப்படிப் போனர்...

**ஒருவர் :** மழைவரு தையா வாரும் உள்ளே!

**சிவம் :** மங்களம் கண்ணில் மழைமழை மழைமழை !

**இன்னொருவர் :** பெண்ணை எண்ணிப் பித்தா ஞரோ?

**ஒருவர் :** பாவம் கொஞ்சம் பழையது போடுவோம்!

**சிவம் :** புதியதைப் போடு! பழையதைத் தேடு!

**ஒருவர் :** நல்லது கேளும்!

**சிவம் :** சொல்வது கேளும்

நல்லது பொல்லதில்லை—அவனுக்கு
நாணமும் இல்லையடா...
அல்லும் பகலுமில்லை—நெஞ்சில்
அன்பும் பகையுமில்லை...
இல்லும் உலகுமில்லை—அவன்
எப்படியும் இருப்பான்...
வெல்லமும் வேப்பிலையும்—சேர்த்து
மென்று விழுங்கிடுவான்...
பித்தனைப் பாருங்கோடீ—சிவானந்தப்
பித்தனைப் பாருங்கோடீ...

[மழையில் குதித்துக்கொண்டே ஓடுகிறார்]

## நான்காம் காட்சி

[சுந்தரி கூடம். பொன்னுவும் சுந்தரியும் சோபாவில் சாய்ந்து ரேடியோ கேட்கின்றனர்.]

**சுந்தரி :** (மனத்துள்)

நெஞ்சு துடிக்குதே, நிம்மதி யில்லையே!
இளமை விரும்பும் இன்பங் கண்டேன்,
முதுமையை முற்றும் முறியடித் தோட்டினேன்,
அடங்காச் சிறுமியை அடைத்தேன் சிறையில்;
செல்வ மெல்லாம் சிக்கெனப் பற்றினேன்,
பொறிபுலன் விரும்பும் போகந் துய்த்தேன்,
பொன்னுவை யடைந்தேன் ; என்னினு மெனக்கு
வரவரக் கவலையே வளரு கின்றதே!

பொன்னு . என்ன சிந்தனை? வன்னக் கிளியே!
வேதனை யெல்லாம் விட்டுமுன் செல்வோம்;
உலகும் உண்மை, உடலும் உண்மை,
நீயும் உண்மை நானும் உண்மை,
காதலும் உண்மை, கலக்க மேனினி?

சுந்தரி : தெருவெலாம் பைத்தியம் திரிவதைக் கண்டு
துஷ்டர் நம்மைத் தூற்றுகின் றாராம்,
கிழவரை நானே கெடுத்துவிட் டேனும்;
மகளை உள்ளே மடக்கி னேனும்;
ஊரை ஏய்க்கப் பேரைப் பண்ணி
உன்னுட னே நான ஒன்றுபட் டேனும்!

பொன்னு : போதுபோ காத பொதிக்கழு தைகள்
கட்டும் கதைகளைக் கவனிக்க வேண்டா!

[இச்சமயம் சிவம் வாசல் கதவைத
தட்டுதல்]

சிவம் : அம்மா மங்களம் அடை மழை சடசட....
படபட பட்பட் டபடப தடதட....

சுந்தரி : ஐயோ வந்ததே அசட்டுப் பைத்தியம்!
முன்னம் புறமும், பின்னம் புறமும்
கதவைத் தட்டிக் கழுத்தை யறுக்குமே!

பொன்னு : பேசா மலிரு; பிதற்றி யொழியும்!

[மீண்டும் கொல்லைக் கதவுச் சத்தம்]

சிவம் : கடகட கடகடா தட்டுத் தடதடா
கொட்டு கொட்டு கொட்டு மழையே!
கதவைத் திறடீ கன்னித் தமிழே
உடைத்துப் புகுவேன உடனே திறப்பாய்!

சுந்தரி : சங்கடக் கிழடு சாக வில்லையே!

பொன்னு : கிட்ட வந்தால் சுட்டுப் போடுவேன்,
பயப்ப டாதே பச்சைக் கிளியே!
இன்றே திருப்பதிக் கிழுத்துச் சென்று
குரங்குக ளுடனே திரிந்திட விடுவோம்!

சுந்தரி ! துப்பாக்கி யுடனே தொடர்ந்துவா, பொன்னு!

[இருவரும் துப்பாக்கியுடன் கொல்லைப்
புறம் செல்லல்]

## ஐந்தாம் காட்சி

[கொல்லையில் மூங்கிற் கதவடைத்த சிற்றறை. மங்களம் வாடி வருந்துகிறாள்.]

**மங்களம் :**

பெண்ணெனப் பிறந்து தாயைப்
பிரிந்தொரு பேயின் கையில்
எண்ணிலாத் துயர் பொறுத்தேன்
எரியினிற் புழுவைப் போலே ;
புண்ணெலாந் தீர வுன்னைப்
புகலென நம்பி யுள்ளேன் ;
கண்ணிலாக் குழவி போன்றேன்
காப்பதுன் பாரம் வேலா...!

படாத பாடு பட்டுப் பட்டு
நலியு மெனது கலிதீர், குகனே !
முன்வினைப் பயனால் மூண்ட துயர்களோ ?
என்வினைப் பயனா யிருப்பினும் உன்னை
முறையிடு மன்பர் குறைகளை யாயோ ?
எங்கே யுன்னருள் ? யிறைவா, முருகா !
செப்புவைத் தாடும் சிறிய வயதிலே
'கண்ணே முத்தே' கனியே என்றெனைக்
கொஞ்சிய தாயைக் கொடுமையாய் இழந்தேன் ;
கற்புத் தெய்வம் காத்த மனையில்,
வந்தாள் அரக்கி வஞ்சம் புரிந்து
வறுமை தனிலே வாடிய தாடகை,
பணத்திற் காகப் பகட்டுகள் செய்தாள் ;
தரங்கெடு நாத்திகத் தத்தாரி யொருவனைக்
கூடி யிந்த குடியைக் கெடுத்தாள் ;
அப்பனைப் பைத்திய மாக்கி விரட்டினாள் ;
திருமண மென்றோர் சிறுவிருந் திட்டாள் ;
ஊரார் நம்பப் பேரைப் பண்ணி
என்னையிச் சிறையி லிட்டு வதைத்தாள் ;
குடும்பச் சொத்து கொள்ளை போனதே !
வீட்டில் அதர்மம் விளையாடு கின்றதே...!
கண்பா ராயோ ? கதிர்வேல முருகா !
ஜோதியை நம்பித் துடிக்குதென் னுயிரே!

இரவி வந்தால் இருளெலாம் போகும் ;
சென்னைசென் றவரை இன்னுங் காணேன் !
இவர்கள் கட்டி எழுதிய பொய்யைப்
பத்திரி கைகளிற் பார்த்ததை நம்பி
எனைவெறுத் தாரோ ?...மனைவெறுத் தாரோ ?
துடிக்குதென் னுவி தூண்டிற் புழுப்போல்...!
அப்பா நிலைமை எப்படி யுளதோ ?

[கொல்லைக் கதவைத் தட்டி]

**சிவம் :** மங்களம் மங்களம், கண்ணே மங்களம் !

**மங்களம் :** அப்பா ! அருமை அப்பா அப்பா...!

**சிவம் :** கதவைத் திறடி கட்டிக் கரும்பே...!

**மங்களம் :** எப்படித் திறப்பேன் இரட்டைப் பூட்டு ?
அப்பூ அப்பூ...! அப்பா வந்தார்

[அப்பு ஓடி வந்து]

**அப்பு :** தெதெ-தெரிந்தது, திதி திறக்கிறேன்...

**மங்களம் :** எப்படிப் போனுய் இப்படி யாவுனைப்
பார்க்க வேண்டுமென் பாவி விழிகள் !

[சீனு கொல்லை வழியே விரைந்து நுழைதல்]

**சீனு :** இதிலே எஜமான் கையெழுத் திடட்டும்...!

**சிவம் :** கையெழுத் திட்டேன் தலையெழுத்தைப் பார்.

**மங்களம் :** அப்பா அப்பா...!

[தந்தையைத் தழுவி அழுகிறுள்]

**சிவம் :** அருமை மங்களம் !
கலியாண மானதா ? கண்ணே, முத்தே !
நலங்கு பாடு. நானும் கேட்கிறேன்.

**மங்களம் :** ஐயோ வாழ்க்கை அழுகை யானதே,
வீடெலாங் கொள்ளை ; வேசைக் கூத்து
செல்வ மெல்லாம் திருடர் கையில்,
உய்வழி யுண்டோ, தெய்வமே புகலாய் !

**சீனு :** மெய்வழி யன்பர் உய்வழி யுண்டு,
பயப்ப டாதே பகவான் காப்பார் !
வீட்டுச் சொத்தின் விபரமிக் குறிப்பாம்.

உனக்கே யெல்லாம் உரிமை யாகும்!
காரிய முள்ளது கடிதிற் செல்கிறேன்,
சத்த மிலாதிவர் சாப்பிடச் செய்வீர்!

[சீனு வெளியே ஓடுகிறான். அப்பு உணவு தருதல்]

**சிவம் :** பசிக்குத் தக்க ருசியான உணவு!

**மங்களம் :** செல்வ மிருந்துந் தெருவோ டலேந்தாய்.
பித்தாய்ப் பிதற்றினாய், பெருந்தகை அப்பா!

[அழுதல்]

**சிவம் :** கொட்டு கொட்டு கொட்டு கண்மழை!
சம்பந்தி விருந்து சாப்பிடு கின்றேன்.
வாடீ மங்களம் மணமக னுடனே!

**மங்களம் :** மணமு மில்லே மகனு மில்லே!
அப்பா வுன்னை இப்படி யாக்கிய
கொடியர் வீட்டிற் கொட்ட மடிக்கிறார்!
ஏற்ற மிழுக்கும் எளிய மாடுபோல்,
செக்கு மாடு போல், சீவ னற்றுப்
பார மிழுக்கும் பஞ்சை மாடு போல்
உழைத்துழைத் திவர்க்கே ஓடாய்ப் போனேன்!
செல்வத் திருவைச் செருப்பென மதித்தனர்.
துக்க மெல்லாம் யாரிடஞ் சொல்வேன?

**சிவம் :** சுகதுக் கத்தை தூவெனத் தள்ளு!
வெய்யி லாலே மழையும் பெய்யும்.

**மங்களம் :** நமது வீடிது...நமக்கே யுரிமை
உரிமை யிழந்து வறுமை சுமப்பதோ?
வீட்டைக் காப்போம், விடுதலை முழக்குவோம்.
அன்னியப் பேய்களை அடியோ டொழிப்போம்.

[சுந்தரி, பொன்னு திடீரென வருதல்]

**சுந்தரி :** மோசம் போனது! மோசம் போனது!

**பொன்னு :** திக்குவாய் மடையன் திறந்தான் கதவை!

**சுந்தரி :** யாரிந் நாயை யவிழ்த்து விட்டது?

**பொன்னு :** யாரைக் கேட்டு சோறு தந்தாய்?

**அப்பு :** இஇவ் வீட்டின் எஜமான் இவரோ!

மங்களம் : யாரென் வீட்டில் அதர்மப் பேய்கள்?
கடவுளே யிந்தக் கொடுமையைக் காணாய் !

பொன்னு : சாமி கடவுள் சாத்திர மென்றே
பிதற்றியுன் அப்பன் பித்த னானான்.

மங்களம் : என்னைப் பெற்றாள், இலக்குமி யன்னை
அருந்ததி போன்றாள், அன்புத் தெய்வம்,
கணவனுக் கேற்ற குணவதி யானாள்.
வாசுகி போன்ற மறுவிலா நங்கை ;
அருளும் திருவும், அறிவும் அடக்கமும்
பொலிந்த நல்ல புண்ணியத் தெய்வம்
விளங்கிய வீட்டில் வேசை புகுந்தாள் ;
கணவனைக் கெடுத்தாள் ; கன்னியை அடித்தாள்
விடுதலைப் பேசி பெண்மையை விற்றாள்
அவளைக் கண்டால் ஆத்திரம் பொங்குதே !

சுந்தரி : குலைத்தது போதும் கொல்லை நாயே !

பொன்னு : தூ தூ நாயே, போபோ வெளியே !

மங்களம் : நீபோ வெளியே, நீசப் பதரே !

சுந்தரி : கணவனை இப்படிக் கடிபவள் பெண்ணா ?

மங்களம் : கொழுநனை அப்படிக் கொன்றவள் பெண்ணா ?
ஒன்று சொன்னால் ஒன்பது சொல்வேன் ;
உதட்டில் நகையும், உளத்தில் பகையும்
வாயிற் பொய்யும் வயிற்றிலே பல்லும்
கொண்டென் மாசிலாக் குலத்தைக் கெடுத்தாய் !

சுந்தரி : பெண்ணாய்ப் பிறந்து பேயாய் நடித்தாய் !

மங்களம் : பேயாய்ப் பிறந்து பெண்ணென நடித்தாய் !

சுந்தரி : கொல்லு, கொல்லு கொள்ளிவாய்ப் பிசாசை !
[அடிக்கப் போகிறாள்]

மங்களம் : பாதகீ, யுன்னைப் பகவான் கேட்பார் !

சிவம் : [குறுக்கே விழுந்து]
சக்குதே எரிமலை கந்தகத் தீயை !
[உள்ளே ஓடுகிறார்]

பொன்னு : பைத்தியம் உள்ளே பாய்ந்தது...துரத்து !
[பொன்னு துரத்திச் செல்கிறான்]

மங்களம்: அப்பா உன்னை அடிக்கப் போகிறார்
சொல்லரு கொடுமை.........!

[உள்ளே போக முயல்கிறாள்]

சுந்தரி: நில்லடீ அடிமை !

மங்களம்: யாரடீ அடிமை? யாருடை வீடிது ?

சுந்தரி: வீடென் வீடு...வீதி நாயே !

மங்களம்: இந்த வீடென் சொந்த வீடு.

சுந்தரி: தகரங் கெட்டுத் தங்க மாமோ ?

மங்களம்: குப்பை யுயர்ந்து கோபுர மாமோ ?

சுந்தரி: அழுந்த மிதித்துனை அப்பள மாக்குவேன்.

மங்களம்: அக்கிர மத்தை அம்பல மாக்குவேன்,

சுந்தரி: இங்கே இனிநீ யிருக்க மாட்டாய்.

மங்களம்: உரிமை யெனக்கென ஊரெலாஞ் சொல்லும்.
உனது நாற்றம் ஊரெலாந் தெரியும்.

சுந்தரி: சிரித்துக் கெட்டாள் திரௌபதை யன்று ;
வாயாற் கெட்டாள் மங்கள மின்று.

மங்களம்: சுந்தரி கெட்டாள் சுதந்தரத் திமிரால் ;
உயிர்போ னாலும் உரிமையை நாட்டுவேன்.

சுந்தரி: சுட்டுக் கொல்லுவேன், துட்டப் பேயே !

[அடிக்கப் போகிறாள், உள்ளே
சிவம் ரகளை செய்தல்]

பொன்னு: ஐயோ செத்தேன், ஐயையோ செத்தேன் !
சுந்தரீ, சுந்தரீ !

சுந்தரி: வந்தேன், வந்தேன்
சென்று வந்து செருப்பா லடிக்கிறேன்.

[உள்ளே ஓடுகிறாள்]

மங்களம்: எத்துயர் வரினும் எதிர்த்து வெல்லும்
சக்தி யருளாய் சரணம் முருகா !

[வருதல் அப்பு, சீனு]

அப்பு: சிசி சிசி சீக்கிரம், சீக்கிரம்

சீனு: மங்களம் வாவா !

மங்களம் : எங்கே செல்வது......?

சீனு : வள்ளிவீட் டிற்குத் துள்ளி யோடு !
இங்கே யிருந்தால் இறப்ப துறுதி;
ஓடு விரைவாய்! ஓடு விரைவாய்!

மங்களம் : முருகா, முருகா, சோதி முருகா!
எத்தனை யின்னல் இச்சிறு வாழ்விலே!
சீனு, வீட்டைத் திறமுடன் காப்பாய்...!

[ஓடுகிறாள்]

சீனு : வீரர் போலே வீட்டைக் காப்போம்.

சீனு : சிவாஜி வேலை, செய்வோ மின்று!

அப்பு : தத தத தலையணை போடு !

சீனு : முல்லைப் பித்தன் முள்ளைக் கொஞ்சுக!
சுந்தரி மெத்தையிற் சுகிக்கும் வாழ்வு
முள்ளின் மேலே உள்ள தென்றறிக!

[தலையணை மேல் முள்ளைப் போட்டுப்
புடவையை மூடுதல்]

அப்பு : பப பப பலே வேலை. [திரை]

## ஆறுங் காட்சி

[அலங்காரக் கூடம். சிவம் சாமான்களை எடுத்தெறிந்து, பாடியாடிக் கூத்தாடுகிறான்.]

பொன்னு: போகி றாயா? சாகி றாயா?

சுந்தரி : மானம் போனதே மந்தி...போபோ!

சிவம் : தந்தினத் தானனே—தனதன
தந்திரக் கோனனே
மந்திரக் கோனனே—இந்த
மந்தியைப் பாருமையா!

[பொன்னுவைப் பிடித்துக் குலுக்குகிறான்]

பொன்னு: இதென்ன தொல்லை...!

சுந்தரி : இரண்டு கொடுங்கள்!

**பொன்னு:** கட்டிப் போட்டுச் சுட்டுப் போடுவோம்!

[வருதல் அண்ணு]

**பொன்னு:** அண்ணு வாவா!

**அண்ணு:** ஆஹா வந்தேன்;
யாரிதை உள்ளே யழைத்து வந்தது?
வரவரப் பைத்தியம் வலுத்துப் போனதே!

**சுந்தரி:** காண்டித் தடியன் கதவைத் திறந்தான்.

**அண்ணு:** பைத்தியக் கிழவரைப் பதமாய்க் கடத்துவேன்.

**சுந்தரி:** ஆளைப் பாரும் ஆந்தை போலே!

**சிவம்:**
அன்னமென் றேகினைத்தேன்—என்வீட்டில்
ஆந்தை புகுந்ததையா
சொன்னமென நினைத்தேன்—எல்லாம்
சுட்ட கரித்திரளே
கன்னமென நினைத்தேன்—இது
கற்றூழை யாச்சுதையா
என்ன உலக மென்றே—கோணுரே
எச்சிலுமிழ்ந் திடுவோம்

**சுந்தரி:** எதற்கெடுத் தாலும் இப்படிப் பாட்டு!

**அண்ணு:** (சிவனிடம்)
டார்வின் சொன்ன தருமப் படியே
மந்தியி னின்று மனிதன் வந்தான்.
தரும மெல்லாம் தலை கீழாகி
மனித னிப்போ மந்தி யாகிறுன்.
மாமா வாரும் மனிதக் குரங்குகள்
உள்ள வீட்டில் உதைவாங் காமல்,
உண்மைக் குரங்குக ளுடனே யிருப்போம்.

**சிவம்:** மங்களம் மங்களம் மரகதக் கிளியே!
அழாதே கண்ணே அப்பச்சி தாரேன்;
எங்கே குழந்தை?

**சுந்தரி:** எமலோ கத்தில்!

**சிவம்:** ஐயோ மகளே! ஹாஹா சிவனே!
எப்படிப் போனுள்?

**சுந்தரி:** ஆற்றில் இறந்து!

**சிவம் :** ஆழியைக் குடித்த அகத்தியர் போலே
ஆற்றைக் குடிப்போம்...அவளைக் கொணர்வோம்.

**அண்ணு :** தக்க யோசனை...தாவிச் செல்வோம்!

[சிவனை அழைத்துச் செல்லல்!

**பொன்னு:** இந்த வீட்டில் இருக்க வேண்டா.
கேளாய் கண்ணே......!

**சுந்தரி :** கேட்கிறேன் சொல், சொல்...]
பாட்டும் பரதமும் பாவையர்க் கழகு ;
நாரிக் கழகு நடிகை யாதலே,
சிந்தைக் கினிது சினிமாச் சுருளே,
பணக்குவை தருவது படத்தொழி லொன்றே.
ஒன்று போட்டால் ஒன்பது லாபம்.
ஆடல் பாடல் அழகெலாந் தேர்ந்த
பக்கா நடிகர் பழக்குவர் உன்னை,
ஆகவேண் டியதை அண்ணு செய்வான்.
பணத்தைப் பேசும் படத்திற் போட்டுக்
கலைவனம் காண்போம் கண்மனங் குளிர
நானு நீயும் சேர்ந்து நடிப்போம்,
நீல மயிலென நீநடஞ் செய்யக்
கண்டால் என்மனங் களித்துப் பொங்குமே.
ஊரெலாம் உன்பெயர் ஓங்கி ஒலிக்கும்.
சுவரெலாம், இதழெலாம் உன்படம் சொக்கும்;

**சுந்தரி :** வாய்பட்டியினை வஞ்சம் தீர்த்துச்
சென்னை சென்று செய்வன செய்வோம்.

[கொல்லைப்புறம் செல்லல்]

**மில்லர் :** என்ன செய்தி, கன்னியைக் காத்தீர்?

**சாரணர் :** பயங்கரச் செய்தி! பயங்கரச் செய்தி!
ஆற்றிற் கக்கரை அமைந்த வனத்தில்
ஜோதியின் வீட்டில் சோரர் புகுந்தனர்.
துப்பாக்கி யாலே சுட்டார் நால்வரை.
கல்லூ ரியிலே படித்த கண்ணன்
மனைவி யுடனே மயங்கி விழுந்தான்.
திருடருள் ஒருவன் தீர்ந்து போனான்.
தலைடைக் காணோம் சாவுடல் கண்டார்.
வக்கீல் சிவனார் மகளும் அங்கே
இருந்தே ஆறறில் வருந்தி வீழ்ந்த
செய்தியைக் குமாஸ்தா செப்பக் கேட்டோம்.
திருடரைத் தடுத்த சேவகர் வீழ்ந்தார்.
தீயிட் டெரித்தனர் திருடரவ் வீட்டை.
போலீஸ் காரர் புலனறி கின்றார்.

**மில்லர் :** (மனத்துள்)

[மங்களம் முகமாறுதலைக் கண்டு]

அதற்கும் இதற்கும் அணைப்பொன் றுள்ளது.
உண்மை தெரிந்தது, உளத்தில் வைப்போம்.
பெண்ணவன் முகத்திலே பெருங்கதை காணுதே!
கவலையால் மெலிந்தாள், கதையினி வேண்டா.
சாரணர் சொன்ன சரித்திரம் நன்று!
உலகின் பயங்கர உண்மை தெரிந்தது.

[சாரணரை நோக்கி]

வெள்ளச் சேதம் விளைந்த பக்கம்
சென்றுநல் லுதவி செய்வீர்! செல்வீர்!

**சாரணர் :** ஊருக் குதவியே உயிர்வாழ் வெமக்கே.
வந்தனம் தந்தையே, வந்தனம் தாயே!

**மில்லர்கள் :** இரங்குவோர் வாழ்க; இரக்கம் பெறுவார்!
உதவுவோர் வாழ்க; உதவி பெறுவார்!
ஆண்டவன் அருளால் அன்பர் வாழ்க!

**சாரணர் :** அன்பு வாழ்க...அன்பர் வாழ்க!

[செல்லல்]

**தந்திச் சேவகன் :** வந்தனம் ஐயா !

**மில்லர் :** வருக ; தருக !

[தந்தியை உடைத்துப் பார்த்து]

நல்ல செய்தி ; நமது நண்பன்,
அப்துல் லாகான் அமர்க் களத்தில்
இசைமிகப் பெற்றான் ; இந்தியா வந்தான்.
பாது காப்புப் படை திரட்டினன்.
கொலைக்குற் றங்கள் கொடுமையா யிருக்கும்
இங்கவனை இருப்பான். இறைவர் ஆணை—
ஒற்றர் தலைவனாய் உழைப்பான் இனிமேல்.
குற்றம் செய்வோர் கூட்டம் அவனைத்
தப்புதல் சாவைத் தப்புத லாகும்.
இங்கே விரைவில் இருப்பான் அப்துல்.

**திருமதி மில்லர் :** அன்பு ஜோதியும், அப்துல் லாவும்
சிறந்த நண்பர் ; சீரிய வீரர் !

**மில்லர் :** எளியர் சேவை இயற்றும் ஜோதியும்,
வீரப் பணியே விரும்பும் அப்துலும்
நம்முடன் வசிக்கும் நாளை அழைப்போம்!

[டாண் டாண் என்று
மணி யடிக்கிறது.]

**மில்லர்கள் :** அன்பு மலரே, ஆண்டவன் இச்சை
கடமை செயயெனக் கட்டளை யிட்டது.
எமது கடமை யியற்றி வருவோம்.
நிம்மதி யாக நீயிங் கிருப்பாய்.
நல்ல தோழி நயமுடன் வந்து
இனியன சொல்வாள்.

**மங்களம் :** இருக்கிறேன், அப்பா !
கடமை காக்கக் களிப்புடன் செல்வீர் !

**திருமதி மில்லர் :** கண்மணிச் செல்வீ !

[முத்தமிட்டு, இருவரும் செல்லல்.]

மங்களம் : கருணைக் கடவுளே !
அன்பைக் காட்டினை, அருளை விளக்கினை ;
உனக்கே வாழ்க்கை, உனக்கே நினைப்பு !
கள்ளர் கைப்பட்டு வெய்ய நொந்துபர் தாங்கொணுமல்
வெள்ளத்தில் விழுந்தேன் ; என்னை விடுதலை தந்து காத்தாய்.
கள்ளிர வினிலும் சோதி நலமுறக் காட்டும் உன்னை
உள்ளத்தில் வணங்குதற்கே உயிர்களினி வாழ்வதாமே !

## இரண்டாங் காட்சி

[மதுரை போலீஸ் ஸ்டேஷன். ஆயுத அணிகள் காண்கின்றன. வட்ட மேஜையைச் சுற்றி நாற்காலிகள். அப்துல்லா கான் ஒரு வெல்வெட் நாற்காலியில் அமர்ந்திருக்கிறான். இரண்டு சப் இன்ஸ்பெக்டர்கள் பக்கத்தில் அமர்ந்திருக்கின்றனர். சீனு திண்ணையில் இருக்கிறான்.]

அப்துல் : வரவரக் கலகம் வலுத்தது நாட்டில்.
தீயுடன் காற்றும் சேர்ந்தது போலே,
சாதிப் போருடன் சமயப் போரும்
சேர்ந்து நாட்டைச் சிதைத்தது பின்னும்.

ச. இன்ஸ்பெக்டர் : தீயும் காற்றும் சேர்ந்தது போலே
கட்சிக் கூட்டமும் காரப் பேச்சும்,
வகுப்புச் சினத்தை வளர்த்தன ஊரில்
வீரப் புகைச்சல் விடாது போலும...!

அப்துல் : வீரமு மில்லை, காரமுமில்லை
மனத்தில் ஒன்ருர், இனத்தில் ஒன்ருர் ;
வெற்றுரை பெருகி ஒற்றுமை யின்றியே
இடிப்போர் முன்னே இழிந்ததிந் நாடு !
பட்டினி யிருந்தும், பரிந்து பேசியும்
ஒற்றுமை நாட்ட உயிரைக் கொடுக்கும்
சீரிய ருடனும் சேர்ந்திவர் வாழார் ;
ஒருவீட் டாருள் ஒன்பது தனிக்குடி !

ச. இன்ஸ்பெக்டர் : ஒருவரை யொருவர் அருவருக் கின்ருர்.
எத்தனை இடர்கள் எழுந்தன சுற்றும் ?

**அப்துல் :** கோயிலும் மசூதியும் கொள்வதோர் கடவுள்.
கீதையும் குரானும் போதனை செய்வதும்
அன்பும், வாய்மையும், அடைக்கல வாழ்வுமே.
சரிநிக ராவதே சகோதரர்க் கழகு
பலசா லிக்கே உலகில் மதிப்பாம்.
சிங்கமும் சிங்கமும் சிநேக மாகலாம்.
புலியும் பசுவும் பொருந்துதல் அரிது.
அனைவரும் இங்கே அன்பு வீரராய்
ஒற்று மையுடனே, உறுதி யுடனே,
பிரிவினை யன்றி ஒருநாட் டுணர்வுடன்
வாழலாம் என்பர் வஞ்சமில் மேலோர்.
அதையறி யாமல் உதையில இறங்கி
ஊரின் அமைதியை உலைத்தனர் சிலபேர்.

**க. இன்ஸ் பெக்டர் :** சந்தடி சாக்கில் வந்ததைப் பற்றும்
கொடியர் இங்கே கும்மாளம் போட்டனர்.
கொள்ளையும் சள்ளையும் கொலையும் கண்டோம்,
கண்ணனும் வள்ளியும் புண்படக் கண்டோம்

**அப்துல் :** புண் படுத்திய பொன்னுவைக் காணோம் !
அவனைக் காண்பதே அடுத்த முயற்சி.
ஜோதி யெனது சொந்த நண்பன்.
கண்ணனும் நண்பன், காதகப் பொன்னு
செய்த கொடுமையைச் செகுப்பதென் கடமை.
வாக்கு மூலமும், மங்களம் வரைந்த
சீட்டும், சிவனுர் செய்த உயிலும்,
கூரிய வாளினுங் கொடிய சுந்தரி
மங்களத் திருவைப் பங்கம் செய்ததும்,
ஊரில் உலாவும் பேரும், புகாரும்
உள்ளன ; மூன்று கள்ளரைப் பிடித்துத்
தண்டனை செய்து, தருமங் காப்போம்.

**உ. இன்ஸ் பெக்டர் :** கொடுமைக் கெல்லாங் கொள்கலம் சுந்தரி.
அவளிக் கொலையின் அடிப்படை யாவாள் ;
புருஷனை விரட்டிப் பொன்னுவைக் கூடினாள் ;
பொன்னு வீட்டைப் பொட்ட லடித்துப்
பாதிச் செல்வம் பரத்தைக் கீந்தான் ;

முல்லையின் நிலைக் கெல்லையே யில்லை.
கதைகதை யாகக் காதற் கொலைகள்,
அவளைப் பற்றி எவளவோ கேட்டோம்.
அவளது வலக்கை அண்ணுவி யென்போன்.
அவனே பொன்னுவை அழித்த போக்கிரி.
கண்ணனைச் சுட்ட பொன்னுவின் குண்டு
அண்ணுவி முதுகில் ஆழ்ந்ததும் விதியே;
அவனது தலையை ஆற்றில் எறிந்தே,
பொன்னு தப்பிப் பொருட்பெண் ணுடனே
சுந்தரி தனையும் தந்திர மாகக்
கூட்டி எங்கோ ஓட்டம் பிடித்தான்.

**அப்துல் :** பட்டண உளவும் பார்த்தொன் றறிந்தேன்.
விடுதி, அல்லது வெள்ளித் திரையில்,
ஆழ்ந்து பார்த்தால் அகப்படு வார்கள்.
சிவனார் வீட்டைச் சீல்வைத்து விட்டோம்.
ஜோதிபே ருக்கே சொத்தும் உரியது.
பத்திர முள்ளது. பண்பன் ஜோதியும்
துறவுடன் பொதுநலத் தொண்டுசெய் கின்றான்.
இடமறிந் தங்கே கடனறிந் தியற்றி,
வருகிறேன். சீனு வருக உடனே!

**சான்ஸ் :** சீனுவை யங்கார்! சீனுவை யங்கார்!!

**டேபின் :** [சீனு ஓடிவந்து]

**சீனு :** வந்தனம். சிவனார் வழக்கைத் தாங்களே
நடத்தி வைத்து நலஞ்செய வேண்டும்.

**அப்துல் :** அத்தாட்சி யெல்லாம் அமிதமா யுள்ளன...
முல்லை, பொன்னு, சுந்தரி..மூன்று பேரையும்
கைது செய்தபின் கடுங்கொலை வழக்கை
நடத்தி நீதி நல்குவோம்...உறுதி.
ஊரில் தாங்களும் உஷாரா யிருங்கள்.
'சம்'மெதிர் பார்த்துச் சாட்சி சொல்லலாம்.
இனிநீர் செல்லலாம்!

**சீனு :** எல்லாந் தங்கள்
அன்பி னாலும், ஆற்ற லாலும்
இனிதே முடியும். இறைவன் அருள்க!

[செல்கிறான்]

அப்துல்: நகரில் வந்துசெல் நட்சத்தி ரங்களைக்
கண்கா ணித்துக் கவனமா யிருங்கள்!
அவ்வப் போதுநான் அறிக்கை யனுப்புவேன்.
விரைவில் எல்லாம் வெளிச்ச மாகும்.

[டெலிபோன் மணி யடித்தல்
—"ட்ராங், ட்ராங்"]

ஹல்லோ யாரது? மில்லரா? வருகிறேன்!
நெல்லா குளத்தில் மில்லரைப் பார்க்கிறேன்.
சாரணர் காத்த ஆர ணங்கையும்
கண்டு செய்திகள் கொண்டு வருவேன்.

சப் இன்ஸ்பெக்டர்: இரண்டுமா தத்தில் இந்த வழக்கைத்
தீர்க்க வேண்டும் தீவிர மாக
நாங்களும் உதவி நல்குவோம்; வந்தனம்.

[அப்துல்லா மோட்டாரில் மில்லரிடம் செல்கிறார்.]

## மூன்றாங் காட்சி

[பாதிரிக் கல்லூரித் தோட்டம். பலவகை மலர்கள் குலுங்குகின்றன. துரைச்சிபோல் உடைதரித்த மங்களம் சிறு குழந்தைகளுடன் பூப்பறிக்க வருகிறாள்.]

குழந்தைகள், மங்களம்: தோட்டத்திலே பூப்பறிப்போம் தோழ ரெல்லாரும்!
பாட்டுப்பாடி யாடிடுவோம் பறவைக் கூட்டம்போல்.

மங்களம்: அன்புக் குழந்தைகாள், இன்பக் குழந்தைகாள்!
ஆண்டவ னுக்கு மாலை யணிவோம்.

ஒரு குழந்தை: அம்மநான் மல்லிகை யரும்புகள் பறிப்பேன்.

மற்றொரு குழந்தை: அம்மநான் செவந்தி.

இன்னொரு குழந்தை: அம்மா ரோஜா.

மங்களம்: விருப்பப் படியே விரிமலர் கொய்வீர்
இலையுதி ராமல், இதழ் கசங்காமல்,
மெதுவாய்க் கொய்வீர் புதுமலர் பார்த்தே!

குழந்தைகள்: ஆடிப்பாடிப் பூப்பறிப்போம் ஆனந்த மாகக்
கூடிக்கூடி அன்புசெய்வோம் குழந்தைக ளெல்லாம்.

[வருதல் மில்லர், அப்துல்லா]

மில்லர் : கடமை காத்துக் கதிரவன் செல்கிருன்;
ஒளிக் கரங்களால் உலகை யெழுதிட
போகும் போதவன் பொன்மயம் பாராய்!
ஞாயிறு போலே நாம்வா ழோமோ?

அப்துல் : அரிகதிர் போல அடக்க மாகவே
உண்மைக குழைக்கும் உத்தமர் நீரே.

மில்லர் : வீரப் பதக்கம் விளங்குமுன் மார்பைக்
காணுந் தோறும் களிக்குமென் னுள்ளம்
உனது வீரம் உளங்தொறுங கனல்கவே!

அப்துல் : எல்லாம் தாங்கள் ஏற்றிய வீரமே.
வீடும் நாடும் விளங்கப் பணிசெய்
அறிவுந் திறனும் அளித்த தங்களை
என்றும் எண்ணி நன்றி செலுத்துவேன்.
உங்களைப் போல ஒற்றுமை யுடனே
எம்மவர் கடமை யியற்றுக நன்றே!

மில்லர் : ஒற்றுமை யற்றதே உங்கள் சாபம்!
வருண பேதம் வகுத்த நாட்டை,
பார்ப்பதுந் தொடுவதும் பழுதெனு நாட்டை,
ஆலயந் தன்னில் ஹரிஜனர் புகுந்தால்
சாமிதீட் டாமெனச் சாற்றுமிந் நாட்டை.
சிலுவையே ஒற்றுமை செய்திடு(ம்)லாகும்.

அப்துல் : சிலுவையும் பிறையும் செய்வதைக் காட்டிலும்,
அன்பே ஒற்றுமை யாகும் வழியாம்,
சாதி வகுப்புச் சங்கட மின்றி,
விதவிதச் சமய வேடங்க ளின்றி
மனிதனை மனிதன் மனிதனுய் மதித்தால்,
அன்பும் அறமும், அறிவும், திறனும்,
ஆன்ம நேயமும், அருட்பணி வாழ்வும்.
பயின்றால், உலகம் பழுதற வாழலாம்.
ஜோதி சொல்லுமிந் நீதியே நீதி!

மில்லர் : அருமை ஜோதிபோல் அனைவரும் இருந்தால்,
வானர சாடசி வந்து குதிக்குமே!
அருளும், அறிவும், அன்புங் கொண்டவன்
அனைத்துந் துறந்தான் ; அநாதைகளுக்கே
வாழத் துணிந்தான் ஆழக் கருணையால்,
பணியுடன் பரம்பொருட் பதத்தையுந் தேடினன்.
யோக முனிவர் ஒருவர் திருவடி
அமர்ந்துமெய்ஞ் ஞானமும் அடைந்ததாய்ச் சொல்வர்.
இன்றவன் இருக்கும் இடத்தை அறிகிலேன்.

அப்துல் : அறியவே செல்கிறேன். அன்பனைக் காண்பேன்.

மில்லர் : அவன்வீட் டினிலே அனலை வைத்துப்
படுகொலை செய்த பாவிகள் யாவர் ?

அப்துல் : ஒருவனை வினையே உயிர் பிரித்தது.
மூவர் கரந்துளார் : முயன்று பிடிப்பேன்.
ஆதா ரங்கள் அனைத்தும் உள்ளன.
காயம் பட்ட கண்ணனும் வள்ளியும்
வாக்கு மூலம் வழங்கி யுள்ளார்.

மில்லர் : கண்ணன் பட்ட புண்கள் ஆரமா ?

அப்துல் : உள்ளும் புறமும் ஆறும் ; உறுதி!

மில்லர் : சிவனார் வீட்டின் செய்தி யென்ன ?

அப்துல் : வீட்டைப் பூட்டினோம். வீட்டுத் திருமகள்
ஜோதிபேருக்க்சொத்தை யெழுதி,
ஆற்றில் விழுந்தாள் ; அத்தாட்சி யுள்ளது,
ஜோதியைக் கண்டு மற்றதைச் சொல்வேன்.

(மங்களம் ஓடிவந்து)

மங்களம் : அப்பா, உனக்கென் அன்பு ரோஜா.

மில்லர் : இம்மலர் போல இன்ப மாயிரு !

(மங்களம் செல்கிறாள்)

அப்துல் : அந்திக் காட்சியை அழகுசெய் மலர்போல்,
வந்துசெல்|இந்த வனதே வதையார் ?

மில்லர் : அவளே என்றன் அன்புத் திருமலர்.

அப்துல் : சாரணர் காத்த தண்மலர் இவளோ ?

மில்லர்: உன்னிடம் உண்மையை ஒளிக்க முடியுமா?
அவளே, அவளே! அருண ஜோதியை
எதிர்பார்க் கின்றாள். இரகசிய மாகச்
சொல்வேன், வேறிடஞ் செல்வோம், அன்பா!

(இருவரும் வேறிடம் செல்லல். வருதல் திருமதி மில்லர்.)

திருமதி மில்லர்: அன்பு மலரே—இன்ப மலரே!
(ஓடிவருதல் மங்களம்.)

மங்களம்: அம்மா, அதுவென் அழகு ரோஜா.
(மலர் தருதல்.)

திருமதி மில்லர்: அதையுன் அழகே அழகு செய்க!
(மங்களத்தின் கூந்தலில் முடித்தல்.)

மங்களம்: அம்மா, உன்னுள் அன்பைப் போலவே
பூத்துச் செடிகள் புன்னகை பொலிந்த!

திருமதி மில்லர்: இன்முகங் கனியும் புன்முறு வல்போல்
உனது செடிகள் இனமலர் சொரிந்த.

மங்களம்: சொரிந்த மலரைச் சோதிக் கடவுள்
அன்புடன் ஏற்கும் அந்நாள் வருமோ?

திருமதி மில்லர்: வரும், வரும் கண்ணே வருத்தப் படாதே,
உன்மனங் களிக்க உபாயஞ் செய்வோம்.
அப்பா வுடனே நின்றவர், இங்கே
கற்றவர்; அவரே ஒற்றர் தலைவர்;
அவரே ஜோதியை அருகே கொணர்வார்.

(கோயில் மணி அடிக்கிறது.)

மங்களம்: ஆண்டவன் மணிஈமை யழைத்தது வாராய்!
ஆட்டம் போதும் அன்புக் கிளிகாள்!
சொரிந்த மலருடன் கோயில் புகுவோம்.

குழந்தைகள் (சந்தோஷமாக ஓடி வந்து பாடுகின்றன)
அந்திமலர் பறித்துவந்தோம் அன்புத் தோழர்கள்!
வந்தனஞ்செய் தாண்டவனை வாழ்த்திச் சூட்டுவோம்.

(எல்லோரும் சந்தோஷமாகப் பாடியாடிச் செல்லல்.)

## நான்காம் காட்சி

(ஜோதியின் தொண்டர் கிராமசேவை செய்கிறார்கள்.)

### தொண்டர் பாட்டு

புன்னாகவராளி ராகம் — ஆதி தாளம்

தொண்டுகள் செய்திடுவோம்—பொதுநலத்
  தொண்டுகள் செய்திடுவோம்
வண்டுகள் போலச் சுறுசுறுப் பாகவே
  வாழப் பயின்றிடுவோம. (தொண்டு)

அறிவொளி பரப்பிடுவோம்—பல்
  லாயிரந் தொழில்வளர்ப்போம்
வறுமையும் மடமையும் அடிமையும் விலகிநாம்
  வளம்பெற வாழ்ந்திடவே. (தொண்டு)

அழகினைத் தொழுதிடுவோம்—நெஞ்சில்
  அன்பினைத் தொழுதிடுவோம்
மழை, கதிர், கடலெனக் காற்றெனை ஊற்றென
  மகிழ்வுடன் இயல்பாகத் (தொண்டு)

நோய்களைத் தீர்த்திடுவோம்—ஏழைபடும்
  நூறு துயர் களைவோம்
சேய்களைப் பேணுந் தாய்மனம் போலவே
  தெள்ளிய வாஞ்சையுடன் (தொண்டு)

(காஷாய ஜிப்பா அணிந்து அப்துல்வாகாப் வருதல்.)

**அப்துல்:** அன்பரீர் வணக்கம்!

**தொண்டர்:** அடிகாள் வணக்கம்!

**அப்துல்:** உம்மை நடத்தும் உத்தமர் யாரோ?

**தொண்டர்:** ஜோதியின் அடியவர் யாம்—பரி
சுத்தரின் அடியவர் யாம்
சாதிமத பேதச் சச்சர வில்லாத
சன்மார்க்க நேயர்கள் யாம்.

**அப்துல்:** ஜோதியைக் காணவே துடிக்குதென் மனதும்.

**தொண்டர்:** தியான மந்திரம் சென்றுற் காண்போம்.

**அப்துல்:** அங்கே நடக்கும் அருட்பணி யாதோ?
ஜோதியின் பெருமையும் சொல்லுவீர் விரிவாய்.

**தொண்டர்:** ஞான புரியெனும் நல்லூர் ஜமீன்தார்
செல்வ மெல்லாம் திணர் பணிக்கே
ஈந்தார் ; துறவே ஏந்தி, யோகியாய்
வாழ்ந்தார் ; ஜோதி வந்ததும் அவரைப்
பூரண யோகி யாக்கிப் பொருளெலாம்
கையிற் கொடுத்துக் கைலை சென்றார்.
யோக முனிவர் உதவிய தெல்லாம்
உலகிற் குதவினார் உத்தம ஜோதி!
ஞான புரியை ஞாலம் போற்றும்.
அன்புவிண் ணாக்கி அருள் விளக்கினார்,
புதுமையும் பழைமையும் போகமும் யோகமும்,
அறிவுங் கலையும், ஆயிரந் தொழிலும்,
சீரும் செல்வமும் தெய்விக வாழ்வும்
செழித்திடச் செய்த தீரர் அவரே.
சிவனும் சக்தியுஞ் சேர்ந்தது போலே
ஆணும் பெண்ணும் அருளழ குடனே
வாழச் செய்த மாதவர் அவரே.
ஏழை யெளியவர் இன்னலை தீர்க்க
உழைப்பும் பிழைப்பும் உதவியோர் அவரே,
பிச்சைத் தொழில்களும் கொச்சைத் தொழில்களும்
வேரோ டொழிய வேலைசெய் துண்டு.
பயன்பெற வாழப் பயிற்றினார் அவரே.
பசியென வந்தவர் பாடுபட் டுண்ணக்
கணக்கறு வழிகளைக் காட்டினார் அவரே.
மோகதா கங்களை முற்றிலும் வென்று
யோகமே வாழ்வாய், வாழ்வே யோகமாய்,
இன்புறச் செய்த இறைவர் அவரே.
அன்பும் அறிவும் அறமும் அருளும்
பண்பும் பணிவும் பகட்டறு தொண்டும்
கொண்ட ஜோதியைக் குருவென வணங்கி
அன்பு செய்யும் அறவோர் யாமே!

**அப்துல்:** அறிந்தேன் ; ஜோதி யடியார் வாழ்க!
அவரிடம் என்னையும் அழைத்துச் செல்வீர்!

**தொண்டர்:** பசித்தவர் வாரீர்—பாடுபட் டுண்போம்,
தொழில்கள் உண்டு; சோறும் உண்டு.

கண்ணீர் துடைக்கக் கருணை யுண்டு.
சோம்ப லொழிப்பீர், துயா மொழிப்பீர் ;
கற்றறி வாளர் கல்வி பரப்புவீர்;
கைத்தொழி லாளர் கைத்தொழில் புரிவீர் ;
உழவர் முதலாய் ஒட்டர் வரையில்
தொழிலைச் செய்து சுகமுற வாழ்வீர் ;
அறவோர் எங்கும் அறவழி சொல்வீர் ;
புலவோர் எவர்க்கும் பொதுநெறி புகட்டீர் !
உலக மெல்லாம் ஒருகுல மாக
மெய்யறி வின்பம் விளங்கிட வாழ்வோம் !

[எல்லாரும் செல்லல்]

## ஐந்தாங் காட்சி

[தியான மந்திரத்தில் ஜோதி அமர்ந்திருக்கிறான். அப்துல்லா பேசுகிறான்.]

**அப்துல் :** நண்பரைக் காண நாடி வந்தேன்.
குருவைக் கண்டு கும்பிடு கின்றேன்.
அடிகள் நிலைமை அற்புதம், அற்புதம் !
இகமும் பரமும் இணைந்தசன் மார்க்கம்.
வாழ்வும் யோகமும் சூழ்ந்த சமநெறி.
அலுவல் என்னை அழைக்கா விட்டால்,
யானும் ஜோதி யடியனாய் வாழ்வேன்.
சாதி சமய சாத்திர கோத்திர
பேதமே யின்றிப் பிரிவினை யின்றி,
அன்பும், அறமும், அருளும், உண்மையும்
ஆண்டவ னறிவும் ஆருயிர்ப் பணியும்
சேர்ந்தசன் மார்க்கம் செயலிற் கொணர்ந்த
சுவாமிகள் பெருமை சொல்லுதற் கரிதாம்.

**ஜோதி :** எல்லாப் பெருமையும் இறைவன் பெருமையே.
மத்துறு தயிர்போல் மயங்கிய மனதை
அடக்கி நிறுத்தும் ஆற்றலைத் தந்தான்.
அவனடி நிழலில் அமர்ந்ததே போதும் ;
அவனே யாகும் ஆருயிர்க் கெல்லாம்
அறிவுந் தொழிலும ; அறமும் அன்பும்
உழைப்பும் பிழைப்பும் உதவச் செய்த

யோக முனியருள் ஒன்றே போதும்.
அடிக்கடி மாறும் அரசியற் சுழலில்.
அடங்கா மனத்தின் ஆசைப் புயலில்,
இருவினைக் காட்டில் இடர்மிகப் பட்டேன்.
காலத் தேரின் கதியினை மாற்றி
நற்கதி சேர்த்த சற்குரு வாழ்க!
யோக நிலய வொளியணி போற்றி!

**அப்துல் :** யோக நிலயம் ஒருதனி யுலகம்,
உண்ண வுடுக்க, இருக்க, படிக்க,
தெய்வ சாதனம் செய்திட வேண்டும்.
எல்லாம் இங்கே இருக்கக் கண்டு,
பெருமகிழ் வெய்தினேன்.

**ஜோதி :** குருவருள் வாழ்க!
அப்துல் லாவிடம் அன்று சொன்ன
சொல்லே செயலாய்த் துலங்கிய தின்று
வள்ளியும் கண்ணனும் வந்து சேர்ந்தால்,
தந்தையும் வந்தால், தமிழர் இன்புறும்
பணிகள் செய்யலாம்.

**அப்துல் :** பணிசெய வருவோம்!
முருகனூர் தோட்டம் முற்றிலும் எரிந்ததும்
கண்ணனும் வளளியும் காயப் பட்டு
வைத்திய சாலையில் வசிப்பதும் அறிவீர்!

**ஜோதி :** அதெல்லாம் அறிந்தேன்; அன்புடன் சொன்னாய்.
ஆனால் என்னையே ஆவிபோல் விரும்பிய
கற்புத் தெய்வம் கலங்கிடச் செய்தேன்.
காலைப் பதுமமும், மாலை முல்லையும்,
மதிவளர் அல்லியும், மாணிக்க முயபோல்
மாசில் லாத மங்களத் திருவை
ஐயுற் றடாத பொய்களைச் சொன்னேன்.
புலிசூழ் மான்மேற் புன்கணை பாய்ச்சினேன்
கொல்லும் பகைவர் அல்லலைப் பொறுத்தும்
என்னையே யெண்ணி யினலைத் தாங்கியும்
இருந்த சக்தி வருந்திடச் செய்தேன்,
சுந்தரி பொன்னு சுடச்சுடச் செய்த,
தந்திரக் கொடுமைகள் தாங்காக் குயிலென்

வனத்தில் புகுந்தும் வழிகா ணுமல்,
கற்புயிர் தன்னை கையிற் கரைத்தாள்.
பத்தினி வருந்தப் பாவியேன் வாழ்ந்தேன்!

[கண்ணீர் விடுகிருன்]

அப்துல்: ஆறுதல் சுவார் அல்லா!

ஜோதி: ஆறுதல்?

வாட்புண் ஆறும்; மனப்புண் ஆறுமா?
என்முன் பெண்ணுய் இலகிய பத்தினி
என்னுள் சக்தியாய் இலங்கு கின்ருள்,
உடலே மறைந்தது. உயிரெனுள் உள்ளது.
"ஜோதிக் காதலா, சோதிக்க லாமா?
சாதல வரினும் காதல் போகுமா?
இடர்கள் சூழ்ந்தும் இச்சை மாறுமா?
உயிர்போ ஞலும் உமைமறப் பேனு?
என்னைக் கைவிட் டேகிய தேனே?
கண்ணகி கற்பைக் காட்டிய மதுரையில்,
உயர்குலந் தோன்றிய உத்தமி நானே.
நீரே உயிரென நினைத்திருந் தேனே!
பாம்பும் புலியும் பற்றிய மானை
அனபுக் கலைமான் அலறவிட் டகன்றதே!
பிரிவச் சுடுசரம் பிளந்தது நெஞ்சை!
வெள்ள மீன்கள் வேதனை யுடலை
உண்ணக் கொடுத்தேன், உயிரால் உம்முடன்
ஒன்றினேன்' என்றென் உள்ளே புகுந்தாள்.
கதிரும் மதியுங் கடலும் மழையும்,
மயிலுங் கிளியும் குயிலும் அன்னமும்,
மின்னலும் சுடரும் என்னுயி ரனையாள்
உடலை எழுதினும் உள்ளழ கெழுதுமோ?

அப்துல்: வனதே வதையினும் வனப்பு மிகவள்!
பார்த்திருக் கின்றேன்... பத்தினி யின்றும்
பக்க மிருந்தால் பதின்மடங் கதிகம்
அருட்பணி செய்வீர்!

ஜோதி: ஆ, அவள் இருந்தால்...!

யோக முனிவர் உரைத்த பெரிய
சாதனம் செய்யத் தக்கவள் அவளே.

6663

பூரண சக்தி பொலிவுறச் செய்வாள்.
மோகம் விடுத்த யோகம் போற்றி !
கதிரவ னுடனே கதிர்களைப் போலே,
உமாபதி போலே சமானமாய் வாழ்வோம்.
அவள்பெய ராலே அமைந்து வளரும்,
மங்கள விலாச மாதருக் கெல்லாம்,
யோக நிலைய உத்தமர் கெல்லாம்
அவளே அன்பின் அன்னை யாவாள்.
அத்தகை யின்பம் அடையா தொழிந்தேன்
மங்கள விலாச மாதா வாக
இருக்கும் சக்தி இனியார்? அறியேன்.

THE MADURA TAMIL SANGAM

அப்துல் : மில்லர் வளர்க்கும் செல்வி யொருத்தி...;
கற்பும் பொற்பும் கல்வி கேள்வியும்
கருணையும் மிக்க கன்னி யவளே,
அநாதைச் சிறுவரை அன்புடன் வளர்க்கிறாள்.
அவளுன் பணிக்கே அமைந்த தேவதை.
மில்ல ரிடத்திற் சொல்லுவேன் யானும்
அவரும் உம்மை அடிக்கடி புகழ்வார்.
விளம்பர மின்றியே வியன்பணி செய்தீர்.
பாதிரி மார்களும் பணியை அறிந்து
மில்ல ரிடத்திற் சொல்லநான் கேட்டேன்.

ஜோதி : மில்லர் வளர்த்தது நல்லதா யிருக்கும்.
கிழக்கின் ஞானமும், மேற்கின் கருமமும்
சேர்ந்த வாழ்வே சிறந்ததென் றறிந்தேன்.
அதுவே கொள்கையாய் அருட்பணி புரியும்
இந்த நிலயம் வந்தனத் துடனே
மில்லர் தருவதை மேன்மையாய் ஏற்கும் ;
யானும் எழுதுவேன்.

அப்துல் : இதுவே நலமாம்.
இன்னும் பத்துநாள் சென்னையி லிருப்பேன்.

ஜோதி : சென்னையி லென்ன பொன்னு விஷயமோ ?
பாதகக் கும்பல் பதுங்கிய தெங்கே...?

அப்துல் : "காதல் உலகம்" என்னும் காட்சியில்,
மூன்று பேரும் தோன்றுவர் காண்பேன்—
ஒலிப்படச் சோதகர் உரைத்த விவரம்

அதெல்லாம் பிறகே அம்பல மாகும்.
எனது தொழிலை இயல்பாய்ச் செய்து
நல்ல செய்தி சொல்ல வருவேன்.

[மணியடித்தல்]

**ஜோதி :** தியான வேளை, தெய்வந் தொழுவோம்!

**அப்துல் :** தொழுகை நடத்திச் சுத்தமாய்ச் செல்வேன்.

[தொண்டர் ஜோதியுடன் நின்று பாடுதல்.]

எல்லா வுலகினிலும்—வாழும்-எல்லா வுயிர்களிலும்...
எல்லார் உளத்தினிலும்—வளர்-ஏகப்பரம் பொருளே...

உலகமுன் கோயிலென்போம்,—அதில்-உயிர்களுன் மேனி யென்போம்
நலமுறச் செய்பணியே-நாம்-நாளுஞ்செய் பூஜையென்போம்.

சாதி மதவெறிகள்—சற்றும்-சாராத சத்தியமே,
சோதி மயமான—பரி-சுத்த சுதந்தரமே.

எங்கெங்கே பார்த்தாலும்—நாங்கள்-எப்பணி செய்தாலும்...
அங்கங்கு நீவிளங்கி—எம-அன்பைப் பெருக்கிடுவாய்!

சத்திய வாக்கருளாய்—உப-சாந்த நிறைவருளாய்
சித்த ஜயமருளாய்—எம்மைத்-தீரர்க ளாக்கிடுவாய்!

வீரக்கன லளிப்பாய்—நாளும்-வெற்றித் திறலளிப்பாய்.
ஓர் குலமாகப் புவி—வாழும்-ஒற்றுமை யீந்திடுவாய்!

[தியானம்]

நான்காம் அங்கம் முற்றிற்று.

# ஐந்தாம் அங்கம்

## முதற் காட்சி

[சென்னைக் கடற்கரை. பொன்னுவும் முல்லையும் தொலைவில் குடித்துக் களித்துக் கைகோத்து உலாவுதல். சுந்தரி தனியே சிந்தித்தல்; அப்துல்லாவும், காதல் ஒற்றனும் அதோ இருந்து மூவரையும் கவனிக்கின்றனர்.]

**சுந்தரி :** கடலே பெரிதோ, கவலையே பெரிதோ?
நிலையில் லாமல் அலையும் சித்தம்,
அகங்கா ரத்தின் ஆத்திர முழக்கம்,
பொங்கி நுரைக்குப் பொறாமைச் சீற்றம்,
காம முதலையின் கௌவும் வேகம்,
வஞ்சச் சுறாவின் வாதனைச் சூது,
ஆளை விழுங்கும் ஆசைத் திமிங்கிலம்,
கலக்கும் கவலை கடலினும் பெரிதே!
புருடனை விரட்டித் திருடனை நம்பினேன்.
குலமகள் இன்று விலைமக ளானேன்.
கலையாற் கற்பைக் கொலையே புரிந்தேன்.
பொன்னழ கற்றேன்; பூச்சழ கானேன்.
காம வெறிக்குக் கட்குட மானேன்.
ஆசை வெறியால் மோசம் போனேன்...
ஆயிரம் பேரை அழித்த பாதகி,
ஆயிரம் பேரால் அழிந்த வேசை,
அவளுக் கென்னை அடிமைப் படுத்தினான்
வஞ்சக் கயவன்...வயி றெரி கின்றதே!
மணவாழ் வெல்லாம் மண்ணாய்ப் போக...!

[மண்ணை வாரித் தூற்றல்...
முல்லை தொலைவிலிருந்து "நீ குட்டிச்சுவராய்ப் போக!" என்னும் பாவனையாய் மண்ணை வாரித் தூற்றல்]

பாரேன்! என்னையே படக்கெனப் பேசி
மண்ணைத் தூற்றினுள் மானங் கெட்டாள்—!
நெஞ்சே யின்று வஞ்சந் தீர்ப்பாய்...
நகையில் ஒளிந்த பகைச்சின வாளே,
பூசிய கலத்திற் பொதிந்த விடமே,
அன்பைப் பகட்டி ஆளைச் சுருட்டும்,
துன்பப் பேயே! துராசை நாயே!
இன்றுடன் உன்னை எமனுல கனுப்புவேன்.
பலவகை யான பாபம் செய்தேன்.
இறுதிப் பாபம் இன்றே செய்து
கொடியவள் கெடுத்த கொழுநனைத் தேடிச்
சென்றவன் சேவடி சிரத்தில் வைத்துப்
பாதக வுடலைப் பழுதென நீத்தென்
பழிக்கு நானே பழிவாங் கிடுவேன்...
கள்ளே நஞ்சு .. கள்ளும் நஞ்சும்.
கலந்தால் உயிரைக் கலக்குவ துறுதி.
அவளே அரும்படி ஆங்கே வைப்பேன்.
இதோசெல் கின்றேன்!

[வருதல் காதல் ஒற்றன்]

**ஒற்றன் :** என் மனக் கிளியே!

**சுந்தரி :** பிரிய மான பிரியாக் காதலா!
கைகோத் தந்தோ களிநடம் புரியும்
பாதகர் ஒழிந்தால் பயமே யில்லை.
இருவரும் என்றும் ஒருவரா யிருக்கலாம்.

**ஒற்றன் :** அதுவே எண்ணம், பதுமலர்ப் பாவாய்!
இற்றை யிரவே இருவருங் கைதியாய்,
கடுஞ்சிறை' காக்கக் கைகொடுத் துதவாய்...
போலீஸ் தலைவரும் பொன்னுவை யறிந்தார்.
பத்து மணிக்குப் பதுங்கி வருவார்,
காட்டிக் கொடுக்க வேண்டும், கண்ணே!
வா! எதாயினும் வாங்கித் தருகிறேன்.

**சுந்தரி :** வஞ்ச மின்றி வருகிறேன் உடனே.

[சுந்தரியும், ஒற்றனும் ஒரு மோட்டாரில் செல்லல்.]

**பொன்னு:** ஆஆ பட்டி யாருடன் போகிறாய்!

முல்லை : போய் வரட்டும், பொருளைப் பறிப்போம்.
தண்டச் சோற்றை உண்டு, சும்மா!
தளுக்கு கின்றாள்...சதைக் கொழுப்பால்!
யானை போன்றாள்: மானைப் போன்றார்
போற்றுங் கலைக்கிவள் பொருத்த மில்லை.
தொண்டையைத் திறந்தால் அண்டமும் நடுங்கும்;
சதி மிதித்தால் தரையும் வெடிக்கும்;
பகைவர் குண்டினால் சகாராப் பாலையில்
ஊற்றுண் டாமென் றுரைக்கக் கேட்டோம்.
குண்டுபோல் இவளைக் குதிக்க விட்டாலே
பாதாள ஆற்றெழும் !

பொன்னு: பாவம் சுந்தரி!

முல்லை : பாவம் என்றால் பாரும் அவளையே,
கணையாழி தன்னைக் கழற்றிக் கொள்ளும் !
ஆயிரம் பேரானை அரசிபோல் நடத்துவர்.

பொன்னு: கோவிக் காதே; அழகுக் கொழுந்தே!
அவளும் ஆளைத் தேடிக் கொண்டாள்.

முல்லை : ஆளோ மீதளோ கோளோ அறியேன்.
என்னையே பழிக்கும் மின்மினிப் பூச்சியை
நசுக்கினு லன்றி நானுமை நம்பேன்.

பொன்னு: நாமோர் ஒதெல்லோ நாடகம் நடத்துவோம்.
நானே ஒதெல்லோ; நீயே அயாகோ.
டெஸ்டெமோ னாவின் கழுத்தைத் திருகுவோம்.

முல்லை : அப்படிச் சொன்னால் ஒப்புக் கொள்ளேன்.
டெஸ்டெ மோனா ஒதெல்லோ மனைவி.
இந்த நாயுன் சொந்த மனைவியா?
நானே மனைவி...நீயே ஒதெல்லோ.
எனது கழுத்தையா இறுக்கப் போகிறாய்?

பொன்னு: எதற்கெடுத் தாலும் இப்படிச் சண்டையா?

பொன்னு: எதற்கெடுத் தாலும் எதிரே சொல்வாய்.

முல்லை: எதற்கெடுத் தாலும் என்னையே சொல்வாய்.
பத்து மணிக்குப் பார்க்கிறேன் உன்னை.

பொன்னு: ஊடல் போதும், உடனே சென்று,
'காதல் உலகில்' நடனக் காட்சியை
நடித்துப் பழகுவோம்...நாளை ஷூடிங்!

"டேக்டு டேக்டு:' என்றசொல் லின்றி
பிடிப்பவர் மெச்சப் பெருமையாய் நடிப்போம்.

முல்லை: உனக்கே டேக்டு...எனக்குக் குறையிலை.
படத்தலைவர் பதக்கம் தந்தார்.

பொன்னு: பதக்கம் மட்டுமா? பாரென் முகத்தை !!

முல்லை: ஒத்திகை நடக்கையில் உன்முகம் பார்க்கிறேன்.

பொன்னு: வாவா உனது வாயை அடக்குவேன்.

முல்லை: வண்ட வாளம் பார்க்கிறேன் வாவா!
போக்கிரிப் பொன்னு...

பொன்னு: பொதுமகள் முல்லை...

[செல்லல்]

## இரண்டாங் காட்சி

['காதல் உலகில்' ஒரு காட்சி. வசந்தன் பெரிய செல்வ வாலிபன். மாயா என்னும்நடிகையைக் காதலித்து பங்களாவிலேயே வைத்து அவளுடன் ஆடிப்பாடிக் குதூகலிக்கிறான். அவன் குடிக்கும்போது மனைவி ஸ்ரீமதி தடுக்கிறாள். வசந்தன் - பொன்னு, மாயா முல்லை, ஸ்ரீமதி - சுந்தரி. சுந்தரி இடையில் எழுந்து சென்று தனது சூழ்ச்சியை முடித்து வருகிறாள்.]

பொன்னு, முல்லை: (பாடியாடுதல்)

[பேஹாக்; ஆதி]

தங்கமும் பச்சையு மாய்த்
தழைத்த தடவசந்தம்
மங்களப் பண்ணொலிப்பாய் - குயிலே
மாங்கனி வாய்திறந்தே

சுந்தரி: மாய நகையால் மயக்கும் வேசையின்
அதர நஞ்சை அமுதெனக் கொண்டீர்!

முல்லை: அந்தமூ தேவியை அடித்து விரட்டும்!

பொன்னு: பொதிக் கழுதை, போபோ வள்ளே!

(உதைத்துத் தள்ளல்)

சுந்தரி: வஞ்சம் தீர்க்க வாய்ப்பு வந்தது.

(உள்ளே செல்கிறாள்)

பொன்னு: இன்பக் கலை விளங்க
இன்னலெல் லாம் விலக
அன்புக் குரலெடுப்பாய்—குயிலே
ஆனந்தபானஞ் செய்வாய்

சுந்தரி: குடியைக் கெடுக்கும் குடியை விடுங்களேன்.
மதியை மயக்கும் மதுவைத் தொடாதீர்!

பொன்னு: மண்டை உடையும்...மர்க்கட மேபோ!

முல்லை: அவளையும் நடனம் ஆடச் சொல்லும்!
சிரிப்போம் கொஞ்சம்.

பொன்னு: செக்கே ஆடு...!

பொன்னு,
முல்லை: *தக்கத் தகெனத் திசை*
*தாளம் தெறித் தொலிக்கக்*
*குக்கூ எனக் கூவுவாய்—குயிலே*
*கூத்தாடக் காண்மயில்கள்*

(சுந்தரி நடனத்தை முல்லை கேலி செய்தல்)

முல்லை: முதுகிலே போடும் மூன்று தாளம்!

பொன்னு: *தக்கத் தகெனத்திசை.*

[சுந்தரி முதுகில் அடிக்கிறான்]

முல்லை: தாளம் தெறிதொலிக்கக்
குக்கூ எனக் கூவுவாய்......

[சுந்தரியை அழகு காட்டுதல்]

பொன்னு: குயிலே
போதும் நடனம், பொதியே போபோ!

சுந்தரி: படாத பாடும் பட்டேன் பத்தினி
குறுகுறு வென்று கொடுமையாய்ப் பார்க்கும்,
மாயையை நம்பினீர். மணமும் புரிந்தீர்.
பிணமல ருக்கு மணவினை வேறு?
உதட்டைக் கடிப்பதேன்? உறுத்துப் பார்ப்பதேன்?
உள்ளதைச் சொல்கிறேன் கள்ளமில் நெஞ்சால்.
எட்டுத் திக்கிலும் குட்டை உடைப்பேன்,
கண்வலை வீசும் காம ராக்ஷசி
கட்டிக் கொஞ்சிக் கழுத்தை அறுப்பாள்.
ஊட்டும் கள்ளால் உயிர்த்தீ யணைப்பாள்.

தன்னுட வீந்தே உன்னுயிர் பிழிவாள்.
அவள் மடியிலே அனைத்தையும் கொட்டித்
தெருவில் திரிவீர்.

முல்லை: தெருவில் திரிவாய்.
கலை யறியாத கழுதையை விரட்டும்!
மேனி யானை! 'மேக்கப்' குரங்கு!

பொன்னு: ஆடல் பாடல் அழகு, தமாஷா
யாதும் தெரியா மூதேவி ! போபோ,
இன்பக் கலையின் இடை யூறாக
வராதே போபோ! வறட்டுப் பிசாசே!

சுந்தரி: [மனதுள்]
போதலும், இவளினிச் சாதலும் உறுதி.
[முல்லையைக் கொடுமையாகப்
பார்த்துச் செல்லல்]

பொன்னு: இனிநம் நடனம் இனிமை யாகும்.
காதலர் உலவிடும்—கலைவளர் சோலையிலே
நாதக் கனவெழுப் பாய் - குயிலே
நாளுஞ் சுகமளிப்பாய். [திரை விழுதல்]

## மூன்றாங் காட்சி

[பள்ளியறை. மங்கலாக விளக்கெரிகிறது.]

சுந்தரி: பாடு பாடு; அன்னப்பாட்டு!
கலையின் கள்ளே கொலைசெயும் உன்னை.
உனக்கும் எனக்கும் ஒட்டுற வில்லை.
ஒடிந்த மனதை ஒட்ட முடியுமா?
காம வெறியாற் கணவனை யிழந்தேன்.
பொன்னைப் பறிக்கப் பொன்னு வந்தான்.
அவன்மதி பறித்தாள் அடங்கா வேசை.
அவள்உதைத் தாலும் அதுவே இன்பமாம்.
அவள்வை தாலும் ஆசீர் வாதமாம்.
அவளது நாற்றமே அல்லி மணமாம்;
அவள்பொய் நடையே அழகின் விளக்கமாம்!
கெட்டான் பாவி ; கெடுத்தான் எனனை!
எத்தனைப் பாபம் இவனாற் செய்தேன்!
இன்னொரு பாபம் இயற்றி விட்டேன்.
இறுதிப் பாவம்! இத்துடன் செல்கிறேன்.

சாயம் பூசிய சாக்கடை வாழ்வே,
மலத்திற் குவிந்த மலர்முகச் சிரிப்பே,
கண்ணி வைக்கும் கடுவிடக் கண்ணே,
மினுக்கும் பொய்யே, மெல்லிய கொடுமையே
இல்லறந் தவறிய கொல்லறப் பெண்ணே,
பவள வாயிற் பதுங்கிய நஞ்சே,
பித்தக் கழுகுகள் கொத்தும் பிணமே;
இனிநீ வாழாய! இன்றுன் பொல்லாப்
பாபச் சுமையைப் பட்டென உதறு!
ஆசை புளித்தது! ஆளும் புளித்தது!
திதிப்பும் புளித்தது; கசப்பும் புளித்தது;
விடைகொடு வாழ்வே...விரைந்து செல்கிறேன்.

[ஓடிப் போகிறாள்.]

பயங்கரமான மௌனம்...அப்துல் லாவும் ஒற்றநும் செல்வது போல ஒரு மூலையில் பதுஙகுதல்· வெளியே போலீஸ்காரர் உலாவுதல். வருதல், பொன்னு, முல்லை]

பொன்னு : [படுக்கையில் சாய்ந்து]
களைத்துப் போனேன்...

முல்லை : கனமான ஆட்டம்.
படத்தொகை தா, தா!

பொன்னு : பணமே பெரிதா?

முல்லை : ஆம், ஆம், கொடு, கொடு!

பொன்னு : அதுவா, நானா?

முல்லை : அதுதான் முதலில்; அப்புறம் உலகம்.

பொன்னு : பணந்தர மாட்டேன்...

முல்லை : பறித்துக் கொள்வேன்.

[அன்று பட முதலாளி தந்த குத்தகைப் பணத்தைப் பொன்னு வின் சட்டைப் பையிலிருந்து, எடுத்துப் பெட்டியில் வைத்துப் பூட்டுகிறாள்.]

பொன்னு : இனிமே லாவது நேசமா யிருப்பையா?

முல்லை : இன்னொரு காரியம்...

பொன்னு : என்னது ?

[வாளைக் காட்டி]

முல்லை : இதுதான்.

கொழுத்த பட்டியைக் கொல்வதே வேலை.

பொன்னு : அடிமைபோல் உழைக்கும் அவளையா கொல்வாய் ?

முல்லை : அவளை, அவளையே அழித்திட வேண்டும்?
வாரைப நெஞ்சில் மறைத்து வைகிறாள்.
நான்விலை மகளாம்; அவள்குல மகளாம்.
பணத்திற் கேநான் பல்லிளிப் பேனும்.
உன்னைவஞ் சகமாய் உருக்குலைத் தேனும்.
அவள்பண மெல்லாம் அபகரித் தேனும்.
குடிக்கின்றேனும்... தடிக்கின்றேனும்.
கண்டபேர் கடித்தமிழ் கரும்பாம், துரும்பாம்.
கலையால் ஆளைக் கொலைசெய் தேனும்.
கெட்ட சிறுக்கி கெடுத்தேன் என்றாள்;
வம்பர் சிலரை வலையில் பிடித்தாள்.
அவளி ருந்தால் அமைதியாய் வாழேன்,
கொல்லையில் பெரிய குழியும் உண்டு;
புதைத்து விடுவோம்; புகார் வராது.
ஊரை மேய்க்க ஓடினாள் என்போம்...!

பொன்னு : உனக்கும் எனக்கும் ஒத்தது தானே ?
என்னை நம்பினாள்; எப்படிக் கொல்வேன்?

முல்லை : நானும் உன்னை நம்ப வில்லையா ?
உன்மேல் உயிராய் உள்ளது பொய்யா?
கண்ணே காதலா, கருணையில்லையா?

பொன்னு : சொக்கு முல்லை, சொகுசு முல்லை;

முல்லை : சொகுசு முல்லையின் சொற்படி கேளும்,
ஆம் எனக் கேட்டலே ஆணுக் கழகு

பொன்னு : பேசா திருத்தலே......பெண்ணுக் கழகு.
களைப்பாறி வருகிறேன்...காரியம் நடக்கும்.

முல்லை : இதோ களைப்பாறும் இனிய சஞ்சீவி!

பொன்னு : அல்லிக் கரத்தால் அமுதம் அளிப்பாய்!

முல்லை : (மனதுள்)

விசன மின்றி வெறிவாள் வெட்டும்;

[கோப்பையில் ஊற்றித் தருகிறாள்.]

பொன்னு : (குடித்து)
அமுதின் கையால் அமுதம் உண்டேன்.
[அதுவே சுந்தரி நஞ்சு கலந்த பாணம்; நஞ்சு வேலை செய்கிறது.]
ஆ! ஆ! இதென்ன! அமுதா, நஞ்சா?
ஐயோ செத்தேன்...

முல்லை : ஐயோ என்ன?
அந்த முண்டை யாதோ செய்தாள்...

பொன்னு : கொடிய நஞ்சு குடித்துப் பாரடி!

முல்லை : நஞ்சை நானேன் குடித்துச் சாவேன்?

பொன்னு : பாதகி, என்னைப் படுகொலை செய்தாய்!

முல்லை : பழிசுமத் தாதே...இழிமனக் கொடியா
நீயே நஞ்சு...

பொன்னு . நீயே நஞ்சு...!
விலைக்கே உடலை விற்ற வேசையே!
பிணியே பெருக்கும் அழகுப் பிணமே!
எவனை விரும்பி என்னைக் கொன்றாய்?
கொன்ற வுன்னைக் கொன்றே இறப்பேன்!
வஞ்சம் வளரும் நெஞ்சைப் பிளப்பேன்!
[வாளை ஓங்கி அவன் மார்பில் குத்துகிறான்.]

முல்லை : படுகொலை! படுகொலை!...பாதகா! பாதகா!
[இச் சமயம் போலீஸ் உடையில் அப்துல்லா, போலீஸ்வீரர் எல்லாரும் உள்ளே வருதல்.]

அப்துல் : மாட்டு விலங்கு...பூட்டு சிறையில்...
வாளை எடுஎடு...ஆளைக்கட்டு...!
[ஒருவர் இரத்த வாளை எடுத்து வைத்தல்; இருவர் பொன்னுவுக்கு விலங்கு மாட்டுதல்; முல்லையைக் கட்டுதல்.]

முல்லை : (திகைத்து)
ஒன்று சொல்லி உயிர்விடு கின்றேன்,
வாழ்வை நினைந்து வருந்து கின்றேன் ;
காமக் கொலைகள் கணக்கில செய்தேன் ;
மதுரைக் காலையின் மர்மமும் யானே...
துப்பாக்கி யெனதே, சுட்டவன் இவனே !
அயா கோவினும் ஆயிரம் அயோக்கியன்.
காமத் தாலே கண்ணை யிழந்து,
கெட்டசுந் தரியைக் கெடுத்தவன் இவனே
என்னை இவனே சென்னை கொணர்ந்தான் ;
கொடிய பாபக் குழியில் விழுந்தோம்.
கெட்டோம் பலரைக் கெடுத்தோம் ; முடிவில்.
ஒருத்தியைக் கொல்ல உருவிய வாளே
என்னுயிர் குடித்தது...பொன்னுயிர் தன்னை
மெள்ளச் சுந்தரி கள்ளிற் கலந்த
பொறுமை நெஞ்சே பொட்டெனக் கொன்றது.
அறமே கொடியாய் ! அறமே வலியாய் !
பழிதீர்த்துக் கொள் !. பழியா தகினான்...!
எனது வினையே என்னைக் கொன்றது...
[இறக்கிறாள்.]

பொன்னு : வேதனை சொல்லி விடைபெறுகின்றேன் !
பாவ வினைக்கே பாவி வாழ்ந்தேன்.
சுந்தரி சொத்தைச் சுரண்டிச் சுரண்டி
முல்லை மடியில் முழுதும் கொட்டினேன்,
தங்க மான மங்களத திருவை
நாயினுங் கேடாய் நடத்தினேன் ; அன்று
கைத்துப் பாக்கியால் கண்ணன் வள்ளியைச்
சுட்டேன் ; அப்புவைச் சுட்டு வீழ்த்தினேன் ;
என்னை கெடுத்தாள் ; அண்ணுவி ; அவனையும்
எனது குண்டே இறுதியாய்ச் சுட்டது !
செனனை வந்து தீமைகள் செய்தேன்.
சுந்தரி யன்று. சொந்த வினையே
வஞ்ச நஞ்சால் வாங்கிய தென்னுயிர்.
மன்னித் திடுவாய் மங்களம், மங்களம் !
சிவனே மன்னி ! தீய னேனைப்
பாபமே கெடுத்தது ; பழியே நலித்தது ;

காமமே வதைத்தது ; கள்ளே கொன்றது !
வருந்திச் சாகிறேன்...சாவே வாழி...!

[இறக்கிறான்]

**அப்துல் :** இறுதி மொழிகளை எழுதிக் கொள்வீர்.
இருவரும் இறந்தனர் ; இனி வழக்கில்லை ;
சுந்தரி யெங்கே...தூரத்து தூரத்து...!

[வீரர் வீட்டைத் தருவதல்.]

**வீரர் :** காணோம் சுந்தரி...!

**அப்துல் :** காண்போம் விரைவில்;
உடனே எழும்பூர் ! உளவு பாரீர் !
சிவனார் இருப்பது திருக்காளத்தி...
அதற்கொரு தந்தி யனுப்புவீர் உடனே !
மதுரை சென்று மற்றதெல்லாம்...
தீதே செய்து திரிந்த கொடியவை
நீதி கொல்லுமுன் நெஞ்சே கொன்றது !
வினைப்பயன் யாரை விட்டதிவ் வுலகில் ?

[எல்லோரும் செல்லல்]

## நான்காங் காட்சி

[மில்லர் மாளிகை மணி முற்றம், மாமரத்தை முல்லைக் கொடிசுற்றிக்கொண்டிருக்கிறது. அதனருகில் ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்து, மங்களம் கிளியுடன் கொஞ்சித் தனது மனக்குறையைப் பாடுகிறாள்.]

**மங்களம் :** முத்தங் கொடுக்கின்றேன்—கிளியே
முக்கனி யூட்டுகின்றேன்—என்
சித்தத்தைக் கொள்ளைகொண்டான்—இருக்கும்
திசையைச் சொல்லடியோ !

வீதி யிருக்குமிடம்—கிளியே
விளக்கிருக்குமடி—என்
ஜோதி யிருக்குமிடம்—கிளியே
சுத்தம் இருக்குமடி !

பால சூரியனில்—கிளியே
பார்த்தேன் அவன் முகத்தை.
கோல முழுமதியில்—அவனே
குளிர் நகை புரிந்தான்.

கார்மழை வானத்திலே—அவனே
கருணை காட்டிவந்தான்...
ஆர்வ மணாளனடி கிளியே—என்
அன்புக் கடவுளடி...!
காலைப் பதுமத்திலே—கிளியே
கண்களைக் காட்டுகின்றான்.
மாலை மலர்களிலே—எனக்கவன்
மாலையைச் சூட்டுகின்றான்...
மாவணை முல்லையைப்போல்—கிளியே,
மார்பினில் ஆருயிர்போல்
பூவனம் ஒன்றினிலே—கிளியே,
புல்லியென் னுட்புகுந்தான்!
எங்கவன் போனானோ—கிளியே
என்னை மறந்தானோ?
செங்கனி வாய்திறந்தே—கிளியே நல்ல
செய்தி சொல்லாயோ?

[வருதல் மில்லர் தம்பதிகள், அப்துல்லாகான்.]

**திருமதி மில்லர்:** நல்ல செய்தி... நல்ல செய்தி...
அன்பு மலரே... ஆசை ஜோதி......!

**மங்களம்:** எங்கேயம்மா? எங்கே? எங்கே?
இருக்கிறாரா? என்னையும் மனதில்
நினைக்கிறாரா?...

**மில்லர்:** நிம்மதியாயிரு!
செல்வக் கிளியே, சேமம் வந்தது!

**திருமதி மில்லர்:** மகிழ்வாய், மகிழ்வாய் மங்களக் கிளியே!
உனது ஜோதி உலக ஜோதியாய்
யோக நிலைய ஒளியாய், உள்ளான்...
அன்புத் தொண்டுகள் அநேகம் செய்தான்.
அவனைச் சுற்றி அடியார் கணக்கிலர்.
பூரண யோகமும் பொதுநலப் பணியும்
புரிவார், அவர்க்கெலாம் உரிய தந்தை
ஜோதியே; அவனொரு தூய தாயை
எதிர்பார்க்கின்றான்... இதோ பார் கடிதம்...!

**மங்களம் :** [ஆவலாய்ப் படித்தல்]

" குருமணி மில்லர் திருவடி வணக்கம்...
யோக நிலயம் ஒன்று கண்டு
இகபர சாதனம் எல்லாம் செய்கிறோம்...
உள்ள பொருளை உள்ளே யுணர்ந்து,
உலகெலாம் அதுவே உள்ளதென் றறிந்து
தியானமும் தொண்டும் செய்யும் அன்பர்,
இங்கே கூடி இனிதுவாழ் கின்றார்...
தயவு செய்து தாங்கள் ஒருமுறை
இங்கே வந்து தங்கிட வேண்டும்.
மாதருக் கிங்கே மங்கள விலாசம்
அமைந்து நடப்பதை அட்துல் அறிவார்.
அதனை நடத்தவோர் அன்னை வேண்டும்.
கல்வி கேள்வியும் கற்பொ ழுக்கமும்,
யோகப் பற்றும், உள்ள சக்தியைத்
தாங்கள் வளர்ப்பதாய்ச் சாற்றினார் அப்துல்.
அத்திரு வுடனே அவசியம் வருக!

தங்கள் அன்புத் தனயன்,
**ஜோதி.**

**மில்லர் :** கடிதம் எப்படி?

**மங்களம் :** கடித மாயிது?

இதுவே என்னுயிர்...இதுவே ரக்ஷகன்!
இருளை நீக்கிய ஜோதி யிரவி!

சூழிருள் கெட வுதித்த
சுடர்மணி போலும்! என்னை
ஆழியைக் கண்ட தேவி
யாக்கிய தூது போலும்!

பாழிடர் துடைக்க வந்த
பகவனின் கருணை போலும்!
வாழிய ஜோதி யன்பு
வாழிய உலக மெல்லாம்!

கலங்கிய மனத்தினுக்குக்
கருணையைப் பொழிந்த ஜோதி,
நலஞ்சொலி எனது வாழ்வை
நல்கிய தெய்வ ஜோதி,

இலங்குயிர் உலகத் தாய்போல்
என்னையே கருதும் ஜோதி,
துலங்குக சுத்த யோக
ஜோதியிவ் வுலக மெல்லாம்!

[கடிதத்தை மார்பில் ஒற்றி வணங்குகிறாள்.]

மில்லர் : கடவுள் உன்னைக் காத்தார்...மகளே!

மங்களம் : எல்லை யில்லாத் தொல்லைக் காட்டில்.
ஏங்கித் தவித்தேன்...என்னையே...ஓடும்
ஆற்றிற் கரைத்தேன்...அன்பர் கொணர்ந்தார்;
அன்னையும் அப்பனும், அன்புள சுற்றமும்
அருமை பெருமையும் யாவுமாய் நின்ற
திருமிகு மில்லர், திருமதி மில்லர்
இருவரால் உலகம் இன்பவீ டானது...
தாயே தந்தையே, தங்கள் கருணையால்
சேயேன் பிழைத்தேன், சிந்தனை யெல்லாம்
ஜோதியி னிடமே சொக்கி யிருந்தேன்,
வானும், கதிரும்; மதியும், மழையும்,
கானும் மலையுங் கடலும், உலகும்
உயிரும் ஜோதியின் உண்மையே பேசின.
அன்பே உருவாய் அமைந்த பெரியீர்;
ஆருயி ருக்குத் தாரக மான
ஜோதிக் குங்கள் கருணையைச் சொல்லும்
அந்நாள் வருமா?

மில்லர் : வந்தது, மங்களம்!
இவரே அப்துல்; இவராலே தான்
இத்தனை இன்பமும் எய்திய துனக்கு.

மங்களம் : வணக்கம் வணக்கம், வாழிய அப்துல்.
இன்பம்! இனிமேல் இடர்வராதே?

அப்துல் : இடர்கள் விலகின—படர்கள் பட்டன.
மானே, உன்னை வருத்திய புல்லர்
தாங்கெட் டழிந்து தற்கொலை யானார்.
சுந்தரி பேய்போற் சுற்றித் திரிகிறாள்...
பிச்சை யெடுத்துப் பிழைக்கிறாள பேதை.

ஒற்றர் அவளையும் ஒருநாள் பிடித்துக்
கடுஞ் சிறையிடுவர் ; காதகி அவள்மேல்
கொலைக் குற்றங்கள் குவிந்தன...வினையால்.

**மங்களம் :** எந்தை எங்கே ?...எனது ஜோதித்
தந்தை எங்கே...தயைமிகுந் தோழி
வள்ளியும் கண்ணனும் வருவாரோ மீண்டும்?

**அப்துல் :** திருக்கா ளத்தியில் சிவனார் இருந்தார் ;
பரமன் அருளால் பைத்தியம் தெளிந்தது.
முருக னாரும் மூத்தமிழ் போற்றி
அங்கே யிருக்கிறார்...அவர்கள் இருவரும்
உயர்தவப் பெரியராம் யோக முனிவரைக்
கண்டு குருவாய்க் கொண்டு சாதனம்
செய்து நல்ல சித்தியும் பெற்றார் !

**மங்களம் :** அறிவே பேசும் அருமைப் பாட்டி...?

**அப்துல் :** பாட்டி மகனுடன் பக்தி செய்கிறாள்,
கவலை யற்றுக் காலம் கழிக்கிறாள்.

**மங்களம் :** அவர்களைக் காண்பமோ ?

**அப்துல் :** காண்போம் அவசியம் ?

**மங்களம் :** எங்கே காண்போம்? எப்போது காண்போம்...?

**அப்துல் -** இதோ புறப்படுவோம்...இன்ப ஜோதி
நிலவும் யோக நிலயம் செல்வோம்.
அங்கே அனைவரும் மங்கள மாகச்
சேர்ந்து வாழ்வோம்...சிறந்து வாழ்வோம்.

**மங்களம் :** அப்பா அம்மா அன்பு மலருமை
எப்படிப் பிரியும்? என்னுடன் வருவீர் !

**மில்லர்கள் :** வருகிறோம் கண்ணே ; வருத்தப் படாதே !

**மில்லர் :** கண்ணன் வள்ளி காயம் ஆறினர்.
அவர்க ளுடனே அன்பரெல லாரும்
வருவீர் ! அங்கே மணவினை காண்போம்...

[மணியோசை]

**திருமதி மில்லர் :** ஆண்டவன் சுபமணி அடித்தான் வாரீர் !
நன்றி செலுத்தி நடப்போம் வடக்கே...

மங்களம் : [கிளியைக் கொஞ்சி]

உள்ளங் குளிர்ந்ததடீ—கிளியே
ஊக்கம பிறந்ததடீ—இன்ப
வெள்ளம் வளர்ந்ததடீ—ஜோதி
விளக்க மானதடீ !]

[எல்லாரும் செல்லல்]

## ஐந்தாங் காட்சி

[தியான மந்திரம். ஜோதிமுன் மங்களம் வணக்கமாக நிற்றல்.]

ஜோதி : குருவரு ளாலே, அன்பர்
குலத்தினைத் தாங்குந் தெய்வத்
திருவரு ளாலே, தீமை
தீர்ந்தது ; நன்மை கண்டோம் ;
இருவரும் காலத் தேரில்
இனி அருள் வழியிற் செல்வோம் :
வருகநீ எந்தாய் ! சக்தி ;
மங்களத் திருவே வாழி !

கனவோ நனவோ...காலத் தேரின்
வடத்தை யிழுக்கும் வல்வினைக் குலங்கள்
எத்தனை இடர்களை எப்படித் தாண்டி,
நம்மை மீண்டும் நலமுறச் சேர்த்தன...
அப்துல் லாவும், அருமை மில்லரும்,
வள்ளியும், கண்ணனும், வாய்மைச் சீனுவும்,
சொன்ன வெல்லாம் சொற்பனம் போன்றன !
நண்ப ரெல்லாம் நலமுறக் கூடினோம்...
அன்புக் குலமாய் அருளில் வாழ்வோம்.

மங்களம் : மனக் கோயிலிலே தினமும் துதித்தேன்.
முருகன் கருணை முற்றிய தின்று.
இணைபிரி யாமல் இனிநாம் வாழ்வோம்...

ஜோதி : கற்புக் கரசியே, அற்புதத் தேவியே
அன்றுனை ஆசை மலரால் வணங்கினேன்.
காதற் கோயிலில் வைத்துக் கருதினேன்...
யோக முனிவரால் உள்ளந் திறந்தபின்

உன்னுள் சக்தி ஒளிரக் காண்கிறேன்.
சாரதா ஹம்ஸர், சங்கரர் சாரதா,
போலநாம் இருவரும் புனிதராய் வாழ்வோம்,

**மங்களம் :** உபசாந் தத்தில், யோகக் கலப்பில்,
உமையே சிவமென உபாசனை செய்து
மாசற வாழும் மகிழ்வே போதும்.

**ஜோதி :** மங்களம் எனது மாதா வாருக...!
மங்களம் நிலய மாதா வாருக...!
மங்களம் தீனர் மாதா வாருக...!
மங்கள விலாசம் மங்களம் பொங்குக...!

[வருதல் அப்துல், மில்லர், கண்ணன், வள்ளி, சீனு முதலியோர்]

**எல்லோரும்:** வாழ்க ஜோதி மங்களம் வாழ்கவே!

**ஜோதி :** அன்பு மணிகள் அனைவரும் வருக!
புகல் கொடுத்த புண்ணிய மில்லர்கள்,
வீரர் அப்துல், உண்மை விரதம்
பூண்ட கண்ணன், புனிதை வள்ளி.
திறமிகு சீனு, செய்யநல் லன்பர்
வருக! வாழ்க ஒருகுல மாகவே!

**மில்லர் :** ஜோதி, உனது தொண்டுகள் வாழ்க!
சுருக்க மாக சுவர்க்க ராஜ்யம்
இங்கே விளங்கும் இன்பங் கண்டேன்.
எனது முதுமையும், எனது பத்தினி
வாழ்வும் இங்கே வளர்கவுன் பணிக்கே.
மங்களம் எமது மகளே யாவாள்.
எங்களுக் குள்ள இருபது லட்சமும்.
அவளுக் களித்தோம்.

**ஜோதி :** அன்பு வாழ்க!
தாயும் தந்தையும் தமரும் அனையீர்,
சாதி மதமெனும் சச்சர வின்றி,
இந்து கிறிஸ்து இஸ்லாம் என்ற
பேதமும் இன்றிப் பொருள் வெளியில்
ஒற்றுமை யாக உலகெலாம் வாழலாம்
அத்தகை வாழ்வு சித்தி பெறவே,

யோகமும் தொண்டும் உண்மையாய்ச் செய்வோம்...
கல்விப் பணியை மில்லர் நடத்துக!
திருமக ளுடனே திருமதி மில்லர்
மங்கள விலாச மாதரை நடத்துக...!

**மில்லர் :** பாரத முனிவரின் பரமாத்ம ஞானம்...
பயிலவும் விரும்பினேம்...

**ஜோதி :** பயிலுக நன்றே...
இங்கே யோகம் எல்லார்க் கும்பொது.
வாழ்வே யோகம் ; யோகமே வாழ்வு.
கிழக்கொளி யுடனே மேற்கில் வளரும்
நல்ல தொழில்களும், சுவயந் திரங்களும்,
இங்கே நாட்டவே யினிசீர் நல்கும்,
பொருளெலாம் பயனும்...புலவரைக் கொண்டு
இயந்திரக் கலைகள் இருவரும் வகுத்து
நடத்திட வேண்டும்...

**மில்லர்கள் :** ஆஹா நடத்துவோம்...
மின்சா ரத்தால் வெற்றி யுடனே
பலபல தொழில்கள் பயிற்றலாம் இங்கே...

**ஜோதி :** கிழக்கின் ஞானமும் மேற்கின் சக்தியும்,
இணைந்த வாழ்வே இனிவரும் வாழ்வாம்...

**அப்துல் :** அந்த வாழ்வே அடியேன் விருப்பமும்...
நிம்மதி யாக நிலயம் சேர்ந்து.
சோதிக் காகத் தொண்டு செய்வதே
எங்கள் விருப்பம்...

**எல்லாரும் :** இனிய விருப்பம்...

**ஜோதி :** ஞானமும் வீரமும் நாட்டிற் கழகாம்.
ஒவ்வொரு மனிதனும் உலகம் மதிக்க
வீர விளக்காய் விளங்க வேண்டும்...
அந்தப் பயிற்சி அப்துல் தருக!

**அப்துல் :** ஏசுவின் தியாகமும் இஸ்லாம் உடலும்,
வேதாந்த உள்ளமும், வேண்டும் நமக்கு.
இரும்புத் தசைகளும் இதயக் கருணையும்
இருக்க வேண்டும்...இதுவென் சம்மதம்,

**கண்ணன்:** எங்கள் மதமும் இப்பொது செறியே...
செத்துப் பிழைத்தோம்...திருத்தொண் டிற்கே.
வள்ளியும் யானும் இங்கே வாழ்வோம்...
மதுரைச் செல்வமும் வந்து சேரும்
அப்புவும் புண்கள் ஆறி வருவான்.

**ஜோதி:** கருணைக் கடவுளே, கதிரொளி காட்டினை;
இழந்த கண்ணை ஈந்தனை மீண்டும்;
மறைந்த மலரை வளம்பெற வளர்த்தாய்...
எல்லாம் உன் செயல்...எங்கும் உன்னருள்
சின்மய குருவாய் என்னையாட் கொண்டாய்...
குருவடி நிழலில் அருட்பணி புரியும்
திருவே தாராய்...

[வருதல் தொண்டர்]

**தொண்டர்:** தேசிகர் வந்தார்!

**ஜோதி:** இமயம் சென்ற இறைவர் வந்தார்.
யோக முனிவர் உள்ளன் பருடன்
இங்கே வருகிறார்...மங்களச் செய்தி!
இறைவனை எதிர்கொண் டழைப்போம் வாரீர்...!

[எல்லோரும் எழுதல். வருதல் **யோக முனிவர், முருகனர், சிவனர், வேதாந்தப் பாட்டி.**]

**எல்லோரும்:** போற்றி, போற்றி, குருவே போற்றி!

**ஜோதி:** வருக வருக குருமணி நாதா!
எம்மையாட் கொண்ட இறைவா வருக!
அரியணை அமர்ந்தெமை ஆண்டருள் புரிக...!

[**யோக முனிவர்** பீடத்தில் அமர்தல்.]

**மங்களம் :** குருவே வணக்கம்...அருளே வணக்கம்.
வணக்கம் அப்பா...வணக்கம் பாட்டி...

**எல்லோரும்:** ஜோதி மங்களம் சுபமாய் வாழ்க...!

**சிவனர் :** குருவரு ளாலே திருமிக வாழ்க!

**பாட்டி :** பரம ஞானப் பரிதிபோல் வாழ்க...!

**முருகனர் :** செந்தமிழ் முருகன் சீர்த்திபோல் வாழ்க!

[வருதல் சுந்தரி ; பஞ்சைக் கோலத்துடன்]

**சுந்தரி**

பஞ்சபூத வுடலிற்
பசியொன்று துளைக்குதையா
கஞ்சி கொடுத்திடுங்கள்
கருணைவான்களே நல்ல
தருமவான்களே...!

**பாட்டி :** ஐயோ சுந்தரி, அசட்டுப் பெண்ணே!
இப்படி யாநீ இழிந்து போனய்!

**சுந்தரி :** ஆஆ! இங்கே அனைவரும் என்னவர்.
கணவரே, கணவரே காலில் விழுகிறேன்.
மன்னிக் காதீர்...என்னைக் கொல்வீர்!
மாமீ, உங்கள் வார்த்தை பலித்தது...
மங்களம் மங்களம் மாசறு மங்களம்,
புனித மங்களம், புண்ணிய மங்களம்....
"நாயே போ!" என வாய்மொழி சொல்லி
உன்னைப் படுத்திய இன்னலுக் காக
என்னைக் காலால் எட்டி மிதிப்பாய்.
மகா சனங்களே, மமதை யாலே
காமத் தாலே, கட்டு மீறி
இக்கதி யானேன்...என்னைப் பார்த்துப்
பாருல கெல்லாம் பாடங் கற்க!
கணவனுக் கடங்கிக் கற்புடன் வாழ்வதே

மாதருக்கு மங்கல வாழ்வாம்
என்பதை யறிக...ஐயோ இனிநான்
இருக்கவும் வகையிலே; இறக்கவும் வகையிலே...
என்ன செய்வேன்...எங்கே செல்வேன்...?

**மங்களம் :** சுந்தரீ என்னிடம் சுகமா யிருப்பாய்...
பட்டுத் திருந்தினுய்...பாவம் போக
முனிவரைச் சேவி...!

**சுந்தரி :** முனிவா வணக்கம்!
தயவு செய்தொரு சாபம் வைத்து
இவ்வுடல் வீழவே! இரக்கங் கொள்வீர்,
பாவி பஞ்சமா பாதகி யானே;
இங்கே இருக்கவும் இதயம் நடுங்குதே!

**அப்துல்லா:** அம்மா உனக்குநான் அழகான இடத்தைக்
காட்டுகின் றேன்வா...காடும் மேடும்
உன்னைத் தேடி உலைந்தனர் ஒற்றர்;
உன்மேல் வழக்குகள் உள்ளன...வாராய்
தொண்ணூற் றெட்டு...தோடா மாட்டு...!

[ஒரு போலீஸ்காரர் எழுந்து சுந்தரிக்கு விலங்குமாட்டிக்கொண்டு செல்கிறுன்.]

**ஜோதி :** அப்துல், அவளைக் காப்ப தெப்படி?

**அப்துல்:** சட்டம் அவளைத் தண்டனை செய்யும்,
ஐந்து கொலைகள் அவள்மேல் உள்ளன
காதற் கொலைகள்; கடுங்கொடுங் கொலைகள்,
அவளை மறப்பதே அன்பர் கடமை.

**பாட்டி :** என்ன செய்வோம் எல்லாம் வினைப்பயன்!
வினையும் நிழலும் விடாது மனிதனை.
பூர்வ வாசனை புத்தியைக் கெடுத்தது.
அறிவைக் கேட்குமா அகங்காரம், ஹூம்!
அவரவர் வினையை அனுபவிக் கின்றனர்.
முக்குணப் போரில் சிக்காச் சாட்சியாய்
இருக்கும் தன்னை இதயமென் றறிந்து,
பார்ப்பறப் பார்ப்பவர் பாக்கிய வான்கள்.

**எல்லாரும்:** அந்தப் பார்வை வந்தால் இன்பமே!
குருவரு ளாலே பெருகுக ஞானம்!

**யோக**
**முனிவர்:** ஓம் சுத்தோஹம்; ஹம்ஸஸ் ஸோஹம்!
அதுவே உண்மை; அன்பு மணிகாள்!
கைலை சென்று காளத்தி வந்தோம்.
அங்கே சிவனும், அம்மையும், முருகனும்
பக்தியும் ஞானமும் பணியும் போலே
சேர்ந்தனர், ஜோதி செய்யும் தவமும்,
புண்ணிய வினையும் புகழும் கேட்டோம்.
இன்று நேரே இங்கே பார்த்தோம்,
ஞான புரியை வானர சாக்கி,
தெய்வ வாழ்வைத் திருவுற நாட்டி,
மடமையும் அடிமையும் வறுமைப் பிணியும்
தீர்த்தெல் லாரும் தியான பாராய்
அப்பர் போலே அன்பும் பணியும்,
அருட்சுடர் போலே ஆன்ம நேயமும்,
பொலியும் யோக நிலயம் போற்றினன்,
அவனே இனிமேல் அரசன் இங்கே.
அவனது மங்களம் அரசி யாவாள்.
ஊரும் செல்வமும், யோக சக்தியும்
இருவ ருக்கும் ஈந்து முடித்தோம்,
சுத்த முத்தனைச் சுகாதீ தத்தில்
ஞான மலைக்குகை மோனம் வகித்தே,
இறுதி நாட்களில் இருக்க விரும்பினோம்.
பூரண யோகமும் சுத்த போகமும்,
தய்த்துக் கதிரும் சூரியனும் போல்,
வாழ்க ஜோதி! மங்களம் வாழ்க!

**எல்லாரும்:** சுபம், சுபம், ஓங்குக ஜோதி மங்களம்!

எல்லோரும் : மங்களம் ஜய மங்களம் சுப மங்களம்
ஜோதி மங்களம்...
மங்களம் சச்சி தானந்த பர
மாத்மனே சிவமங்களம்—

எவ்வுலகிற்கும், எவ்வுயி ருக்கும்
இதய ஜோதியைக் காட்டியே...
திவ்ய ஜீவனம் ஈந்திடும் தவ
சித்தனே பரி சுத்தனே...

பக்தி ஞான தியான கர்மப்
படிகளால் பர மானந்த
முத்திக்கே வழி காட்டிடும் முனி
ராஜனே திவ்ய தேஜனே.

சீலமும் தவ யோக சித்தியும்
ஜீவ சேவையும் ஓங்கவே
ஞால வாழ்வெனுங் காலத்தேரை
நடத்துவாய் சுத்த சக்தியே!

[ஆலத்தி எடுத்தல்]

ஓம் சுத்த சக்தி

THE MADURA TAMIL...

PRINTED AT THE SUNDAY TIMES PRESS, MADRAS—6